292

SRI SATHSAMBHASHINI.

BY

SWAMI OM PRAKASH:

NILAGIRI:

R6
N15
56106.

ஓம்.



மூவுலகரசிமலை, நீலகிரி. (8,380 feet.) Mukurti Peak, Nilagiri.

உ

ஓம்

ஸ்ரீ ஸத்குரு துணை

ஸ்ரீஸத்ஸம்பாஷிணி.

OFFICE OF THE REGISTRAR ... 28 APR 1910 MADRAS.

ஸ்ரீ ஓம் பிரகாச சுவாமிகள்,

நீலகிரி.

R6
N15

56196

உ

ௐ

ஸ்ரீ ஸத்குரு துணை

ஸ்ரீ ஸத்ஸம்பாஷிணி.

இஃது

நீலகிரி உதகமண்டலம் திருக்காந்தல்

ஸ்ரீ தக்ஷணாமூர்த்திகரராலயம்

ஓம் அசலபீடம் உலோகோபகார வித்தியாதான சபை

ஸ்தாபகர்

ஸ்ரீமத் ஓம் பிரகாச சுவாமிகள்

சுருதிப்பிரமாண

பிரஸ்நோத்தரமாக வரைய

ஷை நீலாசலம்

உ. வி. சபையின் அங்கங்களும் மற்ற அன்பர்களும்

புரிந்த திரவிய சகாயத்தால்

முத்திரிக்கப்பட்டது.

ஸ்ரீ சரஸ்வதி ஆச்ரமம்.

கலியுகாதி 5016 : ஆநந்த ௵ கும்பரவி.

1915

Copyright Registered.]

[விலை ரூபா 1.

R6
N15

MADRAS: THE VAIJAYANTI PRESS,
32, MOUNT ROAD.

உ

ஓம்.

விஷய சூசிகை.

	பக்கம்.
முகவுரை	v
விக்ஞாபனம்	xi
மஹாத்மியம்	xiv
சிறப்புப்பாயிரம்	1
ஸ்ரீ குருஸ்தோத்திரம்	5
பிரஸ்தாவனை	12
உபோத்காதம்	14
ஓங்காரம்	21
ஸத்ஸம்பாஷிணி மங்கலம்	23
நீலகிரி வர்ணனை	24
பிரதமதின சம்பாஷணை	29
பௌர்ணிமி தீக்ஷோபதேச சம்பாஷணை ...	97
நிருவாண தீக்ஷானுக்கிரக வல்லபம் ...	135
பொதுப் பிரசங்கம்	161
வாழி	168
பிழைதிருத்தமும் - சிறிது விளக்கமும் ...	173

PREFACE

BY

M. R. Ry., Rao Sahib H. Krishna Sastriyar,

Assistant Archæological Superintendent for Epigraphy.

IN religious India, where enquiry into the mysterious relation between God and man, whether rightly or wrongly instituted, forms the subject matter of every day topic among all classes of varying degrees of social status, it is no surprise to find that the major portion of the literary output of that ancient land deals with one aspect or another of the philosophy of the soul. As a necessary corollary also, it follows that every average Indian is practically convinced of the illusive nature of this material world with its pains and pleasures, its hopes and disappointments. Still honest philosophers have not been slow to assert that the evolution of the soul has to be realised on this self same monotonous world of life and death. To resist the temptations

of evil, to suppress by a powerful will the momentary aberrations of the mind, brought about by the thousand and one impinging events of the day, to maintain an equilibrium, in spite of stormy circumstances, and, in a word, to tower high in strength as against the weakening influences of human nature, is undoubtedly possible, if at all, only in this span of human existence properly utilized, and not in the superhuman state of a *deva* or a *pitre*, known only to Hindu cosmology. A student of philosophy, therefore, cannot possibly ignore the position of man on this earth, nor forget, for a moment, to enquire how far his connection with it helps him on in advancing towards the contemplated goal. It must be admitted that, while the main object of the Vedanta—'the aim of knowledge'—is the liberation of the embodied soul, or rather, its expansion and ultimate absorption into the All-pervading Para-Brahmam, the means generally adopted for attaining such a noble end has not always been above criticism. Uprightness in word, thought and deed, consistently, however, with the traditions of the past, the requirements of the present and the prospects of the future, search-

ing enquiry in a right, sincere, and scientific spirit into the true nature of things and the logical application of the thus deduced results to the daily experiences of life, are accepted by all sound thinkers to be the mainstay of the Vedanta. But how many, it may be pertinently asked, have avowed themselves to these first principles of the science of knowledge? Do we not know that, at the present day, in India, all knowledge acquired in the name of philosophy is running into waste? Have not the so called adherents of the different shades of philosophical enquiry, as they now exist, utterly ignored the very means in carping and quarrelling over the end? Have not many of our brilliant intellects seceded from us out of sheer despair and disgust and have actively or passively supported a propaganda which is opposed to our historical traditions and foreign to our national instincts? To rally these disintegrating forces, to revive the Vedanta once again on healthy and practical lines, and to infuse an altogether fresh life into the spiritual side of our nature, as reflected in the material, is a desideratum which the patriotic leaders of Indian progress could not and must not ignore.

The Lôkôpakâra Vidyâdâna Sabha of Ootacamund presided over by the cultured *Swami Om Prakas*, has been up and doing something in this direction. With a handful of earnest pupils, the Swami is exerting himself to bring knowledge into the very doors of the needy. His latest laudable attempt is to offer to the interested public a little Tamil book '**The Satsambhashini**' in which is given, in the form of a conversation between a layman and the adept, the Swami's accumulated experience of a little more than 15 years of an ascetic life and a devoted study of the Vedanta. Following closely the famous Panchadasiprakarana of Vidyaranya, the Swami first proves in his volume the continuity of the "*Seer*" in the various phases of human activity; next the aphorisms which declare the oneness of the "*Seer*" with the omniscient and the omnipresent *Parabrahmam* are satisfactorily explained. The hypothetic 'Illusion' which exists only by permission, as it were, receives its due share of deliberation. The description of the Nilgiris and its surroundings with which the book begins is rather learned; but shews the perfect command of the writer over the language which he so artistically wields.

Again, the exhaustive quotations, the apt references to Upanishads, the enlivening insertion of logical *nyâyas* and the cunning arguments leading the enquirer step by step even to the extreme heights of philosophy, are in themselves sufficient proof that the book now placed in the hands of the earnest students, is not one which has been produced to court notoriety but a sincere attempt at collating the valuable results of careful study and deep conviction.

On the whole the work '**Satsambhashini**' deserves every praise and the *Swami Om Prakas* is to be highly congratulated for having demonstrated to the world what sincere devotion and unswerving zeal could do in the matter of spiritual insight.

OOTACAMUND,
BELMONT,
5th February, 1914.

H. KRISHNA SASTRI

Om!

I had the opportunity of going through **Sat-sambhashini**, one of the productions of the Kandal Mutt, Ootacamund. It reveals to the reader the useful work of the Mutt with Sadhu Omprakasa Swami as its pivot, towards the uplift of man for attaining his goal—Moksha.

Anandasrama,
COONOOR,
3—2—15.

SIVADHYANANANDA.

OPINION

OF

DR. M. C. NANJUNDA ROW, B.A., M.B. & C.M., F.T.S.

SASI-VILAS,
Mylapore, Madras,
India, 14th April, 1915.

I have great pleasure in stating that I got the work "**Satsambhashini**" read to me and I found it **a very instructive and practical discourse on many knotty problems in Vedanta**. I know *Srimat Om Prakasa Swamy* personally and I have the greatest respect for him and his enthusiasm in spreading the great truths of Vedanta amongst the masses; and this small work is another of his efforts to spread the same truths all over the Tamil knowing world. The many quotations from many practical works on Vedanta and apt references to various Upanishads which go to clear the doubts from the minds of sincere enquirers after Truth, are in themselves praiseworthy, and show that **the book is not written for light reading** but is a sincere attempt at collating the varied experiences and the results of careful study and deep conviction of the Swami.

The Swami deserves every praise and **a careful study of the book is bound to open the eyes of the readers to a knowledge of the Great Reality**. I wish the Swami every success in all his laudable doings.

M. C. NANJUNDA ROW.

சென்னை ஹிந்து தியாலஜிக்கல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதரும், லோகோபகாரிப் பத்திராதிபரும்; வேதாந்த - தர்க்க - இலக்கிய - இலக்கண போதகாசிரியருமாகிய

ஸ்ரீலஸ்ரீ - கோ. வடிவேலு செட்டியாரவர்கள்

அபிப்பிராயம்.

நீலகிரி உதகமண்டலம் திருக்காந்தல் ஸ்ரீ தட்சிணாமூர்த்திகராலயம் ஸ்ரீமத் - ஓம்பிரகாச சுவாமிகள் இயற்றிய ஸ்ரீ ஸத்ஸம்பாஷிணி யென்னும் ஞான சாஸ்திரத்தின் முக்கியமான பாகங்களை யான் படித்துப் பார்த்தேன். இது படிக்குந்தோறும் சித்த சாந்தியைத் தருவதாய் ஞானசாஸ்திரங்களின் உள்ளுறைப் பொருள்களை நன்கு விளக்குவதாய் அமைந்திருக்கின்றது. வேதாந்த சாஸ்திரங்களைத் தக்கார் வாயிலாகப் படித்துச் சிதாநந்த நிலையினை அடைய முயலுகின்ற ஒவ்வொருவரிடத்தும் இஃது இன்றியமையா திருத்தற் குரியதாம்.

இங்ஙனம்:

அன்பன்,

கோ. வ.

8-4-15
கோமளேசுவரன்பேட்டை,
சென்னை.

ஓம்.

விக்ஞாபனம்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு." எனத்

திருவள்ளுவ நாயனார் பிரதிக்ஞை செய்துள உபரஞ்சக வஸ்துவின் உத்தேசம் இலக்கணம் பரீக்ஷைகளைச் சுரோத்திரிய பிரஹ்மநிஷ்ட தேசிகர்பால் கர்ணஷட்குளியைச் செலுத்தி ஏது திருஷ்டாந்தம் உபநயம் நிகமனம் முதலிய உறுப்புக்களான் மறைப்பிலாமை வாய்க்கப்பெற்ற பிரஹ்மவேத்தாக்களுக்குப் புரத்ரய உபகித ஜீவன் விசேஷாகமாயிருக்க, ஸ்தூல திருஷ்டியிலுண்டாகும் விமுக்தரின் திருப்பாத பத்மங்களை நிராகாரசிரமகுடமாய்அணிந்தாட்படச்சிரமணராயுளோம்.

ஸ்ரீஸத்ஸம்பாஷிணியை முத்திரிக்கக் கருதியஞான்று முன்வந்து திரவிய சகாயம்புரிந்த மோக்ஷப்ரகாசம் ஸ்ரீமான் வெங்கடாசல முதலியார், ஸ்ரீமான் S. R. துரைசாமிமுதலியார், முதலிய ஆப்தர்களுக்கு நயவிநயம்.

'ஸ்ரீஸத்ஸம்பாஷிணி' சாஸ்திரத்திற்கு பிரஹ்மவித்தியா எஜஸ் சதோதயமாக நிலவ ஆங்கிலேய பாஷையில் முகவுரை (English preface) சூடியவரும், உதாரகுண புருஷோத்தமருமாகிய இராவ்சாஹிப் பிரஹ்மஸ்ரீ H. கிருஷ்ண சாஸ்திரியார் அவர்கள் உ. வி. சபையின் அபிவிருத்தியை நாடி உதவி புரிந்து

வரும் அன்பிற்காக என்றும் சபையின் நன்றியறிதலான வந்தனை.

'ஸ்ரீ ஸத்ஸம்பாஷிணி' நூல் அச்சுயந்திர சாலையில் முத்திரிக்கப் பிரவேசித்ததுமுதல் அக்ஷரபூஷணலங்கிருதமாகி அரங்கு விஜயமாம்வரை பார்வையிட்டுச் சமயோஜித யுக்திகளையுமியம்பிப் பண்டிதர்களும் சந்தோஷிக்கச் சிரமமெடுத்துக்கொண்டவரும், உ. வி. சபையின் அபிவிருத்தியை நாடுபவருமாகிய, நீலகிரி - குன்னூர் ஆநந்தாச்சிரம நிவாசர் பிரஹ்மஸ்ரீ சிவத்தியானநந்தயோகி - சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கட்கு மிக்க நன்றியறிதலான வந்தனை செய்வதெங்களது கடமை.

மற்றும், 'ஸ்ரீ ஸத்ஸம்பாஷிணி' நூல் அச்சிட்டு முடிவுபெறுவதனிமித்தம் உதவிபுரிந்த அன்பர்கள் அனைவருக்கும் சத்துவகுணபக்தி மேன்மேலும் பெருக ஸ்ரீ சற்குரு திருக்கடாக்ஷ முண்டாகுக.

'ஸ்ரீ ஸத்ஸம்பாஷிணி' வழிநூல் வேண்டியவர்கள் இதன் விலை ரூபாய் ஒன்றுக்கு, ஓம் அசலபீடம், உலோகோபகார வித்தியாதான சபை, ஸ்ரீ தக்ஷிணமூர்த்திகராலயம், திருக்காந்தல்-உதகமண்டலம், நீலகிரி: என்றாவது, ஸ்ரீமான்-S. R. துரைசாமிமுதலியார் *Head Clerk, Race Club, Mount Road, Madras:* என்றாவது எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

இப்படிக்கு
உ. வி. சபையார்,
திருக்காந்தல் - நீலகிரி.

ஓம்!

நீலகிரி - உதகமண்டலம் - ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திகாராலய
ஓம் அசலபீட உலகோபகார வித்தியாதான சபையாருக்கு
ஸ்ரீ வித்தியாரண்ய தேவ சங்கராச்சாரிய சுவாமிகள்
வேதாந்தமரபு ஓம் அசலபீடம்
ஸ்ரீ யோகீந்த்ரர் ஓம் பிரகாச சுவாமிகள்
திருப்பாதரேணுவும்,
பெங்களூர் - சூளை சத்திகுஹாசிரமம்,
பிரஹ்மவித்யாதான சபை ஸ்தாபகரும் ஆகிய

ஸ்ரீமந் - ச. மூ. நாராயணசாமி யெனும்

நிச்சலப்பிரகாசர்

விநய நிருபம்

ஓம்! ஸ்ரீல ஆப்தர்காள்! நீலாசலத்தில் சீலாசன ரான ஸ்ரீ ஓம் பிரகாச ஸ்வாமிகளுடன் குருகுலவாசமா யிருந்து பிரஹ்மவித்தையால் கைவல்ய நவநீதத்தை யுண்டு களித்து, எம்போலியரும், புனரபி ஜனனம் புனரபி மரணம் என்னும் தரங்கங்களையுடைய சம்சார சாகரத்தினின்றும் மோக்ஷமெனும் கரையைச் சேர்ந் துய்ய, நாவார்த்தியைப் போன்றுள ஸ்ரீ ஸத்ஸம்பா ஷிணியை பஹிரங்கஞ்செய்த காருண்யத்திற்குத் திரி கரண சுத்தியுடன் விநயஞ் சமர்ப்பிக்க உவந்துளேன். ஆச்சிரமத்திலுள்ள பிரபுக்களுக்குத் திருப்பிரணமம் :- ஓம்!

இங்ஙனம்
நிச்சலப்பிரகாசம்

ஓம்.

ஸ்ரீ சத்குருமயம்.

ஸ்ரீ ஸத்ஸம்பாஷிணி மஹாத்மியம்.

ஓம்! மிசிர கர்மத்தால் மானவ அங்கியைப் பூண்டுள ஆப்தர்காள்! மெய்ஞ் ஞானசிரியர் ஸ்ரீ ஓம்ப்ரகாஸ நாத் திருவடிப் பணியாளனுகிய இச்சிறுவன் ஸ்ரீ ஸத் ஸம்பாஷிணியைப்பற்றிய சில வியவகாரங்களைச் சங் க்ஷேபமாய் எழுதுவது வருமாறு:—

இந்நூலில் பிரதமத்திலுள்ள படம் 'மூவுலகரசி மலை' யினது. இவ்வெற்பு 'மூக்கறைமலை' யென்றும் 'மஹா கூர்டி' யெனவும் அழைக்கப்படுகிறது. நீல கிரியிலடங்கியுள்ள விசேஷித்த மலைச்சிகரங்களில் ஒன்ருகிய இஃது உதகமண்டலத்திற்கு மேற்கே சுமார் பதினறு மைல் தூரத்தி லிருக்கிறது. இதற்கு வண்டிப் பாட்டை கிடையா தாகையால், கால்நடையாகவும் குதிரைமீதேறியுமே செல்லவேண்டும். பனிக்காலத்தில் ஜலம் மட்டாகவும் மாரிகாலத்தில் பயங்கரமான பிரவாகத்துடனும் பாயும் சில காறுகளை, இவ்விடத்திற்கேகுங்கால், இடையிலே கடக்க நேரும். மழைக்காலத்தில் இவ்விடத்திற்குச் செல்வது கூடா

மைக்கு இஃதோர் காரணம். எக்காலத்தும் ஜனங்கள் இங்கு குடியேறியிரார்கள். பூமியைப் பண்படுத்துவதுங் கிடையாது.

மஹா சுத்தமான காற்று நிச்சப்தமாய் வீசும் இந்தஸ்தானம் சனி நீருடன் போதையை விளைவிக்கும் சைலோதகம் ஓம் ஓம் என ஜொலித்துக்கொண்டு சிறு கற்களின் மீது மோதியோடும் மலையின் வீழருவி பல பாயும் சிங்காரங்களை யுடையது. இவ்விடத்தே, மாயாற்றைக்கடந்ததும், என்குருமணி ஓம்ப்ரகாஸ் நாத் ஶாந்தி ஆச்சிர்மம் உளது; ஸ்ரீசுவாமிகள் இஷ்டம்போன்று விச்ராந்திக் கேகுமிட மிஃது: ஸ்ரீ சுவாமிகளது மாணவர்களும் அன்பர்களும் ஒவ்வொருகால் தொடர்ந்துசெல்வதுமுண்டு. சதானந்தமாகவே இருக்கச்செய்யும் இந்த ஸ்தானத்தில் உண்டாகும் சங்கற்பம் வியர்த்தமாவது அபூர்வம். இப்புத்தகத்திலுள்ள நீலகிரி வர்ணனையை வாசித்துப் பார்க்குங்கால் இவ்விடத்திய காக்ஷி விஸ்தாரங்கள் இத்தகைத்தென விளங்கற்பாலது. ஞானகாச நிஷ்டை அநுஷ்டானஞ் செய்வது போன்றே சாக்ரதாவஸ்தையிலும் இருக்கும். சுருக்கிச் சொல்லில், அங்கு சாதுக்களுடன் சிலதினங்கள் வசித்தால் பிரஜைகள் வாழும் ஊருக்குத் திரும்புவது அதிக துக்கமாகும், அழவேண்டியும் நேரும். இவ்விடம் நேர்ந்துள சில மஹிமைகளையும் அதிசயதிருஷ்டாந்தங்களையும் பஹிரங்கஞ்செய்ய இஜ்ஜீவன் அஞ்சுகின்றான்.

இரண்டாவது திருவுருவப்படம்: சிதம்பரம் ஸ்ரீமத் - ஏகாம்பர தேசிகரது. இவர் சிதம்பரம் வணங்காமுடி ஸ்ரீ முத்துவேல் பண்டாரம் ஸ்ரீமதி - சாந்தை அம்மை இவர்களது தவத்தி லுதித்தவர். சற்றேறக்குறைய நாற்பது வருஷகாலமாய் இம்மலையி லிருக்கின்றார். முன்னர் ஏழு தேயிலைத் தோட்டங் களுக்கு மேலதிகாரியா யிருந்தபோது, இவரை நீல கிரிக்கு விஜயமாகும் உத்தம சாதுக்கள் காண்பது வழக்கம். ஓர்கால் ஸ்ரீதியாகராஜசுவாமி யெனும் மஹான் மைசூர் கருக்கட்டாமலை யிலிருந்து வெளி யாகி வருங்கால் அவரைத் தரிசித்து அவரது திருவாக் கியமும் அவரால் வியாக்ர ஆசனமும் கொடுக்கப் பெற்றார். இல்லறத்தில் தாமரையிலைத் தண்ணீர் போலிருந்து சந்நியாசி ஆச்சிரமத்தையடைய ஆவலு டையவராயிருந்து, தமது மாதா நற்பதவியுற்றதும் அந் திய கடனை முடித்துப் புலியாசனத்தை அக்குளிலடக் கித் தண்டுகையேந்தித் தம் பத்தினி ஸ்ரீ இரத்தினம் அம்மணிகளிடஞ்சென்று, 'பற்றற்றுவிட்டது வெளி யேகச் சித்தம். உனதிஷ்டம் என்ன?' எனலும், ஸ்ரீ அம்மணிகளும் 'சுவாமி, முன்வைத்தகாலை பின் வைப் பதா? சுகத்தை நாடுவதே கிரமம்.' என்றியம்ப, இல்லந்துறந்து வெளிப்பட்டுப் பலவிடங்கட்குச்சென்று ஹிமயகிரி விசேஷங்களையும் தரிசித்தார். முன்னர் வைத்தியத்தில் நிபுணர், ஹட யோகியா யிருந்தனர். பிறகு வேதாந்தியாகித் தற்காலம் பரமஹம்ஸ அதி யாச்ரமத்தை யுடையவராயும், வெகுபேர் பைத்தியக்

கார ரென்றியம்பத்தக்க பாலர் உன்மத்தர் முதலான ஞான கோலத்தை யுடையவராயும், உலகமிருப்பதே அறியாத நினைவிற் சமாதியோடுஞ் சஞ்சரிப்பவராவர்.

மூன்றாவது படம் - ஸ்ரீமதி இரத்தினம் அம்மணி கள்: ஸ்ரீ சுவாமிகள் இல்லம் விட்டகன்று சிலதினங் களானதும் அம்மையார் சுவப்பனத்தில் ஓர் பெரியவர் தோன்றி 'அன்னாரகல உனக்கென்ன? நீயும் சந்நியா சினியாகுக' என நவிலக்கேட்டு, அவ்வாறே பொழுது விடிந்ததும் ஆபரணங்களை நீக்கி ஸ்ரீ சிவசுப்ரமண்யர் ஆலயத்திற்குச்சென்று, அங்ஙனேசிலதினங்களிருக்க, சென்ற ஸ்ரீ ஏகாம்பரதேசிகரும் அங்குவர ஒருவரை யொருவர் சந்தித்து குருசிஷ்யை பாவனையாகவிருந்து ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மடாலயத்தை உதயமாக்கியவர் கள். ஸ்ரீ தண்டபாணி மூர்த்திகரத்திற்குப் பூஜாதி களை நடத்திக்கொண்டு இனிது விளங்கும் ஸ்ரீ அம் மணிஸ்வாமிகள் அருள்வாக்குடையவர்கள்.

நான்காவது படம் - ஸ்ரீ சுவாமி ஓம் ப்ரகாஸ்நாத்: இராயவேலூர் ஸ்ரீமத் - கோபாலசுவாமிகளுக்கும்

ஸ்ரீமதி அமராவதி அம்மையாருக் கும் புத்திரராயுதித்துச் சென்னை யிற் கல்வியில் தேர்ச்சியடைந்தார். சிறுவயதிலிருந்தே சத்துவப் புசிப்பும் சாதுக்கள் நேசமும் பெற் று அரியசாஸ்திர ஆராய்ச்சி செய்து வந்தார். மாக்ஷிமை தங்கிய மைசூர் மாஹாராஜாவின்

அரண்மனையி லெழுதும் அலுவலிலிருந் தகன்று இற் றைக்கிருபது வருடத்திற்கு முன்னர் சந்நியாச ஆசிர மம் பெற்றவர். பாலருக்கு ஒப்பாகி சிறுவர்களையும் மஹா பிரபுக்களையும் சமரசதிருஷ்டியாய் நோக்கு பவர். கருணையைப் பெற்ற மக்களுக்கு இவர் அவதார புருஷர் என்பது நன்கு விளங்குவதாகும். ஸ்ரீ சுவாமி கள் பிராரத்துவசேடம் ஓம் அசலபீடம் உலோகோ பகார வித்தியாதான சபையை நிலைநாட்டிவைத்தது. ஸ்ரீ குருப்ரபுவின் மஹிமையைப்பற்றி எழுதுவதா காதிது.

இத்தகைய மஹன்னியரால் தொகுக்கப்பட்ட 'ஸ்ரீ ஸத்ஸம்பாஷிணி' யென்னும் மிக்க அருமை வாய் ந்த இந்நூல் அஞ்ஞானந்தகாரத்திற்கு ஓர் ஒளியும் சம்சார பந்தத்தைச் சிதைக்கும் வாளும் போன்றது. சாதன சதுட்டய சம்பன்னவான்களே இதன் அரு மையை நன்குணர்வர். திடநம்பிக்கையும் ஊக்கமும் உண்டாகி நாம் எதனிடத்து உண்மையுடன் அன் பைப் பெருக்குகிறோமோ அதனை அடைவது திண் ணம் என்பது தீர்ப்பு. துக்கத்தைத் தருவதாகிய சம் சாரபந்தத்தில் சிக்குண்டுழல்வதைச் சகிக்காது உண் மையில் வருந்தும் பக்குவர்களுக்கு இப்புத்தகத்தின் பிரஸ்தாவனையில் நவின்றிருக்கும் வண்ணமே சுபம் பிராப்தியாவது அநுபவம்.

ஸ்ரீ ஓம் பிரகாச சுவாமிகள் திருச்சன்னிதானத் தில், ஸ்ரீமதி இரத்தினம் சுவாமியார் அம்மணிகள்,

ஸ்ரீ சாங்குசித்தப்பிரகாசர், ஸ்ரீ சித்ப்ரகாசர், ஸ்ரீ வித்யா ப்ரகாஶ், ஸ்ரீ சாந்தப்ரகாஶ் இவர்களுடன் இப்புத்தகம் வாசிக்கப்பட்டபோது, இவனது உள்ளத்தில் தன்னை மானவனாகவும் ஸ்ரீ ஓம்ப்ரகாச சற்குருநாதரைத் தானவராகவும் எண்ணி, மிகு பக்தியுடனும் தேட்டத்துடனும் செவிமடுத்துவர அனைத்தும் மித்தையென்பது புலப்பட்டது; 'தத் துவம் அசி' மஹாவாக்கியலக்ஷியார்த்தம் பிரசன்ன மாயிற்று. தன்னையே எங்கும் பார்க்கத் தலைப்பட்டான்: ஆனந்த சுகமுற்றான்: ஜனனமரண வலையற்றான். தியாகம் எங்கே, வியோகம் எங்கே? 'சிருஷ்டி - திருஷ்டி, திருஷ்டி - சிருஷ்டி' இங்கல்லோ வார்த்தை! சர்வசாக்ஷி சொரூபமாம் ஸ்ரீ ஞானத்தந்தையின் திருவருளில் தன்னை முற்றிலும் இழந்து மறைந்தான் ஓம் ஆநந்தமே ஆநந்தமே!!! ஓம்! இத்தகைய ஸ்திதி ஆவலுடையாருக்கு அதுவே விள்ளும் என்பது ஒருதலை. 'ஓம் ஆநந்தா, ஆநந்தா, ஆநந்தா!' வென்றழைத்து என்னையே எனக்களித்த அருள்விலாச அன்னையின் திருவடிச் சிந்தனையால் இவனது யதார்த்த வடிவத்தைக் கண்டதும் ஆநந்தமாவதால் இனி எழுதக் கையோடாது. ஓம்!

ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி:

ஆநந்தப்ரகாஶ்

ஓம்!

உ

ஓம்.

கணபதி துணை.

சிறப்புப் பாயிரம்.

ஓம் அசலபீடம் ஸ்ரீவித்தியாரண்ணிய தேவ சங்கராச்சாரிய
சுவாமிகளாதீனம் ஸ்ரீ அருளானந்தாரியர் பாரம்பர்ய
ஸ்ரீலஸ்ரீ ஓம் பிரகாச யோகீந்த்ர சுவாமிகள் கருணையினாற்
சுவாதீனப்பிரகாசம் என தீக்ஷாநாமம் சூடப்பெற்ற
திரிசிரபுரம்

ஸ்ரீமத் - ப. பொன்னுஸ்வாமி பிள்ளை

இ ய ற் றி ய து.

புகழ்பெரு மகத்தோர் புதுமையுந் திருவுயர்
திகழுநா வலர்செழுஞ் சென்னைமா நகரோன்
சத்துவ குணாளன் சைவச் சீலன்
வித்தியா பக்தன் வேலைமா நகரோன்
தூயகோ பால சுவாமிக ளவர்க்குச்
சேயரா யுதித்து சிறப்புடன் வளர
இங்கித முடனே யாவும் பயின்று
பங்கமி லாமலே பாலியத் திசையினில்
வித்தக வருட்கவி வெகுவா யியற்றியும்
பக்திவி சாலமாய்ப் பகவனைப் பஜித்தும்

தீரசித் திரக்கவிச் சிங்கநா வலர்பால்
பாரா யாப்பியல் பண்புடன் பயின்றும்
நற்சிவ லிங்க நாயனு ரருளினுற்
சற்சன தீட்சை சாதனம் பெற்று
முதகமண் டலத்தி லுயர்மை சூரிறை
யிதமா ளிகையினி லெழுதுப ணிபூண்டு
தற்பர ஞானமா சபாபதி சுவாமிகள்
பொற்புடன் விசேஷம் புகன்றிடக் கொண்டு
சாதனு யோகத் தரிசனக் காட்சிவி
நோதமாத் தன்னு ளேக்கித் தெளிந்து
சந்யாச முற்றுச் சத்யராம் வித்தியா
ரண்ய ராதீன ரம்யமோ மசலப்
பீடவா னந்தர் பெருமரு ளாரியச்
சீடவர்க் கத்தியர் சின்மயர் சுபர்ணரின்
றிருக்கரு ணையினுற் றீக்ஷா நாமமும்
பொருட்கீ லகமெனும் பொக்கிஷம் வாய்க்கவும்
தன்சுவா னுபவமாய்த் தானு யுதித்து
நன்னிரு வாணமாஞ் ஞானவா நந்தம்
நிர்மா ணகாயர் நிபுணரி னேக்கினுல்
பிர்ஹ்மா னந்தவிப் பேற்றையுட் கொண்டு
சிந்தை மகிழ்ந்தே திருக்காந் தலெனூஉம்
விந்தைசேர் பதியில் விசித்திர மான
தட்சணு மூர்த்திப்பேர் தண்சூழ் மடத்தினிற்
பட்சமாய்ச் சேர்ந்து பதிகதிர் வீசும்
மூலவா தீன மோனமா ஞானநற்
சீலவே காம்பரத் தேசிக ரருண்மிகு

மின்பயோ கினியெனு மிரத்தின மமையவ
ரன்பினுற் றிவ்விய வாதர வுற்றுமே
பலபெய ருதவியாற் பர்ணகா சீர்மமும்
நலமொடு புரிந்து நாமஞ் சரஸ்வதி
யெனச்சூட் டிஞான நூ லிணையாய் வகித்துங்
கனவுலோ கோப காரவித் யாசபை
தானே தயமாய்த் தாபகஞ் செய்தும்
ஞானே பதேசம் நற்சனர்க் கோதியுஞ்
சாதனச் சகிதத் தலைவர் களாக
நூதன குஹாவ்றை நுட்பமா யமைத்து
முலகினி னற்கதி யுய்யுமா றினமும்
பலவிதச் சாத்திரப் பயன்களைத் திரட்டிப்
பொருட்பிர காசப் பூரணு னந்த
வருட்பிர காச வறிவா னந்த
உண்மைப் பொருளை யுசிதமாய் விளக்கித்
தன்மய வடிவைச் சகஜமாய்த் துலக்கி
நித்ய முக்தியை நியமமா யோதிய
ஸத்ஸம் பாஷிணி சாத்திரந் தன்னைத்
தினமு மூக்கமாய்ச் சிரவண நிதித்யா
சனமுற் றோர்க டலைவனைச் சார்ந்திட
வஞ்ஞான நீங்க வறிவுமேற் பொங்க
மெய்ஞ்ஞா னமோங்க மேல்வழி விளங்கச்
சச்சிதா னந்த சாக்ஷாத் காரமாய்
நிச்சய மைக்கிய நிலைபெறு வாரெனச்
சீவகா ருண்யமாய்ச் சீலநிஷ் காமிய
தீவர மாகவே தெள்ளிய நடையினி

வியற்றமிழ் வசனமா யெளிதி லியாவரும்
வியப்புற வுணரவே விளக்கி யியற்றின
செந்தை சத்குரு வெழில் பெறூஉ ஞானச்
சுந்தர வறிவாந் துளசிலிங் கத்திரு
சாமிஞம் பிரகாச சந்நிதியைப்
பூமியிற் சந்ததம் போற்றுக மனமே.

ஓம். சுபம். சுபம். சுபம்.

உ

ஓம் சிவகணபதியே நம:

ஓம் அசலபீடம் ஸ்ரீ வித்தியாரண்ணிய தேவ
சங்கராச்சாரிய சுவாமிகளாதீனம்
ஸ்ரீ சற்குரு அருளானந்தாரிய சிஷ்ய வர்க்க
ஸ்ரீலஸ்ரீ யோகீந்த்ர ஓம் பிரகாச சுவாமீகள் கருணையினாற்
சாந்தசித்தப்பிரகாச மெனத் தீக்ஷா நாமம் சூடப்பெற்ற
திரிசிரபுரம்
ஸ்ரீமத் - கு. கோவிந்தசாமி பிள்ளை துதித்த

ஸ்ரீ குருதோத்திர பஞ்சரத்தினம்.

விநாயகர் துதி.

(ஆநந்தத்தாற் புகன்றது.)

வாழ்வெங்கே வாக்கெங்கே வளர்தலுங் குறைவெங்கே
மதியடி முடியு மெங்கே
மனமெங்கே மாயையெங் கேநரக மோட்சமும்
மண்ணும்பொன் பெண்டி ரெங்கே
வீழ்தலெங் கேவினையு மின்பமுந் துன்பமும்
வித்தும் விளைவு மெங்கே
மேலான பொருளெங்கே வெளியான விடமெங்கே
வேண்டிடத் தெய்வ மெங்கே
தாழ்வெங்கே தவமெங்கே தந்தையுந் தாயெங்கே
தானெனும் பான்மை யெங்கே

ஜாதியுங் குலமுமெங் கேஜனன மரணமிலே
　　சாட்சி நீ யென்ற காலே
ஆழ்தலி லேயறிவிற் கைங்கரமு மெழுதோற்ற
　　மதனேவெல் வகைபு கட்டுன்
*னபாரவடிவில் யானடங்கவே அருள் புரீஇ
　　அறிவா னந்தக் குரவனே.

திருக்காந்தலில் அங்கலிங்க சாக்ஷாத்காரமான மகத்தோ பாசன ஸ்துதி.

(கட்டளைக் கலித்துறை.)

அக்கா லமொன்று மறியா வடியனே அண்ணலின்பால்
இக்கா லதுநீ யெனும்பத மீந்தின்ன மாதரிக்குந்
துக்கடா பாயென் றஞானவா நந்த சுயமணியை
எக்கா லமும்ஙா விலும்பா விலுந்துதித் தேற்றுவனே.

குரு தோத்திரம்.

(கடத்தைநோந்து குருவைவியந்தது.)

நிதியிலும் நினைவிலும் நிலத்திலுங் கடையன்யான்
　　நின்னன்பர் களிலுங் கடையேன்
நெறியிலுங் குறியிலும் நிறத்திலுங் கடையன்யான்
　　நேயத்திலுங் கடையனேன்
மதியிலும் வாழ்விலும் வயதிலுங் கடையன்யான்
　　வந்தடைந் ததிலுங் கடையேன்

---

* கால, தேச வஸ்துவினுல் முடிவின்மை.

மகிமைபெரு வாசிட்டர் பகர்பாலன் கதைபோல
மௌடீக மலையைக் கெல்லி
பதியறிய பரிபாக காலமின் றேவருக
பாருடன் விண்ணு மெங்கும்
பரிபூர்ண பாரமார்த் தீகசத் தில்லுறப்
பகருமெண் குணமு மீந்து
திதிபெறு தேங்கித் திகைக்குமெனை யூக்கவே
திருவுருக் கொண்ட வெந்தாய்!
தேசிகா ஓம்பிர காசமென் பெயர்பூண்ட
தெவிட்டாத வமிர்த ரசமே.

(இவ்வாறலக்கணுற்றேனின் கலக்க மகற்றினையென்பது.)

தன்னையு மாதாரத் தலைவனையுந் தேடாத
சண்டாள னேன்பி றந்தேன்
தத்துவச் சுருதியின் சாதனமுந் தேடாத
சதிகார னேன்பி றந்தேன்
நின்னையே கதியென்று நின்னடியர் கூட்டிலா
நிர்மூட னேன்பி றந்தேன்
நினைவிலெழும் வடிவுகளைத் தோற்றமென் றெண்ணுத
நீச்சனு யேன்பி றந்தேன்
உன்னையே தெய்வமென் றுணர்வையே தரிசியா
துட்குருட னேன்பி றந்தேன்
உலகுமுற் பொருளையும் பர்க்கறிய பொருளையே
யுவந்தெனக் கேயரு ளுவாய்
தென்றிசை யியமனென் பானுமறி வென்றிடத்
திருவுருக் கொண்ட வெந்தாய்!

தேசிகா ஓம்பிர காசமென் பெயர்பூண்ட
தெவிட்டாத வமிர்த ரசமே.

(குரு உபதேச சீர்த்தி.)

நானெனும் பொருளினைக் காணும விச்சனனம்
நழுவுமென வலறு மெற்கு
நான்மறையி னந்தத்தி ெனுளிர் *குப்த வித்தையை
நயனமதி லிலக வைத்தாய்!
ஊனென்று முடலென்று முயிரென்று முளறுமென்
னுளமதம் விட்டு பேட்சை
உத்தமப் போதமா †மேழாந்த லப்பொருள்
உண்மைநா மென்ற போது
வானென்று சொல்லவோ வாயுமிலை வகையுமிலை
மாயமாய்ப் போன தென்னே!
மலரசல வுயர்பீட கீர்த்திப் பிரதாபகுரு
மகிமையெல் லாமு னக்கே
தேனெனுஞ் சொருபநிலை யூட்டிவாழ் விக்கவே
திருவுருக் கொண்ட வெந்தாய்!
தேசிகா ஓம்பிர காசமென் பெயர்பூண்ட
தெவிட்டாத வமிர்த ரசமே.

(ரஸாஸ்வாதமும் தாண்ட வேண்டல்.)

சார்ந்தவரை யீடேற்று சங்கரர் மரபினை
சாற்றித் தொழுதல் வேண்டும்
சத்வகுண மேலிட்டு வசிகரத் துறவுடன்
சார்சகச நிட்டை வேண்டும்

---

*வேதாந்தரகசியம். †துரியம்.

ஊர்புகழ் பாரம் பரைமுக்தி நண்ணுதற்
குனதருட் புரிதல் வேண்டும்
உற்பத்தி லயமும் விவர்த்தமென் றறிந்திட
உணர்வுவடி வாதல் வேண்டும்
ஆர்ஜவ ஐயனுக் *காப்தமுற் சதுர்வித
வனுகூல னுதல் வேண்டும்
அந்தவே தாந்தபிர பலசுருதி மலருநல்
லைக்கிய சமாதி வேண்டும்
தீர்த்தமென வொருமொழி தீவிரர்க் களிக்கவே
திருவுருக் கொண்ட வெந்தாய்!
தேசிகா ஓம்பிர காசமென் பெயர்பூண்ட
தெவிட்டாத வமிர்த ரசமே.

**(பாக்கியம்பெற்றதால் கைம்மாறில்லாச்
சிலாக்கியமெனல்.)**

சுருதிதர்க் கானுபவ ஷட்லிங்க மூர்த்தமாய்
சுயஞ்சோதி ரூப மோடு
சுபவித்தி யாரண்ய மரபெழுந் தாதான்மிய
சொல்லெனக் கருளி மீண்டுந்
திருநிதித் தியாசனச் சித்தியாஞ் தீட்சையுஞ்
சிறுவனின் சிரம்வ கித்து
சிந்தனு தீதத்திற் றாங்காமற் றாங்கிடச்
ஜெயஞ்செய்த †விகித குருநின்
கருணையாற் கொய்தபூக் கொப்பாகி னேன்ஜீவ
காருண்ய சந்நி தானம்

---

*ஆப்த அங்கதானசற்பாவம். †ஐயந்தவிர்த்து முக்தி யருள்பவர்.

காணிக்கை யீயவோ வெல்லாநின் னுருவமே
காணிலேன் பிறிது வேறாய்த்
திருக்கெனு மகண்டமாஞ் சாட்சியெனைக் காட்டிடத்
திருவுருக் கொண்ட வெந்தாய்!
தேசிகா ஓம்பிர காசமென் பெயர் பூண்ட
தெவிட்டாத வமிர்த ரசமே.

தத்ஸத்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 28 APR 1915 MADRAS.

"ओं. भद्रं कर्णेभि शृणुयाम देवाः ।
भद्रं पश्येमाक्षभिर्यजत्राः स्थिरैरंगै
स्तुष्टुवाꣳसस्तनूभिः ।
व्यशेम देवहितं यदायुः ॥
ओं शान्तिः शान्तिः शान्तिः ॥"

" ஓம். பத்ரம்கர்ணேபி ச்ருணுயாம தேவா।
பத்ரம் பச்யே மாக்ஷபிர்யஜத்ரா ஸ்திரைரங்கை
ஸ்துஷ்டுவாம் சஸ்தநூபி। வ்யசேம தேவஹிதம் யதாயு॥

ஓம் ஶாந்தி : ஶாந்தி : ஶாந்தி : ॥ "

" Om. Oh Gods ! may we, with our ears, hear what is auspicious ; O ye ! fit to be worshipped, may we, with our eyes, see what is auspicious; may we enjoy the life allotted to us by the Gods, offering our praise with our bodies strong of limb.

Om Peace ! Peace !! Peace !!! "

ஓம். ஓ தேவர்களே! நாங்கள் எங்கள் காதுகளால் சுபகரமானதைக் கேட்கவும்; ஓ வணங்கத்தக்கவர்களே! சுபகரமானதை எங்கள் கண்களால் பார்க்கவும்; அவயவ பலமுள்ள தேகத்தோடு உங்களைப் போற்றிக்கொண்டு தேவர்களால் எங்களுக்கு அநுக்கிரகிக்கப்பட்ட வாழ்நாட்களை சுகமாய்க் கழிக்கவும் கிருபை செய்யுங்கள். ஓம் ஶாந்தி! ஶாந்தி!! ஶாந்தி!!!

ஓம்.

பிரஸ்தாவனை.

ஓம்! கண்ணுடையீர்!

இக்கிரந்தத்தை, தனியே ஏகாந்தமாகவாவது முமுக்ஷுக்களுடன் கலந்தாவது படிப்பதற்கு முன்னம், சிஞ்ஞான்று தேகத்தை அசையாதிருத்தி மஹா சித்தர்களைத்தியானித்து அல்லது அவரவருபாசனு மூர்த்தத்தை வந்தித்து இதன் சாரம்வெளியாக வேண்டுமென்று ஊக்கமுடனும் உருக்கமுடனும் சிந்தித்து, பயபக்தி விசுவாசத்துடனும் உத்தமப்ரேமையுடனும் நேர்மையுடனும் அவசரமின்றி நிதானமாய்க் கண்ணுறில், ஆத்மலாபங் கிடைக்குமென்பது துணிபு.

இந்நூல் அச்சுவாஹனமேறுவதற்கு முன்னமேயே மேற்படி குறித்தவண்ணம் வாசித்த சிலர் ஜீவன் முக்தர்களாயினர்கள். ஒருவர் அந்நொடியே உலகபடாடோபத்தை யொழித்துத் துறவியாஞ் சந்நியாசமுற்றனர் என்றால், இன்னமும் இதனால் விளையும் பிரயோஜனத்தையும் சொல்லவும் வேண்டுமோ!

சுரோத்ர்ய பிரஹ்ம நிஷ்டகுருநாதன் சாதன சதுஷ்டய சம்பன்னவானும் அதிகாரி சீடனுக்குத் திருவாய் மலருங் குப்த விசாரணையைப் போன்றது. வேட்

கையுடன் நோக்கில் அவரவர்களறிவே குருவாய்நின்று உண்மையை விள்ளுமென்பது திண்ணம்.

இப்புத்தகத்தி லங்குமிங்கு மவசரமாய்நோக்காது பிரதமத்திலிருந்து சமாப்திவரையில் சிறுகச்சிறுக மனஞ் சிதறாது படிப்பதுடன் கருத்தையு மூன்று வோர் பயன்பெறுவாரென்பது தீர்மானம்.

இவற்றுள், எழுத்துச் சொற்பிழை மற்றியாவற் றேனு மிருப்பினும், புண்ணிய ரறிவிக்கி லவர்களுக்கு நன்றியறிதலானவர்களா யிருப்பதுடன் அடுத்தபதிப் பில் அதனைத்திருத்தி அச்சிட ஆசித்தவர்களாயுமிருக் கிறோம்.

இப்படிக்கு

உ. வி. சபையினர்.

தத்ஸத்.

ओं

அறிவானந்தாய நம:

* உபோத்காதம்.

ஓம்! ஷட்லிங்க தாத்பர்யங்கொண்டு வேதாந்த விசாரஞ்செய்த, சிரவண, மனன, பலத்தாருக்கு, பிரஹ்மமே பொருள், மற்றவை தோற்றமென்பதநுபவமாய்ப் புகன்றதால்; இவ்வியவகாரிக புவனபோகத்தில் தநுகரணங்களை யுடைத்தான சர்வத்திராளுக்கும் அபிலாஷையுடன் பஹிரங்கப்படுத்துவதாவது—ரிஷீஸ்வரர்களும், அவதார புருஷர்களும், சித்தர்களும், (பிரஹ்மசூத்திரம், உபநிஷத், கீதை) எனும் பிரஸ்தானத்திரயங்களில்

"ओं! पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥"

---

* எவ்வனுவியவசாயத்தை முன்னிட்டோ என்னின், இலௌகீக தெய்வீக வைதீகமெனுந்திரிசார்புகளையும் வெட்டியு மொட்டியு மிருப்பதாலிஃதோர் நவீன சாம்பிரதாயமென்னாது; நந்தேசத்து பிராசீனர், பல்சமயத்தோரே போற்காண்கினும், பஞ்சகிருத்தியங்கட் காதார பூதமான கர்த்தவ்யத்தையே கடவுளென்கிறானும் சித்தாந்தத்தை முன்னிட்டே, ஒற்றுமையுடன் குழுவுவதே மேன்மைபோலும், என்ற ஊக்கத்திற்காக என்கவும்.

**" ஓம் ! பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமதச்ச்யதே!
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவ சிஷ்யதே || "**

" பூர்ணமாயுள்ள (பிரஹ்மந்தான்) சர்வமும், அது புலப்படுகிறதில்லை. பூர்ணமாயுள்ள (பிரஹ்மந்தான்) சர்வமும், அது புலப்படுகிறது. பூர்ணமாயுள்ள (பிரஹ்மத்)தினிடத்திலிருந்தே, சர்வமும் சிருஷ்டிக்கப்பட்டது. சர்வசங்காரமும் அதற்குள்ளேயே உண்டாகி, தான் (பிரஹ்மம்) மட்டிலும் மிகுதியாகிறது. ஓம் ஶாந்தி : ஶாந்தி : ஶாந்தி :" என்ற கருத்தடங்கிய ஸ்லோகங்களையும் திருவாய் மலர்ந்திருக்கிறார்கள். அந் நித்தியத்தை சத்தென்றறிந்து (சித்தாகி) பேர் ஆனந்தராவதே சாஸ்வத புருஷார்த்தமென்பது துணிபு. மஹாவாக்கியம் - ஓர்மொழி - மஹாமநு - நிருவாணம் என்னுந் தீட்சாநுக்கிரஹம்பெற்ற மஹன்னியர்களுக்கு இஃதே ஸநாதனதர்மமெனத் தெள்ளெனத்தெரிந்ததினாலன்றோ அஃதிற்கு மாறானோரை நோக்கி ஸ்ரீ தாயுமான ஸ்வாமிகள்,

" மாறுபடு தர்க்கந்தொ டுக்கவறி வார்சாண்
வயிற்றின் பொருட் டதாக
மண்டலமும் விண்டலமு மொன்றாகி மனமுழல
மாலாகி நிற்க வறிவார்
வேறுபடு வேடங்கள் கொள்ளவறி வாரொன்றை
மெணமெண்ணென் றகம்வே றதாம்
வித்தையறி வாரெமைப் போலவே சந்தைபோன்
மெய்ந்நூல் விரிக்க வறிவார்
சீறுபுலி போற்சீறி மூச்சைப்பி டித்துவிழி
செக்கச் சிவக்க வறிவார்

திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்
செய்கைகொடு மூளற வறிவா
ராறுசம யங்கடொறும் வேறுவே ருகிவிளை
யாடுமூனை யாவ ரறிவா
ரண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே."

என்ற ஸ்தௌத்திய வாயிலாய் மலர்ந்ததுபோல், மதிபு கட்டினர்.

ஆப்தர்காள்! இவ்விந்துதேசத்தில் பரமசுகாநந்த ஈஸ்வரரை வந்திக்கவுந் தொந்திக்கவும் காண்டத்திரயங்கள் (கர்மம், பக்தி, ஞானம்) உளதெனக் கண்டுளோம். (சோபாதிக) சகுணோபாசகர்களில் சைவபுராணங்களை மட்டிலும் வாசித்தவருட்சிலர், சிவபக்தர்களாகி மற்றைய உபாசகர்களை - மதியிலிகளென நினைப்பதும், வைஷ்ணவ புராணங்களை மட்டிலும் வாசித்தவருட்சிலர், விஷ்ணுபக்தர்களாகி மற்றைய உபாசகர்களை மதியிலிகளென நினைப்பதும், மேற்படி புராணங்களிரண்டையும் வாசித்துணர்ந்தோர். *சியாலஸாரமேய நியாயத்தாற் றெளிந்து சமரசபக்

---

* சியால ஸாரமேய நியாயம்.—ஓர்பெண்ணின் சகோதரனுக்கு உத்பாலகன் என்றுபெயர். அவனது சத்துருவிற்கு தாவகன் என்றுபெயர். இப்பெண்ணின் புருஷன் வீட்டிலுள்ள நாய்க்குத் தாவகன் என்றுபெயர். அதன்விரோத நாய்க்கு உத்பாலகன் என்றுபெயர். பெண், புருஷன் வீட்டுக்கு முதல் முதல் சென்றிருந்தபோது புருஷன் வெளிசென்று உலாவி வருகையில் இவனது நாயும் மற்றைய நாயும் சண்டையிட்டுக் கடித்துக்கொண்டது. இவளது புருஷன் வீட்டிற்குத் திரும்பியபோது வீட்டண்டையிருந்து தாவகனை மஹா

தியுடையவர்களாய் மேற்படி யிருசார்பினர்களையுங் கண்டு நகைப்பதுமாயிருக்கின்றனர். (நிரூபாதிக) நிற்குணோபாசகர்கள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியர் பாஷியத்தைச் சிரவணித்து அதைச் சார்ந்தவர்களாய் மற்றையோரை தாழ்மையாக மதிப்பவரும், இப்படியே ஸ்ரீமத் - இராமாநுஜர், ஸ்ரீமத் - மத்வாச்சாரியர், ஸ்ரீமத் - மெய்கண்டதேவர், ஸ்ரீமத் - பௌத்தர், ஸ்ரீ பதஞ்சலி மஹரிஷி இன்னமும் பல வித்தியாபரர்களது தாத்பர்யங்களையும், கொள்கைகளையும், பாஷியங்களையுந் தனித்தனியே வுணர்ந்தோர், அவ்வவற்றில் நம்பிக்கையுண்டாகி மற்றவர்களைத் தாழ்மையாக நினைப்பவரும், வியாகரணம், மீமாஞ்சை, *நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், வேதாந்தம் முதலான சூத்

யோக்கியனென்றும் சாந்தனென்றும் புகழ்ந்து, உத்பாலகனை "உத்பாலகன் வெறிபிடித்தநாய் வலியமாகவந்து மேல் வீழ்ந்து தாவகனைக் கடித்தானே மடையநாய்" என பலவாறிகழ்ந்ததைச் செவியுற்றபெண் தன்னுடைய புருஷன் நாய்களை வைகிறார் என்றறியாது, தனது சகோதரனை யிகழ்ந்தும் அன்னவனது சத்துருவைப் புகழ்ந்துமுரைக்கிறாரென்று பிணங்கி நின்றனள். முகவாட்டங்கண்டு புருஷன் விவரம் தெரிவித்ததின்பின் சங்கையற்றனள். அவ்வண்ணமே வியாசர், சைவ வைஷ்ணவமற்றும் புராணங்களில் காரணகாரிய தெய்வங்களை உயர்த்தியுந் தாழ்த்தியும் அவ்வவ்வமயங்களுக்குகந்தவாறியம்பியதின் கருத்தறிகிறவரையில் மதாபிமானம் சமரசப்படுவதரிது.

* வித்தியானந்தமின்றி வெறும்படிப்பில் மட்டும் வியவகரித்து நெறிநில்லாதாரையே யொழிய, மேற்படி நியாய முதலியவைகளைக்கொண்டு அஞ்ஞான சந்தேக விபரீதம் போக்கி, துரியநிலையிலுள்ளாரை யன்றென்பதறிஞரறிவர்.

திரங்களையும் அவற்றின் வெவ்வேறு பாஷியங்களையும் உணர்ந்தவர்கள், அவரவர்கள் பக்ஷத்தை நிலைநாட்ட த்வஜங்கட்டிக் கதறுபவர்களுமா யிருக்கிறார்கள். இவ் வாசா ஞானிகளை, தத்தோம் அசி எனும் மஹாவாக்கி யோபதேசம் பெற்று "அறிவானபூரணமே தெய்வம் தெய்வம்" என்றறிவான (பிரஹ்ம) வித்தியானந்த நிஷ் டாபரர்களாயிருக்கும் மஹான்னியர்கள் கண்டு மேற் படியோர்கள் *அந்தகோலாங்கூல நியாயத்திற் கிலக் காயினரென விரக்கப்படுகின்றனர்கள். அன்பர்காள்!

---

* அந்தகோலாங்கூல நியாயம். —

திருடர்கள் ஆடையாபரண அலங்கிருத ஓர் குழந்தை யை காட்டிற்குத் திருடிக்கொண்டுபோய் விலையுயர்ந்த ஆபர ணங்களை எல்லாம் கழற்றிக்கொண்டு ஓர்கால் அவர்களைக் காண்பித்துவிடுமென் றெண்ணி இரு நேத்திரங்களையும் தோண்டிவிட்டார்கள். அலறி அலறி வீட்டிற்குச் செல்வ கை அறியாதலைகையில் அவ்வழியே மாடுமேய்த்து வந்த ஓர் கொடியன் வேடிக்கையாயும் தனக்கு விளையாட்டாயும் "ஓ சிறுவ! இதோ ஒரு கோல் கொடுக்கிறேன். இதைப் பலமாய்ப் பிடித்துக்கொள். எங்கெங்கு சென்றாலும் விடவேண்டாம், விட்டால் உன் வீடுபோய்ச்சேர்வது கஷ்டம். பிடித்தபிடி விடாதிருக்கில் கட்டாயம் உன்வீடுகொண்டு சேர்க்கும்" என்று ஆசையான வார்த்தைகளைப் புகட்டி ஒரு கொழுத்த எருதின்வாலை அப்பிள்ளையின் கையிற்கொடுத்து அவ்வெரு தை ஓர் அடி அடித்துவிறட்டினன். அக்குழந்தையின் கதி என்னவாய் முடிந்திருக்குமென்று யோசிக்கவும். அவ்வண் ணமே காமக்குரோத முதலான கள்ளர் விஷயவனாந்தரத்தில் நம்மை வைத்து, சத்வகுண ஆபரணத்தைப்பறித்து விவே கம் எனும் நேத்திரத்தைக் கெடுத்திருக்கக் காருண்யமில்லாச் சிலர் வாசா ஞானத்தைப் புகட்டி, பேதவாதியாக்கி முழு மோசஞ் செய்ய வெளிக்கிளம்பிப் பிதற்றுகிறார்கள்.

பின் சந்ததியாரும் இவ்வண்ணமே பிறழாது வாழ்நாளநித்தியமென்று, ஜனனமரணாவஸ்தையினின்று விடுபட இறப்பொடு பிறப்பையுள்ளே எண்ணி, நெஞ்சம் பகீரென்று திடுக்கிட்டுச் சற்குரவன் பாற்பட்டு, மஹாவாக்கியோபதேசம் பெற்று, அவராற் கொடுக்குமோர் சாத்திரத்தைக்கற்று நிஷ்டையிற் கலப்புற்று ஜீவன் முக்தியுமுற்று, அதிவியாப்தி, அவ்வியாப்தி, அசம்பவமென்னும் முக்குற்றமின்றிய நிருவாண சுகப்பிராப்தியைப்பற்றுவதே உசிதம், உசிதம் என்பது அருட்பிரகாசர் காருண்யமாம். ஆண்டு ஆப்தர்களது நூலாதாரத்தைத்தழுவி, சிறுவர்களுக்கும் மதிபுஷ்டியாகும் பொருட்டு நியமித்திருக்கும் நித்தியானுஷ்டானங்களிலிச்சை பிரபலமாகவும், ஞானிகளது ஆனந்தத்தைக் கண்டு வியக்கவும், ஆத்மவித்தையை எளிதிலுணரவும் சர்வத்திராளுக்கும் பொது சிறப்புடைத்தாய் இச்சிறு பிரச்நோத்தாரம் ஓம் தத்ஸத் எனவுன்னி இயல்பாகிய நடையிலெழுதலாயிற்று. புண்ணிய வித்துவான்கள் குற்றங்களைவிடுத்துக் குணத்தைச்சிலாகித்து இம்முயற்சியை முன்னுக்குக் கொண்டுவரக் கிருபை வினவுதும்.

ஓம் பிரகாசம். ஓம்!

ॐ

"ओमित्येतदक्षरमिदꣳ सर्वं तस्योपव्याख्यानं
भूतं भवद्भविष्यदिति सर्वमोङ्कार एव ।
यच्चान्यत्त्रिकालातीतं तदप्योङ्कार एव ॥"

*" ஓமித்யேததக்ஷரமிதம் சர்வம் தஸ்யோபவ்யாக்யானம்
பூதம் பவத்பவிஷ்யதிதி சர்வமோங்கார ஏவ ।
யச்சாந்யாத்ரிகாலாதீதம் ததப்யோங்கார ஏவ ॥"*

"'Aum'—this sylable is all this (universe). Its Explanation: What was, what is, and what will be, all is verily Aumkara. Whatever else which is beyond the three-fold time, is also verily Aumkara."

(Mandukya Upanishad 1.)

இந்த (பிரபஞ்சம்) அனைத்தும் 'ஓம்' என்னும் இந்த அசையே. அதன் விரிவானபொருள்: இருந்தது - இருப்பது - (இனிமேல்) இருக்கப்போவது ஆகிய எல்லாம் ஓங்காரமே. மூன்று காலங்களுக்கும் அதீதமான மற்ற யாதொரு வஸ்துவும் ஓங்காரமேதான்.

(மண்டூக்ய உபநிஷத்.)

ஓம்.



ஶ்ரீமத் ஏகாம்பர தேசிக சுவாமிகள்.

உ

ஸ்ரீ சற்குரு துணை.

ஸத்ஸம்பாஷிணி.

பிரதமவஸ்துவின் மங்கலம்.

(ஏந்திசைச்சேப்பல் வெண்பா.)

பார்மேவு மிச்சத்ஸம் பாஷிணிநன் னூலுக்குச்
சீர்மேவச் சந்ததமுந் தேர்ச்சியுடன் - வார்மேவு
மார்க்கங்க ணைன்கினிலும் வள்ளலெனு மைந்துகரத்
தார்க்கென்றும் போற்றியிது தான்.

மஹான்களாம் நிர்மாணகாயர்களாசியை வேண்டல்.

(கட்டளைக்கலித்துறை.)

சீரேறு வேதாந்த சித்தாந்த வஷ்டமா சித்துடையீர்
காரேறு பூவான மண்டாண்டந் தாவியே கண்டிடுவீர்
தாரேறு காருண்ய விஞ்ஞானநந் தந்திடச் சாட்சியாவீர்
வாரேறு தத்ஸத்ஸம் பாஷிணித் தோன்றிட வாழ்த்து
[வீரே.

ஓம்! ஜம்புத்வீபமென்றும், குமாரிகாகண்டமென்றும், பரதவர்ஷமென்றும் புகழும் இவ் விந்துதேசச் சார்பினதாம் கயிலை, ஹிமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், கந்தமாதனம், நீலகிரி எனும் அஷ்டகுல வெற்புகளி லொன்றானதும்;

வடக்கே கன்னடபாஷையோர் வாழும் மைசூர் எனும் தேசத்தையும், கிழக்கும் தெற்கும் தமிழ் பாஷையும் தெலுங்கு பாஷையும் வழங்கும் கோயமுத்தூரையும், மேற்கே கேரளமும் கொங்கணி பாஷையும் ஊர்ஜிதமாயுள்ள மலையாள நாட்டையும் எல்லையாகப் பெற்றுளதும்;

உத்தரத்தில் மாயாற்றையும், தக்ஷணத்தில் பவானி *நதியையும், பூர்வத்தில் இரு நதிகளின் கூடுதுறையையும், பச்சிமத்தில் பாண்டி †நதத்தையும், இன்னமும் பல்லாயிரம் பெருமலையின் வீழருவிகளையும் மாலைகளைப்போ லணிந்துளதும்;

கோத்தகிரிக் கணவாய், குன்னூர்க் கணவாய், சீகூர்க் கணவாய், கூடலூர்க் கணவாய், மேலூர் அல்லது சுண்டபட்டிக் கணவாய், சீஸ்பாரை அல்லது குண்டந் தோற்றுங் கணவாய் முதலான செங்குத்தான மலை வழிகளை யுடைத்தானதும்;

தொள்ளாயிரத்தறுபது (960) சதுரமைல் சுற்

* நதி=கிழக்காக ஓடும் ஆறு. † நதம்=மேற்கு நோக்கியோடும் ஆறு.

றளவை யுடையதும், உதயகிரி அஸ்தகிரி கொடிமலைகள் சேரும் ஸ்தானத்தில் மூலாதாரம் போன்றிருப்பதும்;

கடல் மட்டத்திற்கு எண்ணுயிரத் தறுநூற்று நாற்பது (8,640) அடி யுயரமுள்ள தோட்ட பேட்டா வென்னும் மலைச்சிகரம் அடங்கப்பெற்றதும்;

ஆ! ஆ! மலையின் அடிவாரத்தைச் சுற்றிப்பார்த்தால் நானு வர்ணங்களான காவிக் கற்களாலும் கோபிக் கற்களாலும் வானத்தை யளாவிக் கூர்மையாகவும் சில பாரிசம் பருவதம்போன்று படர்ந்தும், சிலபக்கம் குடையைப்போன்று கவிழ்ந்தும், சாந்தாதீதமாய் நிலைநிற்கும் பலகோடி குன்றுகளின் அடுக்கடுக்கான அலங்காரங்கள் விளங்குவதும்;

அவற்றின்மீது மரகதப்போன்ற பசும்புற்கள் கலவிச்செழித்துக் கண்களுக்குச் சீதளத்தையும், மனதிற்கு ரமணீயத்தையும் விளைவிக்கும் மஹா சோலைகளின் காட்சிகளும் அவற்றின் மாட்சிகளும் கிரீடகரித்திருப்பதும்;

மலைச்சார்பாம் அடிவாரத்தை யணுகி நோக்கில், அதிககோரமா யடர்ந்த ஆலவிருட்சம் வேலவிருட்சம், அரசு புரசு, அத்தி இத்தி, கூந்தற்பனை வேந்தற்பனை, தேக்கு பாக்கு, தென்னை புன்னை, வாழை கூழை, அகில் குகில், சந்தனம் இந்தனம், குங்கிலியம் சங்கிலியம், கடுக்காய் வடுக்காய், வேங்கை சேங்கை, வெள்ளோடை கள்ளோடை, எறுஞ்சிங்கி சேறுஞ்சிங்கி,

இறங்குசிங்கி 'குரங்குசிங்கி, ஏறமூஞ்சி நாறமூஞ்சி, இறங்கமூஞ்சி சிறங்கமூஞ்சி முதலாம் மற்றும் பலா களா, விளா நிலா, நிறைந்துள்ள காத்திரமான ஜாகை களையுடைத்தான அடவிகள் சூழ்ந்ததும்;

அவ்வாரண்ணியத்துள் மாசுணங்களின் நவிய மும், பேசுணங்களின் கவியமும், சர்ப்பங்களின் சீற லும், கற்பருந்துகளின் பீறலும், மயில் முதல் பக்ஷிக் கும்பலின் ஆட்டமும், குயில்முதற் பறவைகளி னின் ஞேசைப் பாட்டமும், கழுகு குழுவுவது ஒருபுறம், கூளி கேளி மற்றொருபுறம், செந்நாய் முன்னலோடு வதும், நன்னய் பின்னல் வாடுவதும், நரிகள் கள்ள மென்ன, மான்கள் துள்ளலென்ன, மாயப்பூனை பறக்கப் புனுகுப்பூனை சிறக்க, கரும்புலி செம்புலி கொடிப்புலி வரிப்புலி கர்ச்சனை இடிபோல் குமுற, தந்தகுஞ்சரங்க ளும், நீலமேகவர்ணகுஞ்சரங்களும், குஞ்சரக்கன்று களின் மந்தைகளும் வீறிட்டு அலற, மஹாவிசேஷங் களை யெலாமடக்கியுளதும்; விலங்கு, புள், ஊர்வன முதலானவை த்ருடமாயுளதும், அங்கங்குள்ள தடா கங்களில் அம்போதரங்கம் விகசிதமாயிருக்க, அவற்று ணீர்வாழ்வன அகசிதமாயிருக்க, திக்பிரமையை யுண் டாக்கத்தக்க பெருங்காட்சி விஸ்தாரங்களை அஷ்டபுறங் களிலும் நெருங்கி யிருக்கப்பெற்றதும்;

முடியிற்சென்று திருஷ்டித்தால் எங்கும் நிறைந்த மலைகளையும், கற்றவர்மெச்சும் நிலைகளையும், நவமணி கள் போன்றலர்ந்துள்ள சம்பங்கி வம்பங்கி, மலை

மல்லிகை வலைமல்லிகை, காட்டுமல்லிகை மேட்டுமல் லிகை, ஆவாரம் பூவாரம், ரோஜாபுஷ்பம் கூஜாபுஷ் பம் முதலான நீர்ப்பூ நிலப்பூ, கொடிப்பூ கோட்டுப்பூ, நிறை நிறையாகப் பூத்திருக்க, வரைவரையே இரீங் கார நாதத்துடன் தேனீக்கள் காத்திருக்க, மகரந்தத் தையும் மணத்தையும் வீசுந்தண்டுளித்தேனைப் பானஞ் செய்யவே கானஞ் செய்யும் பிரமரங்களின் சுரமுழங் குவதும், ஞானம்நீடி வானம்பாடி தேனுண்ணி முத லான பக்ஷிகளின் குஷாலங்களையும், மற்றும் சக்கர வாகப்புள் முதல் பூஞ்சிட்டுவரையுள்ள சிறகினங்களின் விசாலங்களையும், விமரிசையாகப் பெற்று ஜ்வலிப் பதும்;

சிற்சில பூமியைத்தோண்ட, நிலப்பனைக்கிழங்கு ஜலப்பனைக்கிழங்கு, சாலாமிசிரி சூலாமிசிரி, பஞ்சா மிசிரி கஞ்சாமிசிரி, நரிவெங்காயம் வரிவெங்காயம் பருவதக்கிழங்கு மறுபதக்கிழங்கு முதலானவற்றையு டையதும்;

நிலத்தின்மீது படர்ந்துள்ள ராஜபுரி, ஸ்திரபுரி, தரபுரி, மலைபுரி, இலைபுரி, பூலா, நீலா முதலான அமிர்த கரமான சிறுபழங்களை மிகுதியா யுடையதும்;

தென்றல் வாடைவீசும் பூபூமரம், மலைமாமரம், நாவல், கோவல், ஊசிக்களா, காசிக்களா, சிறுகளா, பெருகளா, மலைக்களா, தலைக்களா, தவிட்டுக்கொய்யா, சவிட்டுக்கொய்யா, ஈவிளைமரம், பேய்வளைமரம், சிறு மூங்கில், பருமூங்கில் முதலிய பல்வகை விருக்ஷங்களை

யும்; காட்டுமிளகு பாட்டுமிளகு, கற்றுமறை பற்று மறை, குசங்கள் புசங்கள், அழுகுகன்னி தொழுகு கன்னி, சிறியாநங்கை பெரியாநங்கை, குடியோட்டி மூலி, குடிநாட்டிமூலி முதலாங் கந்தமூல பதார்த்தங் களையெல்லாம் அடக்கியுள்ளதும்;

மலைத்தேன் குலைத்தேன், கொம்புத்தேன் கம்புத் தேன், மரப்பொந்துத்தேன் கரசந்துத்தேன், ஜோதி விருக்ஷத்தின் சாரம், வேதிவிருக்ஷத்தின்தாரம் முத லாம் சித்புருஷர்களது புசிப்பெல்லாங் குலுங்குவதும்;

அருமையான குஹாச்சிரமங்கள் சிறக்கப் பெற்ற தும், பெருமையான பிரபுத்வம் வாய்ந்த கோமான்க ளாற் களிக்கப்பட்டதும், கற்பகவிண்டவழ் சோலைக ளும், சற்சனருலாவுஞ் சாலைகளும், அம்மம்மம் மெனப் பாயும் நீரருவிகளின் ஓசையும், பம்பம்பம் மெனமேயும் கடமைகளின் ஆசையும், பிரபல்யமாய் ஸ்வீகரிக்கும் வசீகரமுள்ள மேகந்தவழும் சசிமண்டலசோபை கம ழும் சுசீல சித்தர்வாசித ஸ்ரீ உதகமஹாரிஷி நேசித நீலகிரித்திகிரியில், உத்கிருஷ்டமான மத்தியதிசாவில்—படுகர், தொதுவர், கசவர், குறும்பர், முள்ளுக்குறும்பர், தேன்குறும்பர், இருளர், மருளர், கோத்தர், பணியர், மற்றும் மலையாரண்யவாசிகள்—கள்ளங்கபடு சூதுவா தற்று சத்வமணம் பொருந்தினவர்களாயும், சமயாசார சின்னமுற்றவர்களாயும் விளங்குங் காவலர்களால் வசிக் கப்பெற்றதும், *விஷஜெந்துவின் பீஜமேயில்லாததும்;

* உதகமண்டலத்தில் தேள், பாம்பு முதலிய விஷப்பூச் சிகள் கிடையா.

பூதலத்தரசர்களும் சீதளச் சௌகரியங் காதலாற் கொள்ளும் பேறுள்ள இதமண்டலமெனும் உதகமண்டலத்தில் அருள்விலாச குருராஜபேட்டை யென்னும் திருக்காந்தல் க்ஷேத்திரத்தில், ஓம் அசலபீடம், சரஸ்வதி ஆச்சிரமம், நிர்மாணகாயர்குஹையின்கண் யோகாநந்த சாகரத்திலாழ்ந்து சகஜசமாதியி லிணைபிரியாதிருக்கும், வானப்பிரஸ்தாச்சிரமங் கைக்கொண்டுள்ள, பிரஹ்மஸ்ரீ - சிதம்பரம் ஏகாம்பர தேசிகர் பக்கல் அன்னவரது சிஷ்யை வைராக்கிய ஸ்ரீமதி - இரத்தினம் அம்மணி அவர்கள் தேசிகரது பாதசிஷ்ருஷை செய்திருக்க; மேற்படி சுவாமிகளது சந்நிதானத்திற்கு, சிவராம மானவ ரென்பாரொருவர் வந்தனர். இவருக்கு முன்னமேயே அசலதானவன் என்பாரும் தபோகோலத்துடன் குகையின்கண் வீற்றிருந்தனர். வந்த மானவர் தந்தனர் சிரப்பிரணமம் மூவர்க்கும்: பிரதி இங்கத்தியும் வினவி சங்கித்தனர் அரணமம் ஆங்கவர்க்கும்.

வந்த *மானவன்: சுவாமிகாள்! தாங்கள் ஏதோ சமாதியாகப்போவதாகக் கேள்வியுற்றல்லவோ ஓடோடி வந்தனன்! இஃதென்னே!! வந்தவிடத்தில் விசேஷம் யாதுங் காண்கிலேனே?

ஆங்கிருந்த †தானவன்.—நேர்த்தி, நேர்த்தி,

---

* மனமுதலிய அந்தக்கரணத்தோடுபட்டுத் தேகமே நானென்ற அபிமானமுடையவன்.

† மனோ வாக்குக் காயங்களுக் கதீதசாக்ஷியே தானென்ற அந்வயமுடையவன்.

நிரம்பநேர்த்தி. "ஆங்கணங்குறித்த வம்முதற் பொருளொடு தான்பிற ஞகாத் தகையது சமாதி" என்றும், ஈசாவாஸ்யோபநிஷத்—

"यस्मिन्सर्वाणि भूतान्यात्मैवा भूद्विजानतः ।
तत्र को मोहः कः शोक एकत्वमनुपश्यतः ॥"

"யஸ்மின் ஸர்வாணி பூதானி ஆத்மைவா பூத் விஜாநத: ।
தத்ரகோ மோஹ க : சோக ஏகத்வமனுஷஸ்யத: ॥"

"எந்த ஆத்மஸ்வரூபத்தில், ஆத்மதத்துவந் தெரிந்தவனுக்குச் சமஸ்தமான பூதங்களும் ஆத்தும ஸ்வரூபமேயாகிறதோ அந்த ஆத்மஸ்வரூபத்தில் ஒன்றாயிருக்கையைப் பார்க்கிறவனுக்கு மோஹமானது ஏது? துக்கமானது ஏது?" என்பதற்கிலக்காய், நம் சுவாமிகள் மோஹதுக்கமின்றி,

"यस्तु सर्वाणि भूतान्यात्मन्येवानुपश्यति ।
सर्वभूतेषु चात्मानं ततो न विजुगुप्सते ॥"

'யஸ்து ஸர்வாணி பூதாந் யாத்மன்யேவாநுபஸ்யதி ।
ஸர்வபூதேஷுச்சாத்மாநம் ததோ ந விஜுகுப்ஸதே ॥'

"யாதொரு ஞானியானவன் சமஸ்தமான பிராணி பூதங்களையும் தன்னிடத்திலேயே பார்க்கிறானோ, சமஸ்த பிராணி பூதங்களிடத்திலும் தன்னையே பார்க்கிறானோ அந்தஞானியானவன் அந்தக் காரணத்தினால் நிந்தை செய்கிறதில்லை" என்றதற்கொப்பாய், அதுவேதான்

தானே அது என சதா சமாதியிலிருக்கும் சுகாதீத அறிவெனும் ஆத்மாவில் அணைந்துகொண்ட பிரஹ்ம சொரூபமாச்சுதே! அங்ஙனமே, தோற்றலான *தேகம், இந்திரியம், மனம், புத்தி, ஜீவன், இவைகளுக்கு அதீதமாயிருக்கும் சாக்ஷியுடன் நித்தியமாய் சமாதியி லிருப்பவனே யானென் றறிந்துகொள்க மானவ. சாக்ஷிசைதன்யம் உன்னிலும் என்னிலும் மற்றி யாவத் திராளுள்ளும் விருப்பு வெறுப்பின்றி, வித்யாநந்த மயமாயிருக்கிறது. சத்குருகருணையின்றி அஃது புலப் படாது. குருவின்பாலண்டி யாதேனும் ஓர் அப்பியா சத்தைப்பெற்று மனதினுற் சங்கற்பித்தும் பார்த் தும் வருகிறதே உபதேசமென்றுன்னி மனப்பாற்குடிக் கும் மதம் எண்ணில. ஆனல் வேதாந்திகள் உபதே சமோ மனதைக்கொண்டு செய்வதல்ல. இம்மனதை யும் புத்தி முதலானவைகளையும் இதற்குமேலான ஜீவ னையும் விட்டு நான்ருனுய், சத்குரு - பிரஹ்மம்—மோ க்ஷம் என மிஞ்சுவதாம். இன்னமும் சொல்லவேண்டி யிருந்தால், சிறப்புவகையில் †நானே பிரஹ்மம்: நானே

---

* ஒன்றில் மற்ருென்றின் ஞானத்தைப் பிராந்திஞான மென்பர்; அதுவே விபரியமும் விபரீதபாவனையுமாம்.

†பரமாத்மாவின் ஏகத்துவத்தை அறிவிக்கும் வாக்கிய மாம். மஹாவாக்கியாநுசாரர் தத்துவம் - துவம்தத் என்னும் ஐக்கியவலுவால் அதுநான் - நானது என அங்வயராய் நவின் ருனந்தமூறும் பெரியோர்களை ஸ்ரீமத் - தாயுமானுரும் பின் வருமாறு சிறப்பித்துள்ளார்.

“ வேதமுட ஞகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைக ளெல்லா

மோக்ஷம். இத்தகைய நாட்டம் என்பாலுள்ளதென முக்காலும் சத்தியமாகச்சொல்வேன். இவனதுநாட்டம் மஹாஅபூர்வம்! அறிந்து கொள்க மானவ.

மானவன் :—அழகழகு சாலவுமழகு; உடம்புடனுலாவுகிறீர், சமாதியிலிருக்கின்றீரோ? இஃதென்ன வாசாஞானமா? என்ன கூசாமல் பேசலாமா? *சமாதியாவது சுலபத்திலாகுங் காரியமா? அதற்கு முந்தியே

மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவாயெ டுத்து ரைக்கு
மோதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
யுண்டுப ணு ஞான மாகு
மூகமனு பவம்வசன மூன்றுக்கு மொவ்வுமீ
துபயவா திகள்சம்மத
மாதவினெ னக்கினிச் சரியையா திகள்போதும்
மியாதென்று பாவிக்கநா
ன்துவாத லாலுன்னை நானென்று பாவிக்கி
னத்துவித மார்க்கமறலா
மேதுபா வித்திடினு மதுவாகி வந்தருள்செ
யெந்தைநீ குறையு முண்டோ
விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே.”

*மானவன் வாசியோக - ஹடயோக - இலம்பிகாயோக முதலியவைகளினநுசாரமான சமாதியைப்பற்றிச் சிந்தித்தனர். அத்தகைய சமாதிக்குக் கண்டசமாதியென்றும் பெயர். சிஷ்யாளுக்கு ஆக்கியாபித்துக் குழிகளிலிறங்கிப் புதைந்து சில வாரங்கள் அல்லது பக்ஷங்களிருந்து பின்னர் மண்ணைத் தோண்டி ஆசிரியர் கடத்தை எடுத்துச் சில பரிகாரங்கள் செய்ததும் பிரக்ஞைதிரும்புவதாகக்கேள்வியுற்றும், பார்த்துமிருக்கிறோம். இவற்றால் ஆயுள் விருத்தியும் பல சித்துகளுமுண்டாவதற்கு ஏதுவான அமிர்ததாரை அக்காலத்தில் அண்ணு

சாஸ்திரோக்தமாய் *குகை அமைக்கவேண்டியது. சிலாக்கியமாய்ச் சமாதிசாதனைப்பியாசி யாவரையும் வரவழைத்துப் பேசி, அடங்கும் நேரத்தைவீசி, இலயமாவதுவே சமாதியென்பது யோசி. இஃதறியாய்போலும்; இன்னமும் சாஸ்திரங்களைவாசி, இன்றேல் என்போன்ற சாதுக்களைநேசி. தானவ! உன்னை ஞானவன், மோனவன், வானவன் எனக் கொண்டாடுகின்றனர்களே,

---

விலிருந்து பாய்வதாக வதந்தி. இவை மஹாபிரயாசை; வினையாளருக்குச் சித்திப்பதுண்டு. இத்தகைய யோகிகளையும், யோகத்தையும், யோகசாஸ்திரத்தையும் பழிக்கவாவது, நிந்திக்கவாவது கூடாது என்பது பெரியோர்கள் மொழியாயிருக்கிறது.

தானவன் ஞான சமாதியை வேதாந்தாநுசாரமாக உத்தாரணஞ்செய்ய பிரதிக்ஞை செய்துளார்.

*மஹான்களாம் சித்புருஷர்களும் மற்றும் ஞானவான்களும் அடங்கிய சமாதிஸ்தானங்களில் க்ஷேத்திரங்கள் விமரிசையாயிருக்கக் காண்கிறோம். அவற்றுள் சில வருமாறு:—

சிதம்பரம் - திருமூலர், மற்றும் பதினெண்பேர்; காஞ்சிபுரம் - காளாஸ்திநாதர்; கும்பகோணம் - கும்பமுனி; மயிற்றேசம் - மச்சமுனி; சீகாழி - சட்டைமுனி; நாகப்பட்டணம் - அழுகண்ணி சித்தர்; இடைக்காட்டூர் - இடைக்காடர், இடைமருதுநாரதர்; மதுரை - சுந்தரர், கமலமுனி; துவாரகை - பாம்பாட்டி சித்தர்; நாங்கணுச்சேரி - பிண்ணாக்கீசர் (புண்ணாக்கீசர்); திருக்கணங்குடி-கொங்கணர்; வயித்தீச்சுரம்-வசிட்டர்; திருவை - வால்மீகர்; காளஹஸ்தி - கருவூரார்; காசி - விஸ்வாமித்திரர்; திருவையாறு - அகப்பை சித்தர்; கடுவெளி - கடுவெளிசித்தர்; இப்படியே புராதன க்ஷேத்திரங்களிலெல்லாம் கண்ட சமாதியுற்றும் மஹா சமாதியுற்றுமிருக்கக் காணலாம்.

வெகுதக்கோர்கள், தனமிக்கோர்கள், இன்றல்லவோ அறிந்தேன் உனது கல்வித் திறமையை.

தானவன்:—ஐயா! மானவரே, மஹான்கள் ஜீவ காருண்யத்தின் பொருட் டவ்வண்ணமியம்பி யடங்கு வதுமுண்டு. சித்துப்பிரகாசங்களைக் கண்டு, சிஷ்ய வர்க்கங்கள் குருவிசுவாசத்தின்பொருட்டும், பிரஜை கள் பெரியோர் பக்தியின் திரட்டும், கடத்தைத் தகிக்க விடாது சகுணமூர்த்திகரத்திற்காகத் திருமூலமந்திர அளவையான் சமாதிப்பிரதிஷ்டை செய்வதுவுமுண்டு. இதனையே சற்குரவன் அபேக்ஷியாதிருக்கக்கொண்டு விண்டனர்கள் சித்தர்கள் பண்டு. அஃதை யியம்புதுங் கேண்மின், தெளிக கண்டு.

"சமாதியென்றால் அறையல்ல குகைதா னல்ல
தாயாரை நிறுத்துவதே சமாதி யாகும்
சமாதியென்று நாதவிந்தை நிறுத்திக் கொண்டால்
தாயார்க்குக் குடியிருப்பு அங்கே யாகும்
சமாதியி லிருந்தாலும் மனம் விடாதே
சற்குருவைக் காணவழி தடத்தைப் பாரு
சமாதியி லிருந்துமனந் தேறிக் கொண்டால்
சாவதுதா னில்லையப்பா சாட்சி தானே."

உத்தரகீதா.

"निर्मलं तं विजानीयात् षडूर्मिरहितं शिवम् ॥
प्रभाशून्यं मनःशून्यं बुद्धिशून्यं निरामयम् ।
सर्वशून्यं निराभासं समाधिस्यस्य लक्षणं ॥"

"நிர்மலம் தம் விஜாநீயாத் ஷடூர்மிரஹிதம் சிவம் ||
ப்ரபாசூன்யம் மனசூன்யம் புத்திசூன்யம் நிராமயம் |
ஸர்வசூன்யம் நிராபாசம் சமாதிஸ்தஸ்ய லக்ஷணம் || "

மாணவன்:—சந்தோஷம்! சந்தோஷம்!! வேதாந்தந் தாங்கள் சிரவணித்து வருவதாய் கேள்வியுற்றேனதற் கொவ்வத் தங்களது வாக்காமிர்தத்தால் குதூகலித் தேன். தங்களை மெத்தவும் புத்திசாலியென எண்ண வேண்டிவருகிறது.

தானவன்:—பக்த! புத்திசாலி யென்கிறாயே, புத் திசாலியென்பதென்ன, மனமென்பதென்ன? மற்று முள்ளது தானென்ன?

ஆத்மபோதம்

“देहेंद्रियमनोबुद्धि प्रकृतिभ्यो विलक्षणम् ।
तद्वृत्तिसाक्षिणं विंद्यादात्मानं राजवत्सदा ॥”

“தேஹேந்திரிய மனோபுத்தி ப்ரக்கிருதிப்யோ விலக்ஷணம்
தத்விருத்தி ஸாக்ஷிணம் விந்தியாதாத்மாநம் ராஜவத்ஸதா.”

என்ப, பட்டணத்திலே அரசனுடைய ஆக்ஞையினாலே மந்திரி முதலானவர் காரியங்களைச் செய்யும்போழ்து அந்த அரசனானவன் அவர்களுடைய வியாபாரங்களுக் குச் சம்பந்தப்படாமலெப்படி யறிந்துகொண்டிருக்கிறா னோ அப்படியே தேகம், இந்திரியங்கள், மனம், புத்தி, சித்த முதலான இவையாவும் அந்த ஆத்மாவினுடைய சந்நிதானபலத்தினாலே வியாபித்துக்கொண் டிருக்கும் போது, இவை இவற்றிற்குச் சாட்சியாக வறிந்து கொண்டிருக்கிற அறிவான என்போன்ற சுவாதீன் காந்தியுடைய சித்தாமா? உன்னை நீயறியாத குறை யால் இவ்வண்ண மியம்பினாய் கொல்லோ!

மானவன்:—என்னை சுவாமி, நீங்கள் யாவரென்றும் நான் யாவனென்றும் தெரியாமற்றான இங்கு நாடியோடித் தேடி வாடி வந்ததையகோ!

தானவன் :—நீ வேறு நான் வேறுபோல உன தஞ்ஞானதிருஷ்டியாற் புலப்படுகிறதாக்கும். ஞானதிருஷ்டிக்கோ நீயே நான் நானே நீ பின்னு மிரண்டென்பதில்லா அத்துவித சொரூபமாச்சுதே! அவ்வானந்தத்தை என்னென்றியம்புவல் ஓம்!

மானவன்:—அப்படியா! என்று மில்லாதவையும் நூதனமானவையுமான வார்த்தைகளை இயம்புகிறீரே! ஓகோ! நுமக்குப் புத்தி பேதகம்போற் காண்கிறது. அதிகம்படித்தா லப்படித்தானே! பயித்தியக்காரர். நீரிவ்வளவுநாட் சிரவண மனனஞ்செய்த தெற்றிற்கு? நீரும் நானும் ஒன்று பின்னும் நானே கடவுள் என்றும் அகங்காரங் கொள்வதற்குத்தானா?

தானவன்:—நீ பிரஹ்ம சூத்ரம், சிவஞானபோதம், சங்கரபாஷியம், உபநிஷத், கீதா பார்த்திருக்கிறாயா? வாசித்திருக்கிறாயா? உணர்ந்திருக்கிறாயா? ஷட்லிங்க தாத்பர்ய வாயிலாய் வஸ்துநிச்சய லட்சணார்த்தமறிந்திருக்கிறாயா?

மானவன் :—நான் பார்த்ததும், வாசித்ததும், உணர்ந்ததும் அறிந்ததுமில்லை. நீவிர்பார்த்து வாசித்து உணர்ந்து அறிந்த பலமே, நும்மை இவ் வகங்காரத்திலாழ்த்தி யழிந்துபோக ஏதுவாக்கிற்றுப்போற் காண்கிறது.

தானவன்:—சத்திய, க்ஞானம் அனந்தம் பிரஹ்மம். மானவரே! தங்களுக்குச் சிரே நமஸ்காரம் கடம் சமர்ப்பிக்கிறது, நினது வாய்மொழியின்வண்ணமே நிகழக்கடவது.

மானவன்:—இஃதென்ன! விந்தை! அழிந்து போகச் சாபங்கொடுக்க, நடுநடுங்கி வியசனிப்பதற்கு மாறாகச் சந்தோஷிக்கின்றீரே!

தானவன்:— பிரஸ்தானத்திரய சாராம்சமான ஞானயோகவாசிஷ்டத் துணிபாகத் திருவாய்மலர்ந்த தால் சந்தோஷிப்பதற்குத் தடையென்னை?

மானவன்:—அப்பா! பிரபலவித்துவானே! கடபடம் தடபுடலென அகராதி நிகண்டில் தேடிக்கொண்டிருக்கத்தக்க பெருத்தபெருத்த மலைப்பான வார்த்தைகளை யுபயோகிக்காது, சாதாரணமாகச் சுலபநடையிற் சம்பாஷியும். ஞானவாசிஷ்டத்தி லகங்காரத்தைப்பற்றி என்ன சொல்லி யிருக்கிறது? விள்ளுமின்!

தானவன்:—*அஹம்பிரஹ்மாஸ்மி யென ஜீவன் முக்தர்பாலிருவகையான அகங்காரங்களுளவென்றும், பெத்தர்பால் ஒருவகையான அகங்காரமுளதென்றும், அவற்றுள் முந்திய விருவகை அகங்காரங்கள் ஐக்கிய முக்தியைத் தாறபாலனவென்றும், பிந்திய

---

* யஜுர்வேத மஹாவாக்கியம். இருக்வேதம் - பிரக்ஞானம் பிரஹ்மம். ஸாமவேதம் - தத் துவம் அசி. அதர்வணம் - ஹயம் ஆத்மா பிரஹ்மம்.

வொருவகையான அகங்காரம், சகிக்கொணு ஜனன மரணுவஸ்தைக் கீடுபடுத்து மென்றும், வீமபாசதிடர் கதையிலியம்புவதை இதோ எடுத்து வாசித்துப் பார்.

மானவன்.—நான் வாசிக்கிற திருக்கட்டும். நீவிரே இயம்பும் செவி மடுப்பேன்.

தானவன்:—

"மூவகை யுலகி லிந்த வகங்கா மும்மை யென்று
மேவரு மிரண்டு நன்று மிகவுமொன் றீன மாகும்
யாவது *பாமு னாமே யீறில மெமைய லாதோர்
பாவனை யிலதென் றேரும் போதமே பரமாங் காரம்.

சென்னெல்வா லினுஞ்சற் றுகிச் செகங்களுக்கயலா யென்று
மன்னுது மெனக்கொள் போத மற்றையாங் கார மாகு
மிந்நிலை யிரண்டுஞ் சீவன் முத்தர்பா லிருந்தீ டேற்றித்
துன்னரு முத்தி நல்குஞ் சுழல்வுறு பந்த நல்கா.

காசா ணுதி மட்டா நானிவ னென்று காணுந்
திறமது தானே மூன்று மகங்காரஞ் செகத்தோர்க் கெல்லா

* அர்த்தவாதமாயிருத்தல் அதாவது:—

ஞானப்பிரகாச தீபிகை.

"எந்த வஸ்துவைக் கேட்டமாத்திரத்தில் கேட்கப்படாத வஸ்து கேட்கப்படுகின்றது. எந்த வஸ்துவை மனனம் பண்ணினமாத்திரத்தில் மனனம் பண்ணப்படாத வஸ்து மனனம் பண்ணப்படுகின்றது. எந்த வஸ்துவையறிந்த மாத்திரத்தில் அறியப்படாத வஸ்து அறியப்படுகின்றது. அதுவே பஞ்ச. கிருத்தியங்கட்காதார பூதமான கர்த்தவ்வியமாய் விளங்குகிறது" என்பதின் இலக்காயிருத்தன் முக்தரதகங்காரங்கள். இப்பதார்த்தத்தைப் புகட்டிவைப்பவனே சற்குரு. இதுதான் ஒரு மொழியுபதேசம். நிருவாண தீக்ஷையென்பது.

முரியதா மிகவும் பொல்லா துற்பவ மென்னு நச்சு
மரமெழு மூல மாகும் வருந்தியு மொறுக்க வேண்டும்.

கொடிதிது கொடிது சாலக் கொடிதிதன் கொடுமை யாலே
முடிவறு முயிர்க ளெல்லா மோகமுற் றறிவு கெட்டார்
கடிதிலவ் விரண்டினாலுங் கடிந்திதெவ் வளவு விட்டாய்
படிவுறவ் வளவே யெய்தும் பரமமாந் தற்ப தார்த்தம்.

எற்றமா மகங்கா ரங்க ளிரண்டினாற் பரம மெய்தி
யூற்றமா மவற்றை நீக்கி யோரகங் கரமு மின்றி
யாற்றலா னிற்றி யென்னி லறவுயர் பதம தாகுந்
தோற்றுட னனெ னமை சுருதிகள் சொல்லு முத்தி."

தெரியவந்ததா, மானவ?

மானவன்:—ஐயா, தானவரே! எமக்கலுவல் பெ
ஹாசாயிருக்கினும் அஃதெல்லாம் கவனியேன். பிரத
மத்திலும்மை அசட்டையா யெண்ணியிருந்தேன், இப்
போ துமது வாய்மொழியா லின்பஞ் ஜனிக்கிறது.
உமது ரூபமோ சிறியது உமது மொழியோ பெரியது,
ஆகையால் உட்காருகிறேன். சற்றுநேரம் சத்கால
க்ஷேபமாகச் சம்பாஷிப்போம்.

தானவன்:—ஐயா! உமதுருவஞ் சிறியதென்றீரே
எமது உருவம் வேறாயும், உமது உருவம் வேறாயும்
தோற்றன் மாத்திரமேயொழிய, பொருள் என்னைத்
தவிர வேறு யாதுங்கிடையவே கிடையாதே. இந்து
வேத பிரபலசுருதியின் றுணிபு இஃதன்றோ? என்னை
செப்பும்?

மானவன்:—சுவாமி! வந்தபோதவ சரமாயுளறிய
வண்ணமிப்போதும் பேசுவதடாதென சிந்திக்கின்

றேன். நீவிர் விசாரணை சீலர். யானத்தகையின்றிய பாமரன். என்கினும் பிராரத்த கன்மவிசேஷமோ யாதோ வறிகிலேன் எமக்குச் சுபாவசித்தமாகச் சாது புருஷர்களைக் கண்டால் அவர்களோடு சம்பாஷிக்க வேண்டுமென்ற அவாவும், யாதேனுமோர் அனுஷ்டானத்தைப் பெறவேண்டுமென்ற ஆவலும் உண்டாகிறதுண்டு. அப்பழக்கத்தால் சிலமஹான்களை யண்டி அப்பியாசங்களை உபதேசமாகப்பெற்றதுமுண்டு. அபூர்வமான காட்சிகளையெல்லாம் தரிசித்ததுமுண்டு. இவை நிற்க, எந்தவிதத்தி லுலகப்பற்றை யொழித்து, அத்தியாரோபத்தை நித்தியமெனக்கருது மஞ்ஞான அந்தகாரத்தை யழித்து, ஞானாதிகாரியாவதற்கு வழியுளதோ? அஃதை நீவிரே எடுத்தியம்பிக் கிருதார்த்தனாக்க வேண்டுகின்றேன். விநயம்! விநயம்!! விநயம்!!!

* தானவன்:—ஐய மானவரே! உம்மிடமிப்போது பக்குவத்துக் குரித்தான எண்குணங்களும் புலப்படுவதா லியம்புவதற்குத் தடையென்னை?

மானவன்:—அவ்வெண்குணங்க ளென்பது யாவை? சுவாமி விளக்கற்பாலதே.

தானவன்:—

ஒழுவிலொடுக்கம்.

"வேர்க்குங்கண் ணீர்ததும்புங் கம்பிக்கு மெய்ந்நடுங்கு
வார்த்தை நழுவு மனம்பதறுங்—கார்க்கதமாய்க்

* ஆர்ஜவகுருவென்னவேண்டும்—சிரத்தையுடன் கேட்பவர்க்கு ஒளியாமற் சொல்ல மனமுவந்தவர்.

காந்து முரோமாஞ் சலியாகுங் காதலித்தார்க்
கேய்ந்த குணங்கா ணிவையெட்டும்."

என்பதா லறிக. அன்றியும், ஜனனமரணாவஸ்தைக் காளாகாது ஐக்கியமுத்திப் பெருமார்க்கம் போதிக்கப் பெற

வள்ளலார் சாத்திரம்

"உலக நெருப்பைக் கடந்தொழியா ஞான வுததி மடுப்பேனோ!
விலகு குடும்பத்துயர் நீங்கி யெங்காட் டுறவி யாவேனோ! [னோ!
திலக மறையின் பொருளிதெனத் தேற்றுங்குரவன்காண்பே
கலக வுடலப் பிணிதணந்து கடவு ளையான் காண்பேனோ!"

என்ற தேட்டமுண்டாகுங்கா லுடனிகழுங் குணங் களிவையே. இஃதுமதிடம் நிகழ்வதைக் கண்டேன்; சந்தோஷங்கொண்டேன்; அச் செய்யுளையும் விண் டேன். இனியு முசாவும், வினாவிற்கு விடையளிக்கச் சம்மதியும்; பலவாறும் சிந்தைக்குச் சங்கற்பம் வாரா மையைத் தடுத்து, இயம்பும் அம்சத்தை யூன்றி மன னித்துவாரும், பக்தரே.

மானவன்:—அப்படியே, சித்தம் சித்தம் தடை யென்னை.

தானவன்:—தங்கள்மேலிருக்கும் அங்கவஸ்திரம் யாவருடையது? கவனித்து விடைபகரும்.

மானவன்:—என்னுடையது.

தானவன்:—* நீரெங்கு இருக்கிறீர்? அங்கவஸ் திர மெங்கிருக்கிறது?

---

* நியதிகளைந்துகாட்டல்: நீ சித்தென்றும் மற்றவை சடமென்றும் புகட்டுதல்.

மானவன்:—நானிங்கிருக்கிறேன்; வஸ்திரமிதோ விருக்கிறது.

தானவன்:—அங்கவஸ்திர மும்முடையதே யொழிய வஸ்திரம் நீராவீரா ?

மானவன்:—வஸ்திரத்தையுடைத்தானவன் நானுயிருக்க அங்கவஸ்திரமே நானென்று சொல்லப் பைத்தியமா ?

தானவன்:—சரிதான் அந்தக் கை யாருடையது ?

மானவன்:—என்னுடையது.

தானவன்:—நீ ரெங்கிருக்கிறீர்? உம்முடைய கை எங்கிருக்கிறது ? வஸ்திரமும்முடையதேயன்றி நீரே வஸ்திரமாவீரா? அப்படியே கை உம்முடையதேயன்றி நீரே கையாவீரா ? கையை யுடைத்தானவர்தானே நீவிர் ?

மானவன்:—ஐயையோ ! இப்படியே சிரம் யாவருடையதென்பீர். என்னுடையதென்பேன். நீ யெங்கிருக்கிறாய், தலை யெங்கிருக்கிறது என்பீராக்கும். இவ்வண்ணமே கண்டம், மார்பு, வயிறு, கால், விரல், செவி, விழி, நாசி, வாய், நா, நகம் இவையாவும் யாவருடையதென்றால் 'என்னுடையது என்னுடையது' என்பேன். 'நீ யெங்கிருக்கிறாய் இவைகளெங்கிருக்கின்றன' என்றால் நான் யாவனென்று செப்புவேன். என் கதிதான் என்னவாகிறது! இல்லாமலே 'நான்

நான், எனது எனது' என வீணே வழங்குவதாகின்றதே! என் செய்குதும்.

தானவன்:—பைத்தியக்காரனுடைய பைத்தியத்தைப் பார்த்தாயா? இப்போது யாரையா பைத்தியக்காரராக விளங்குகின்றவர்?

மானவன்:—

உபதேசவுண்மை.

"இத்தனையும் நானென்றே யிருந்த வெல்லா
மிழிவாக்கி நீயல்ல வென்று சொன்னீ
ரத்தனையு மாரோ தா னாரோதான்
ஆரியனே நானறியச் செப்பலும்." என்றபடியே

ஸ்ரீ தாயுமானவர்.

"பொய்திகழு முலகநடை யென்சொல்கே னென்சொல்கேன்
பொழுது போக்கே தென்னிலோ
பொய்யுட னிமித்தம் புசிப்புக்க லைந்திடல்
புசித்தபின் கண்ணு றங்கல்
கைதவம லாமலிது செய்தவம தல்லவே
கண்கெட்ட பேர்க்கும் வெளியாய்க்
கண்டதிது விண்டிதைக் கண்டித்து நீற்றலெக்
காலமோ வதை யறிகிலேன்"

என்றார். அதற்கிலக்காய் செய்தவத்திலீடான தங்களை என்னறியாமையினால்|பைத்தியக்காரரென வழங்கிய யானே பைத்தியக்கார னென்பதற் கையமென்னை?

தானவன்:—ஐயா! அப்படியா! சிலருக்குவஸ்து இன்னதெனத் தெரியாவிடினும், தெரிந்ததுபோல்

மனப்பாற்குடித்து வீணில் வாயடி, கையடியான வார்த்தைகளை மளமளவெனக்கொட்டி, இன்னமும் பலவாறாற்றிக் குதர்க்கஞ் செய்வதும்; அவர்கள் அடுத்தது பிழையென்று தெரிந்தும், பிறரறியின் அவமானம் வருமென்றஞ்சிக் கள்ளயோசனையால் நியாயமாகவோ அல்லது ஆதியில் சொன்னதை எவ்விதத்திலும் நிலை நாட்டியே தீரவேண்டுமென்றோ, அதனால் தமக்குக் கௌரதை யுண்டாகிறதாகவும் எண்ணிக் குரங்குப் பிடியாய்ச் *சலஞ்சாதிக்கிறதும் வழக்கம். ஆனால் நீவிரவ்வண்ணமாகாது நியாயத்தைக்கைகொண்டு நிதானத்துடன் விசாரணைசெய்யுங் குணமுடையவராயிருப்பதால் பெருந்தகையரேயாம். சந்தேகமில்லை.

மானவன்:— சுவாமிகாள் க்ஷணப்பொழுதில் நான் யாவனென்று தெரியாதுழலும்படி திக்பிரம்மையை விளைவித்து அறியாதவர்போல் வேறுயாதோ வார்த்தைகளைப்புகட்டி மயக்குகிறீரே! இஃது சரியன்று. தங்கள்பாற் சில கேள்விகேட்கிறேன். தம்மீதிருக்கும் வஸ்திரம் யாருடையது? தங்களுடையது. தாங்கள் வேறு வேஷ்டி வேறு அல்லவா? அப்படியே அவயவங்கள் வேறு அவயவங்களை யுடைத்தான தாங்கள் வேறு ஆதலால் தாங்கள் யாவர்? கிருபைசெய்யுமின்.

தானவன்:— என்னைத்தவிர வேறு கிடையவே

* சலம்—இதரபதார்த்தத்தைப்பிரகடனம் பண்ணி அபிமதபதார்த்தத்தைத் தோஷமாக உத்காடனம் பண்ணுவது.

கிடையாது. எனக்குக் கரமேது, பாதமேது? மனமுந் தோற்றம், புத்தியுந்தோற்றம், ஜீவனுந்தோற்றம்; ஏகமாகிய சாக்ஷிசைதன்யமே உள்ளது. அதைத் தவிர நானில்லாததால் அதுவே நான். விளங்கிற்று! இதைப் பற்றி நமது ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் அபிப் பிராயமாவது என்னெனில்:—

निर्व्वाणषट्कम्.

"मनोबुद्ध्यहङ्कारचित्तानि नाहं
न च श्रोत्रजिह्वे न च घ्राणनेत्रे ।
न च व्योम भूमिर्न तेजो न वायु
श्चिदानन्दरूपः शिवोऽहं शिवोऽहं ॥

நிர்வாண ஷட்கம்.

மனோபுத்தி யாங்கார சித்தம்நா னல்லன்
வளர்செவி நாமூக்குக் கண்ணுயி ரல்லன்
தினேவா காயங்கால் தீநீர்ம னல்லன்
சிதாநந்த ரூபச் சிவோஹம் சிவோஹம். (1)

न च प्राणसंज्ञो न वै पञ्चवायु
र्न वा सप्तधातुर्न वा पञ्चकोषः ।
न वाक् पाणिपादं न चोपस्थपायु
श्चिदानन्दरूपः शिवोऽहं शिवोऽहं ॥

ஜீவனு னல்லனே வாயுநா னல்லன்
செப்பிடு மேழ்தாது மைங்கோச மல்லன்
தீவர வாக்குமுற் கர்மேந்த்ரிய மல்லன்
சிதாநந்த ரூபச் சிவோஹம் சிவோஹம் (2)

न मे द्वेषरागौ न मे लोभमोहौ
न मे मदो नैव मात्सर्य्यभावः ।
न धर्म्मो न चार्थो न कामो न मोक्ष
श्चिदानन्दरूपः शिवोऽहं शिवोऽहं ॥

விருப்பு வெறுப்பு லோபம் மோகமல்லன்
வெம்மதத் தோடுமாற் சரியனு மல்லன்
தெருளறம் பொருளின்ப வீடுமே யல்லன்
சிதானந்த ரூபச் சிவோஹம் சிவோஹம். (3)

न पुण्यं न पापं न सौख्यं न दुःखं
न मन्त्रो न तीर्थं न वेदा न यज्ञाः ।
अहं भोजनं नैव भोज्यं न भोक्ता
श्चिदानन्दरूपः शिवोऽहं शिवोऽहं ॥

வான்புண்ய பாபமுஞ் சுகதுக்க மல்லன்
மந்திர தீர்த்தம் வேள்விம்மறை யல்லேன்
தேன்போஜனம் போஜ்ய போக்தாவு மல்லன்
சிதாநந்த ரூபச் சிவோஹம் சிவோ ஹம். (4)

न मृत्युर्न शङ्का न मे जातिभेदः
पिता नैव मे नैव माता न जन्म ।
न बन्धुर्न मित्रं गुरुर्नैव शिष्य
श्चिदानन्दरूपः शिवोऽहं शिवोऽहं ॥

இறப்பும் பயஞ்சாதி வித்யாச மில்லேன்
என்னை யீன்றாரில்லை யான் பிறப்பில்லேன்
திறளான வன்புறவு சீட குருவில்லன்
சிதாநந்த ரூபச் சிவோஹம் சிவோ ஹம். (5)

अहं निर्विकल्पो निराकाररूपो
विभुत्वाच्च सर्वत्र सर्वेन्द्रियाणां ।
न वा सङ्गतं नैव मुक्तिर्नमेय
श्चिदानन्दरूपः शिवोऽहं शिवोऽहं ॥

மாறுதவன்நான் நிராகார னும்நான்
வாழ்பவன் சாக்ஷியாக் கருவிகட் கென்றுஞ்
சேராதபற்றுளேன் வீடறி யேன்நான்
சிதானந்த ரூபச் சிவோஹம் சிவோ ஹம். (6)

வள்ளலார் சாத்திரம்.

"நல்ல குலத்திற் பிறந்து நல்லாரைச்சேர்ந்தொழுகி
நல்லறிவு பெற்றுடைய நன்மாணு—நல்ல
சிவம் வேறே யென்றெண்ணிச் சிந்தை கலங்காதே
சிவ மென்ற நீயே சிவம்."

ஒழிவிலொடுக்கம்.

"என்னுணை யென்னுணை யென்னுணை யேகமிரண்
டெண்ணுமற் சும்மா விருவென்று - சொன்னுன்
திருஞான சம்பந்தன் சீகாழி நாடன்
அருளாளன் ஞானவிநோ தன்."

மானவன்:—சுவாமின்! சுவாமின்! அவயவங்களைப்பற்றி வேறென்று சொன்னவை யென்னவோ கிரமந்தான்; ஆனுல் மனம்வேறு, ஜீவன்வேறு, நீர் வேறென்பதைப் பற்றியசந்தேகத்தை யாராய்வதெங்ஙனே?

தானவன்:—ஐயா "**என்னுடைய** மனம் என்னவோ ஒருவகையாயிருக்கிறது" என்றபோது மனத்

தையுடத்தானவர் வேறென்று புலப்படவில்லையா? பின்னும் கோபாவேசத்தாற் சண்டைசெய்கையில் ஒருவருக்கொருவர் "அடா என்னுடைய உயிர்போனாலும் உன்னை நான் விடமாட்டேன்" என்கிறார்களல்லவா? அக்கால் உயிரை உடைத்தானவன் வேறுமொருவனுண்டென்று புலப்படவில்லையா?

மகா வாக்கியம்.

"இந்திரிய மகமென்றாலு மென்கணென் காலென் கையென்
றுந்துமுட் கரண நீயா யுன்மன மென் கையாலே
யந்தவுட் கரணந் தானு மகற்றிய சீவ னீயாய்ச்
சந்தத மென்ஜீ வன்றா னென்கையாற் சாட்சி யாவாய்."

என்பதால் உய்த்துணர்க.

மாணவன்:—ஆமாம் தெரிந்தது, தெரிந்தது, நமஸ்காரம்.

தானவன்:—உன்னுடைய வஸ்திரம், உன்னுடைய அவயவம், உன்னுடைய மனம், உன்னுடைய ஜீவன் என்கையில் இவைகளையுடைத்தான நீ வேறல்லவா?

மாணவன்:—சந்தேகமின்றி நான்வேறுதான்?

தானவன்:—நீ வேறு என்று சம்மதிப்பதால் நீ யெங்கே இருக்கிறாய்? சொல்.

மாணவன்:—சிரமுதலான அவயவங்களும், மனம் முதலான அந்தக்கரணங்களும், ஜீவனும், நானல்லவென்றும், இவைகளை யுடைத்தான வேறு பதார்த்தங்

தான் நானென்றுந் தெரிந்ததேயொழிய, இன்ன பதார்த்தந்தான் நானென்று புலப்படாதிருக்க விப்ப தார்த்த மிருப்பதெங்கே என்றால் இருக்குமிடந் தெரிவ தெவ்வண்ணமாகும்!

தானவன்:—அப்படியானால் நீ யாரென்று தெரிய வில்லையே?

மானவன்:—தெரியவில்லையே!

தானவன்:—யாருக்கையா நீ யாரென்று தெரிய வில்லை?

மானவன்:—எனக்குத்தான் தெரியவில்லை.

தானவன்:—எனக்குத்தான் தெரியவில்லை யென் கிறாயா! எனக்கு என்றது அவயவத்திற்கா? மன திற்கா? ஜீவனுக்கா?

மானவன்:—என் அவயவம், என்மனம், என்ஜீவ னென்கிறபோது அவயவமுதலிய விவைகள் தம்மைத் தாமறியாத சடமாகின்றனவல்லவா? அவைகளை எற் றிற்கிங்கு கொணர?

தானவன்:—அவைகள் சடமென்று யாருக்குத் தெரிகிறது?

மானவன்:—யாருக்கோ தெரிகிறது. அதுதா னையா நான்.

தானவன்:—தெரியவந்ததா? தெரியவந்ததா? இப்போது நீ ரியாரென்று சொல்லும், சொல்லும் பார்ப்போம்.

மானவன்:—சுவாமின்! என் கதியென்னென்
றறைகுவன்!

கைவல்யநவநீதம்

"நனவுகண் டதுநான் கண்ட நனவுள நினைவு நீங்கிக்
கனவுகண் டதுமி ரண்டுங் காணாத சுழுத்தி கண்டும்
தினமனு பவித்த லொக்குந் தெரியவு மில்லை சற்றே
மனதினி லுதிக்கும் பின்னை மறைக்கும தருளு வீரே."

என்பதின்படி சற்றுத் தெரிந்தாற் போலவுமிருக்கிறது, பின்னும் என்னவோ, இன்னது தானென்று ஸ்பஷ்டமாய்ப் புலப்படவுமாட்டேனென்கிறது. "உன்னை நீ யறிவாயாகில் உனக்கொரு கேடுமில்லை" என்று நவின்றதும் இவ்விந்தையை நோக்கித்தான் போலிருக்கிறது. இவ்வளவு விசாரத்தையுண்டு செய்கிற தங்களது மகிமையே என்னை யாவனென்று காட்டிவைப்பது தர்மமாயிருக்கிறது. எம்போலிகளுக்குக் கரதலாமலகம்போல் நிஜவடிவைக் காட்டவல்ல மஹாகிருபாநிதி தாங்களேயாமென்று யாதொரு சந்தேகவிபரீதமின்றி யுணர்ந்துகொண்டேன்; கிருபைபாலியும். கருணகடாக்ஷமீயும் சுவாமி.

தானவன்:—உன்னை அறியாவிட்டா லென்னை? போமையா, நேரமாகவில்லையா? வீட்டார் எதிர்பார்ப்பார்கள்.

மானவன்:—அபயம்! அபயம்! குருபிரபோ, இன்னுந் தாமதிக்கவுமாகுமோ?

சொரூபசாரம்.

" தன்னைத்தான் றேடாச் சதிகார ரேன்பிறந்தா
ரன்னத்தால் வந்தவுட லார்தாமார்—முன்னம்
விடுத்தவுட லெத்தனையோ மீண்டுமீண் டின்பா
வெடுத்த வுட னாரு யிரம்."

திருமூலர் மந்திரம்.

" தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமற் றானே கெடுகின்றான்
தன்னை யறியு மறிவை யறிந்தபின்
றன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே "

" தன்னை மறந்தவன் பிறந்திறந்து தீராத சுழற் காற்றுற்ற செத்தைபோற் சுற்றிச்சுற்றிப் பேராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் " என்பதுவும் ஆப்தர் உபதேசமொழிகளாதலால் அவைகள் இங்கு கவனத்துள் வருகிறதே! பீதியை யுண்டாக்குகிறதே! மனம் பதறுகிறதே!

தானவன்:—ஐயன்! நீ யதிகாரி யென்பதாயிற்று; சந்தோஷம்! சந்தோஷம்!! மகா ஞானமும், யூகமும், பாகமும், தாகமுமுடையவ னென்பதி லையமில்லை. உன்னை மஹாவாக்கியத்திற் கிலட்சியார்த்தமா யியம்பத் தடையில்லை யென்கினும்,

ஞானவாசிட்டம்.

" இயற்கைகுணஞ் சோதித்து முன்னே பின்னே யாவையுமாம் பிரஹ்மம்நீ யென்னல் வேண்டும், வியப்புற வாசையிலுழல்வார்க் கிவ்வா றோதின், மீளாத நிரயகில் வீழ்த்த தாகுந், தியக்குறு போகத்தாசை தீர்ந்து புந்தி தெளிந்தவனைப் போல்

வார்க்கே திகழத் தோன்று, மயக்கமற வுணர்த்தவல்ல குருவைக் கிட்டா வருந்தியுந்தன் பிறப்பறுக்கு மகனு மாங்கே" என்பதினுற்ருன் *அஞ்சவேண்டிவந்தது.

மாணவன்:—பாரமார்த்தகுருவே! எனது குருபக்தியை வாக்கினுலும் காயத்தினுலும் வெளிப்படுத்தாதிருக்கினும் கடையேனுள்ளத்தில் தேவரீர் ஆட்சிகொண்டிருப்ப துண்மையன்ரு! அவற்ரு லிவ னுடல் பொருளாவி மூன்ருலுந் தத்தமாயினு னென்பதே திண்ணம். குரு ஆக்ஞாவிற்கு மாறுபடுவதுமுண்டோ? பாதபதுமம் பணிகின்றேன்; ஆவல் தீர என்னை யாவனென்று நிரூபியும் மஹாத்மாவே.

உபதேசவுண்மை.

"கருப்பாச வலையதனிற் புக்குப் புக்குக்
கலக்கமுறு மெனைத்தடுத்துக் கருணையாலே
விருப்பாக ஞானவழி யெளிதிற் காட்டி
வீடுபெறச் செய்தருள் சற்குருவே போற்றி."

தானவன்:—உணர்க.

உபதேசவுண்மை.

"உன்ணு லறியப் படும்பொருள்க ளுன்னை
யறிய மாட்டாவால்
உன்ணு லறியும் பொருளெல்லா முனக்கு
விடய மாங்கண்டாய்
உன்ணு லறியும் பொருளழியு மொருக்கா
லமுநீ யழிவதில்லை

---

* கனிஷ்டர், மத்திமர், அநாதிகாரிகள். இலட்சியார்த்தோபதேசம் பெறுவதற்கு உத்தமனே அதிகாரி.

உன்னு லறியும் பொருளைவிடுத் துன்னை
விசாரித் தறிவாயே."

"உன்னைநீ யறிவ தற்கிங் குறுதியாந் திட்டாந் தங்கேள்
மன்னிய தசம னேபோல் மருவிய *கரண நான்கும்
சொன்ன ‡விந் திரியங்க ளைந்து தொகையுறு மொன்ப தோடு
முன்னுடன் பத்தென் றெண்ணி யுன்னைநீ யறிகு வாயே."

"அந்த வறிவே சைதன்ய மதுவே யுனது வடிவாகும்
அந்த வறிவே யுபாதிவசத் தாகும்போது முக்கியமாம்
அந்த வறிவே லக்ஷியமா மழுந்து முபாதி தனைப்பிரியில்
அந்த வறிவே நீயாகு மறியும் வேத முடிவிதுவே."

"तदेजति तन्नैजति तद्दूरे तद्वन्तिके ।
तदन्तरस्य सर्वस्य तदु सर्वस्यास्य बाह्यतः ॥"

ததேஜதி தன்னைஜதி தத்தூரே தத்வந்திகே !
ததந்தரஸ்ய ஸர்வஸ்ய தது ஸர்வஸ்யாஸ்ய பாஹ்யத: ||

இராமானுஜபாஷ்யம்—"பிரஹ்மமானது சலிக்கிறதுபோலத் தோன்றும், உண்மையில் சர்வ வியாபியான பிரஹ்மமானது சலிக்கிறதில்லை. அந்த பிரஹ்மமானது அஞ்ஞானிகளாகிய அசுரப்பிரகிருதிகளுக்குத் தூரத்திலும், ஞானிகளாகிய தேவப்பிரகிருதிகளுக்குச் சமீபத்திலு மிருக்கிறது. அந்த பிரஹ்மமானது இந்த பிரபஞ்சத்துக்குள்ளேயும் வெளியேயு மிருக்கிறது" என்று இந்தமந்திரத்தால் சொல்லுகிறது.

ஹே! மானவமணியே, பிரஹ்மமென்றாலும்,

---

* மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
† மெய், வாய், கண், மூக்கு, செவி.

ஆத்மா, சாக்ஷி, அறிவென்றாலும் நீ நான் அது என்பதே: தெளிக.

மானவன்:—சுவாமிகளே இவைகளால் அறிவே நானென்று தெரிந்தேன் என்கினும் இன்னமுந் திடமாய் உள்ளது உள்ளபடி புலப்படவில்லையே.

தானவன்:—சிஷ்ய! அதத்துவாவிருத்தி, தடத்தம், சொரூபம், என தன்னைப்புகட்டும் மார்க்கங்கள் மூன்றுள. இதுவரைப் பேசியதிற் சொரூபநிலையாம் வழியைக் காட்டியதின்று. அங்ஙனமெடுத்தியம்பும் விகிதாசிரியர் காண்பதுவுமரிது; காண்கினும் பெறுவதற்குரித்தான அதிதீவிரதர சீடர் நேருவதுந் துர்லபம். எப்படியெனில்:

சுப்பிரமண்யர் ஞானம்.

(யதார்த்தகுரு)

"பொன்வெள்ளி செய்பவனும் பெரியோனல்லன், புகழான வஷ்டசித்தி பெரியோனல்லன், முன்னின்ற வைத்தியனும் பெரியோனல்லன், மூச்சடங்கி யெழும்புபவன் பெரியோனல்லன், சின்னமென்ற குழியிருப்போன் பெரியோனல்லன், திரமாக மௌனமிட்டோன் பெரியோனல்லன், தன்னிலையை யறிந்தவனே பெரியோனுகுந், தாரணியி லறியாதார் சண்டிமாடே."

அத்துவிதவுண்மை.

(பக்குவமில்லாருக்குச் சத்துபதேசித்தும் அப்பிரயோஜனமெனல்.)

"மேலாஞ் சதுட்ட சாதனங்கள் மேவி
நிறைந்த பேர்க்குரைக்கின்

மேலா மதுநா மெனத்திடமாய் விளங்குமவை
யில்லாத வர்க்கு
மேலாம் பரமன் மான் மழுவாய் விளங்கி
யுரைத்தும் விளங்காது
மேலாஞ் சாதனங்கள் வரமேவ வேண்டுஞ்
சாது சங்கம்."

வள்ளலார் சாத்திரம்.

"பக்குவமி லார்க்கருளல் பாவிக் கறமோதல்
மட்கலத்தைப் பொன்னுக்க வாஞ்சைகொளல்-சொர்க்கமிலாக்
கன்னிக்குக் காமனூல் கட்டுரைத்தல் கண்ணிலர்க்குப்
பொன்னாரம் பூட்டுதல் போலும்.

ஒருகோடி சூரியர்க ளொக்கவுதித் தாலுங்
குருடர்க் கிருளகலாக் கோட்போன்—மருடீர
வாசானு ரைத்தாலு மஞ்ஞானச் சித்தர்க்குப்
பாசாதி நீங்காது பார்."

என்பதே துணிபு.

மானவன் :—குரு சுவாமி! ஞாயம், சோதனை, பொருத்தம் எனுமங்கங்களைத் தெள்ளெனப்புகட்டும் அருளாளர் நீவிரே உத்கிருஷ்டமான வாசிரிய பீடமென்பது அடிமையி னுறுதியான நம்பிக்கை. இனியுஞ் சோதிக்காதியம்புக! திருவாய்மலருக! குணக்குன்றமே யருளுக! அடியேன் அடியேன்.

தானவன் :—"சோஹம்" சொல்லுதும். நாட்டத்தில் சதா இருப்பேனென்று நிர்ணயஞ் செய்யச் சித்தமா?

மானவன் :—நான் யாவனெனத்தெரிந்தும் சதா நாட்டத்திலில்லாவிட்டால் திரும்பவஃதைக் கைநழுக விடவும் நேரிடுமோ?

தானவன் :—நேரும் நேரும் தடையின்று.

கைவல்லிய நவநீதம்.

"நீநானென் றிரண்டி லாம னிறைந்தபூ ரணமா யெங்கும்
நானகத் தெளிந்த ஞான நழுவுமோ குருவே யென்றான்
தானாகும் பிரம ரூபஞ் சற்குரு நூலாற் றோன்றும்
ஆனாலுந் தடைக ளுண்டே லநுபவ முறைத்தி டாதே."

மானவன் :—என்னை சுவாமி, ஞானமெனும் அக்கினியின்முன் அஞ்ஞானமெனும் பருத்திப்பொதி வெந்து நீறாகாதா?

தானவன் :—"அக்கினி கட்டுப்பட்டா லற்பமுஞ் சுடமாட்டாது மக்கின ஞானத்தாலே வந்த பந்தமும் வேவாது" என்பதாற்றெளிக.

மானவன் :—பின்னை யெவ்வாறு தன்னை மறவா திருந்து கடைத்தேறுகிறது? எங்குருவே.

தானவன் :—"சிக்கெனப்பழகிக் கேட்டல் சிந்தித்த றெளிதலாலே விக்கின மடஞ்சந்தேகம் விபரீதம் போக்குவாயே"

மானவன் :—என்னென்னை இடையூறு? (2) வருவானேன்? (3) வந்தாலென்னை? (4) போக்குவ தெப்படியோ?

தானவன் :—“ தடையெனவை யெனிலஞ் ஞான சந்தேக விபரீ தங்கள், படர்செயு மிந்த மூன்றும் பலசன்மப் பழக்கத் தாலே, உடனுடன் வரும்வந் தக்கா லுயர் ஞானங் கெடுமி வற்றைத், திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்த றெளித லாலே.”

மானவன் :—அப்படியே, செய்யத் தடையில்லே, குருபிரபோ! இனி சொரூபநிலேயை திருவாய் மலர்ந்தருள்க!

தானவன் :—அறிவுதான் நீயென்று சொன்னது கவனமுண்டே? எவ்வறிவெனின் சுட்டறிவுகெட்ட *சுகாதீத அறிவுதான் நீ.

மானவன் :—அறிவினு மிருவகை யுளதாயிற்றே? இன்றுதான் வேதாந்திகளுடைய ஆராய்ச்சி, யுக்தி பூர்வகமான சாக்ஷாத்சாம்பிரதாயமென்று புலப்பட்டது. தாங்களியம்புவதே வோர் சார்பாயிருக்கின்றது. சில சுவாமிகள் சரியையென்றும், கிரியையென்றும், யோகமென்றும், ஒவ்வொன்றை யியம்புகிறார்களே, இவையாவும் என்னேயோ; இத்தகைய வுபதேசங்களே நீவிரியம்பாத தென்னே சுவாமி?

தானவன்:—ஐய! நீவிர் வினவிய திரண்டு கலேகளுடைத்தா யிருப்பதா லவற்றின் பேதத்தை விளக்குதும்.

---

* சத்சித் ஆநந்தலக்ஷணம் பொருந்தியது. அதற்கு அறியாமை யென்பதே கிடையாது.

கைவல்லிய நவநீதம்.

" தினமு மண்ணுகர் பிள்ளை நோய்க் கிரங்கியே
தீம்பண்ட மெதிர்காட்டிக்
கனமருந்துக ளொளித்துவைத் தழைக் கின்ற
கருணைநற் ருய்போலே
மனைய றங்கள்செய் மகங்கள்செய் நன்றென்று
மலர்ந்தவா சகஞ்சொல்லும்
நினைவு வேறுகாண் சுவர்க்ககா மிகளந்த
நிண்ணயந் தெரியாரே."

என்பதால் சரியையாதிக ளுத்தம அதிகாரிக்கு அனுவசியகமென்பதாயிற்று. ஆனல் பாரம்பராசாதனப்பியாசிகளுக்கு வழிபடுமார்க்கமாகிய தந்திரகலை, மந்திரகலை, யென்பதி லடங்குவதே யன்றி, ஐக்கிய முக்தி யென்று நவிலும் அறிவிற்சேர்க்கும் உபதேசகலை யாகா.

விசாரசாகரம்.

"मल विक्षेप जाके नहीं, किंतु एक अज्ञान ॥
है चवसाधन सहितनर, सो अधिकृत मतिमान ॥"

"மல விசேப ஜாகே நஹீம், கிந்து எக் அஞ்ஞான் ||
ஹ்வை சவஸாதன் ஸஹித்நர், ஸோ அதிகுருத் மதிமான்." ||

மலம் (பாவம்) விக்ஷேபம் (சித்தசாஞ்சல்யம்) அஞ்ஞானம் (பிரஹ்மமாந் தன்னை மறந்த பேதைமை) எனும் முத்தோஷங்களையும் நிவர்த்திக்க, சதுர்வேதங்களிலும் கர்மம், உபாசனை, ஞானம் எனும் முக்காண்டங்களும் விகசிதமாயிருப்பதில் சரியா, கிரியா, யோகம் என்பவை, கர்மோபசன காண்டங்களி லந்தர்கதமாம்;

அவற்று விருதோஷங்களையுமகற்றிய ஸாதனசதுஷ்டய சம்பன்னர் ஞானகுருவின்பால் விசாரணைமுகத்தால் அஞ்ஞானதோஷத்தை *நீக்கிக்கொள்ளத்தக்கவர்.

மானவன்:—ஜீவகாருண்ணிய பிரபோ! சரியை என்றும் கிரியை என்றும் நவில்கின்றீரே, இதனை விளக்கி அடியேனுக்குப் புகட்டிவைக்கவும்.

தானவன்:—அப்படியே செவ்விதாய் விளக்குதும், கவனஞ்செலுத்துக.

வள்ளலார்.

"ஐம்புலன் வழியோடி மானிடரொலா மழிவார்" என்றும்.

"சத்தத்தா லசுணை மாயும் பரிசத்தாற் றந்தி மாயும்
வெற்றிசே ருருவத் தாலே விட்டிலம் பறவை மாயும்
பற்றியா ரிரதத் தாலே பாணிமீ னங்கண் மாயும்
மொய்த்தகந் தத்தி னாலே மூசுவண் டினங்கண் மாயும்.

ஓதிய வசுணை மாதி யொன்றொன்று லழியா நிற்குங்
காதினாற் றெக்கான் மூக்காற் கண்ணினா னுவா விந்தச்
சாதிமா னிடர்க ளெல்லா மஞ்சினாற் சாகா நிற்பர்
போதமே விட்ட காலம் புலன்வழி போகா ரன்றே."

என்றுமிருப்பதால் பிரதமத்தில் ஐம்புலனையுஞ் சரிப்படுத்துவது †சரியை. அதன் பின் ஐந்தையும் கிரகித்து நிற்றல் ‡கிரியை. (ஐந்து புலன்வழியிற் போகாது

---

*மானவன் உத்தமாதிகாரி யாதலால் அஞ்ஞானப்பிணியையோட்டத் தானவன் ஞானகாண்டத்தைப் பிரதிபாதிக்க நேர்ந்தது.

†சர்யா - चर्या=Walking or practising - அப்பியாசம்.

‡க்ரியா - क्रिया=Acting or perfecting - அனுஷ்டானம்.

தடுத்து) அதற்குமேல் யூகித்து நோக்கல் *யோகம். அப்போது யூகித்ததால் யோகி †ஞானம் (அறிவு) ஆவாய் என்பது பொருள். அறிக.

அங்ஙனம் நடத்துவதை க்ஷேத்திர மூர்த்திகர தரிசனைக்குச் செல்பவர்களுடன் சென்று நோக்குங்கால், அவர்கள் பெஹு திரவியங்களைச் செலவுசெய்து தூர தேசத்திலுள்ள புண்ணிய ஸ்தலங்களுக்கேகி ஸ்நாநுஷ்டானங்களெலாம் முடித்து, தூபதீபநைவேத்திய ஆராதனை யாவும் சோடசோபசாரமாகச் சமர்ப்பித்து, மூல விக்கிரகத்தின் முன்னுள்ள திரைச்சீலையை அர்ச்சகர் ஒதுக்கியதும் 'ஹர! ஹர!' அல்லது 'நாரயண! நாராயண!' என்று செப்பிய வண்ணம் நமஸ்கரித்துக்கண்களையும் மூடிக்கொண்டு சாந்தமாய் சிறிதுபோது அசைவற்று நின்றுவிடுவதாகப் புலப்படுகிறது. பல்லாயிரங் காததூரஞ் சென்றும் மூர்த்திகரத்தையே தரிசித்துக்கொண்டிராது கண்களை மூடிக்கொள்ளும் காரணமென்னவென்று கவனித்துநோக்கும்போது, பஹிர்முகத்தில் கண்டவண்ணம் அந்தர்முகநாட்டமும் சித்திசெய்கிறார்களென் றேற்படுகிறதல்லவா? இவர்களுடன்செல்லும் பெண்மணிகளும் சிறுவர்களுங்கூட பெரியோரின் கருத்தறியாது அவர்கள் கண்ணைமூடிக்கொண்டதால் தாங்களும் ஆலயத்திற்குச்சென்றால் கண்களை மூடுவதி

* யோக - योग=Union - ஐக்கியம்.

† ஞான - ज्ञान=Konwledge - அறிவு.

தான் ஒழுங்கென்று அநுசரிப்பதையுங் காண்கிறோம். உள்ள இரகசியத்தைப் பல்லோருக்கும் போதிப்பது மேதாவிகளுடைய முக்கிய கடமை போலும்.

மானவன் :—இவ்வுபந்நியாசம் மெத்தவும் சந்தோஷிக்கத்தக்க விதமாயிருக்கிறது. எவ்வண்ணமைந்தையுஞ் சரிப்படுத்துகிறது, சரியை அனுசரிப்பவர்கள் பெரும்பாலும் கோவிலுக்கல்லோ செல்லுவது பழக்கமாயிருக்கிறது ?

தானவன் :—பசுவெனப் பொருள்படும் கோவெனும் பதமும், வீடு - ஸ்தானம், என் றர்த்தப்படும் இல் என்னும் பதமும் சேர்ந்து, கோவில் அல்லது கோயில் என்ருகிறது. ஈண்டு ஆ+லயம் ஆலயம் என்ருகிய இவ்விரண்டின் வழக்காய் ("ஆலய நகரங் கோயிலானையின் கூடம்" என்ப) பசு வாகிய ஜீவன் லயம் ஆகும் ஸ்தானம் என்றேற்படுகிறது. ஜீவன் ஐம்புலன்வழியோடி விஷயாகாரமாகாது, ஓர்வஸ்துவின் பானுட்டத்தைச் சரிப்படுத்த போந்தது ஸ்தலம். இதன் குணம் எவ்வண்ணமெனின் : சத்தம் - ஸ்பரிசம் - ரூபம்-ரசம், கந்தம் என்னும் ஐவகைப் பெயர்வழிகள் வியர்த்த விஷயத்திலாழ்ந்து மோசம் போகாது தடுக்க, ஆலயத்துள் பிரம்மதாளம், மணியோசை, சங்குநாதம், டமருககோஷ்டம் முதலானவை முழங்குவதால் செவியஃதிற்கீடாகிறது ; பரிசத்திற்காக ஏகாங்கம், துவிதாங்கம், சாஷ்டாங்கம் முதலியன முறை முறையாகக் காயஞ்சமர்ப்பிப்பதால், நிக்ருஷ்டமான வேறு

பரிசம் வருவதற்கிடமில்லை; சகுணை மூர்த்திகரத்திற்கு ஆடையாபரண பூஷணாலங்கிருதஞ் செய்து, விதம் விதமான கிளைகளாகவும், கும்பமாகவும், தீபாராதனை மனோகரமாகச் சுழற்றிக் காண்பிப்பதாலும் அத்திருவுருவையே விழிகணைக்குவதாலும் ஏனைய வஸ்துக்களைத் திருஷ்டி கவர இடமில்லை; அவரது நாமங்களை "விக்கின விநாயகாயநம: ஷண்முகக் குருவேநம: பராசக்தியேநம: வரதராஜாயநம: நடராஜாயநம:" என நாவாலுச்சரித்து உருசிப்பதால் இவ் விரதத்திலாழ்கிறது. தூபம், மட்டிப்பால், சாம்பிராணி சந்தனம், புனுகுபில்லை, புஷ்பங்களின் சுகவாசனை, பன்னீர் இவைகளது நறுமணம் வெளிகந்தத்திற்கு விடாது தடுத்து கந்தத்தைக் கவருகிறது. ஒருவாறு இவ்வண்ண மைம்புலனையும் ஓர் ஸ்தானத்தில் லயப் படுத்துவதால், பசு லயமாகிறான். இஃதாலேயே அந்த ஸ்தானத்திற்கு ஆலயமென்றும் கோவிலென்றும் நாமங்கள் வழங்கப்படுகிறது. சரியை அனுசரிப்பவர்கள் கோவிலுக்குப்போவது மேற்கூறிய பயனைக் கருதியே. தெரிந்ததா? மேலும் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளும் இவற்றைப்பற்றி

"தலங்கள் சுற்றித் திரிதல்நதி மூழ்கல்புட்பந்
 தனையெடுத்து சாத்தல்தொடுத் திடுதல்கோயில்
துலங்கமுடித் திடுதல்விளக் கிடுதல் கூட்டல்
 சுத்திமெழு கிடுதல் பெரியோரைக்காணில்
வலமொடுவீழ்ந் தெழுந்துகரங் குவித்தல் நோன்பு
 வருந்தியிடு தல்குளங் கழிவு செய்தல்

நலங்கள்பெறுஞ் சரியைவழி நடத்தினோர்கள்
நல்லறிவு வாழ்வுமிகப் பெறுவர்தாமே."

"நறுமல ரிளநீர்பழந் தேன்பாலோடு
நல்லகந்த வர்க்கமுடன் றூபதீபம்
பெறுஞ்சிவனைக் கணபதியைப் பூசைசெய்தல்
புண்ணியபா பங்கள்தெரிந் தோதல்நூல்கள்
சிறிதுபடித் துயிர்கள்வதை யாமல் நித்தம்
செய்தொழிலுங் கிரியைவழு வாமல் நின்றோர்
உறுதி பெறும் பலனறிவு மீத லோடு
முயர்ந்தகுடி யாகிமிக வாழ்வர்தாமே."

"உள்ளகரு விக்கு லங்கள் தொண்ணூற் றாறு
முற்றவத்தை யைந்துமா தாரமாறு
மெள்ள வறிந் தைம் பத்தோ ரக்ஷரமும்
விளங்குசதா சிவனையறிந் துட்புகுந்து
கள்ள மனக் கவலை யொழித் திருகலையே
கருதிவா வழைத்துமொரு வழியிலேற்றிக்
கொள்ள வல்ல பேருமெழு வாசற் பூட்டி
கொண்டுமேசை வற்றசிவ யோகஞ் செய்வார்."

"எறும்புகடை யானை முதற் பேதா பேத
மெண்பத்து நான்குநூ றாயிரத்துள்
உறும் பொருளாய் நின்ற சிவனொரு வன்றன்னை
யுள்ளுணர்ந்து காண்பதுவே காக்ஷிநன்றாம்
பெறுமவனைப் புறம் பென்று பேசு மாந்தர்
புறம்புணர்ந்து காண்பதரி தாகுமென்றே
விறுமன்மறை நாலு முரைத் திடுமேலர்க்குள்
மிகுத்தமணம் போற்பரத்தை மெய்யிற்காணே."

என்று உடலறிவிளக்கத்தின்கண் கூறியுள்ளதையும் அறிக.

மானவன் :—சுவாமி! என்ன விரகசியம், என்ன ரசம், என்ன சுகம், என்ன மணம், என்ன குணம்! தற்போது தாங்கள் நவின்றது என்றுங் கேட்டிராத யதார்த்த கருத்தடங்கிய அம்சமாதலால் சிந்திக்கச் சிந்திக்க புளகாங்கிதமுண்டாகிறது. இஃதென்னமோ சம்மதிக்கவேண்டியதே. ஆனல் திருநீறு, திருநாமம், துளசிமாலே, உருத்திராக்கம் இவைகளை யணிந்து வருகின்றனர்களே இவைகளென்ன, வேஷந்தானே ?

தானவன் :—பக்த! பக்த! அவ்வண்ண மவசரப் பட்டெஃதையும் அற்பமாக வெண்ணிப்புகலாதே. நம்முன்னோர்கள் நம்மீது கருணைபாலித்து, அளவிடற்கரிய சுகாதாரங்களையெல்லாம் விளைவிக்கவும், அக்காலும் அருளைமுன்னிட்டு போதத்தைபின்னிட வேண்டுமெனவும் தெய்விகத்தின் பயபக்தி அபாரமா யுண்டாகப் புகட்டி, அனந்த விதங்களான ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்க, சிலர் தற்காலத்தில் அவைகளை அசங்கிதம், அநாசாரங்களென வெறுத்து, கைசோர விட்டு வருகிறார்களேயொழிய, அதின் கருத்தறிந்து உண்மையைக் கிரகிக்கும் ஆற்றலில்லாதவர்களாயிருக்கிறார்கள். ஆப்தர்கள் “சூர்யனைப்பார்த்துக்கொண்டு, அல்லது சூரியனிற்கும் பக்கம் முகத்தை வைத்துக் கொண்டு, மலஜலம் கழிக்கப்படாது” என்பதை பரிகசிக்கிறார்கள். “அடடா சூரியனுக்கு வெட்கமா யிருக்குமோ அல்லது அந்த சூரியபகவானை அவமானஞ் செய்கிறதா யெண்ணி அதிக தீட்சண்ணியத்தைப்

பிரகாசிப்பாரோ"? என்று ஏளனஞ்செய்கிறார்கள். கேளும் சூரியனின் கதிர் வீட்டின் சாளரவழி நுழைகையி லவற்றுள் தூசிகள்பறந்து அவ்வழியே செல்வதை நாம் காண்கிறோமல்லவா? அவ்வணுக்கள் அங்கு மட்டுந் தானா பறக்கிறது? இல்லை! அவைகள் எங்கும் பறக்க சூரியன் தனக்கு நேராய் ஆக்ருஷிக்கிறது. அத்திசையின் பார்வையாய் மலஜலங் கழிக்குங்கால் இவைகளது அசுத்தங்களையும் சூரியனது கிரணங்கள் இழுக்குமல்லவா? அப்போது முகத்திற்கு நேராகத் தானே அவ்வசுத்தத்தூசிகள் செல்லும், அக்கால் நாசியினின்றுவருஞ் சுவாசம் திரும்பவு முட்செல்லுகையி லித்துர்மணத்தூசிகளையும் உள்ளுக்குத் தம்முடன் கொண்டுபோவதினால் தேகச் சுகாதாரம் பங்கமாகிறதென்றல்லோ அவ்வண்ணம் சொற்றனர்கள்*. அப்படியே †விபூதிக்கும் சுகாதார குணங்களிருக்கின்றன.

---

*புராதனவான்றோர் அதியற்பகாரியங்களையும் மஹா பிரதான வியவகாரங்களையு மியற்றுங்கால் சகல சுபங்களும் பற்றவும் சர்வ வசுபங்களும் அகலவும் எது யாதோ அதனைக் கருதியே முறையாக நடத்தி யிருக்கிறார்க ளென்பதற்காக இவற்றைச் சூசிப்பிக்க நேர்ந்தது.

†பராசரஸ்மிருதியிலும் பஞ்சகௌவியத்தை மஹா அவுடதமாகவும், உட்புறம்பை சுத்திகரிக்கும் அவ்வளவு சக்தி வாய்ந்த விசேஷித்த சரக்காகவும் இயம்பியுள்ளது. திருநீறு— **விபூதி** (விசேஷமான ஐசுவரியத்திற்குக்காரணம்) **பஸிதம்** (பிரகாசத்தையுண்டாக்குவது) பஸ்மம் (பாவங்களைப்பரிகரிப்பது) க்ஷாரம் (ஆபத்துக்களை நிவர்த்திசெய்வது) ரக்ஷை (பூதம், பிரேதம், பிசாசம், பிரும்மராக்ஷசம், அபஸ்மாரம், இவைகளாலுண்டாம் கெடுதிகளினின்றும் காப்பது) என்று

5

ஜலத்தில் வீழ்ந்து பிரக்ஞை யற்றுக்கிடக்கும் ஈக்களைச் சற்றுநேரம் சாம்பலில் புரட்டிவைத்திருந்தாலச் சாம்பலானது உட்புறமிருக்கும் ஜலத்தை ஆக்ருஷித்து உஷ்ணத்தை விளைவித்து அதற்குப் பிரக்ஞையுண்டாக்கிப்பறந்து செல்லும்படியான சக்தியைவரவழைக்கிறது. சாணத்தினால் பாஷாணங்கள் சுத்தியாகிறது. பசுஞ் சாணத்தை பஸ்மமாக்கி உச்சி, நெற்றி, மார்பு, வயிறு, தோள், முழங்கை, கணுக்கை, மேன்முதுகு, கீழ்முதுகு, முழந்தாள், கண்டம், இத்தானங்களிற் றரிப்பதால் ஜலங்கோத்திருப்பதை நிவர்த்தித் திரத்தம் போதுமான சூடுடன் சூட்டைப் பரப்பும்படியான சக்தி யதிகரிப்பதுடன் தேகத்தினின்று உற்பத்தியாகுஞ் சிறுகிருமிகளையும் நாசஞ் செய்யுஞ் சுகாதார சக்தியுமிருப்பதால் இஃதை பஸ்மமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கடாரி, பசு, இவைகளின் சாணம் சத்துள்ள சரக்காதலினாலேயே இந்துக்கள் காலையில் வீட்டின் முற்றங்களில் தெளித்தும் விடுதிகளைமெழுகியும் வருகிறார்கள். இது கொடூரவியாதிகளுக்கு ஏதுவாகும் அசுத்தக்காற்றை சுத்திகரித்துப் பற்பல விஷக்கிருமிகளையும் பாழாக்குகிறது. சிலபாஷாணங்களு மிவற்றாற் சுத்தியாக்கப்படுகிறது. பூர்வத்தில் வானசாஸ்திர முதலானது கண்டு பிடித்தது போன்றே உலகத்தில் வைத்

ஐவகைப்படும் சுபங்களைப் பிரசாதிக்கும் அபிதானங்களாலழைக்கப்படுகின்றன.

திய வாகட சாஸ்திரங்களும் ஏற்படுத்தியிருக்கின்றனர். அவற்றுள் நவபாஷாணம், உபபாஷாணம், மூலிகைகள் வீரியங்களையும் கண்டு கையாடி பஸ்மமுதலானதாக முடித்துக்கொண்டது போன்றே சாணத்தையும் ஓர் விசேஷித்த சரக்காகக் கண்டறிந்து, அதனைப் பஸ்மமாக்கிப்பிரயோகிக்கவும் சுருதிகளுமியற்றினர். இவற்றுள் காரசத்து உளதா என்று பரீக்ஷிக்கவிச்சிக்கில் பசுஞ்சாணத்தை ஒருசட்டியிலிட்டு மேலுமோர் சட்டி மூடி கிரமத்துடன் கவசித்துப் பூமியிற்புதைத்து அளவாகத் தக்க காலத்தில் எடுத்துப்பார்க்கில், அதில் தேள்களுண்டாகி உலாவுவதைக் காணலாம். அத்தகைய நாபி சக்தியிருப்பதாற்றான் அது சத்துளசரக்கென்று முன்னோர்கள் அறிந்து, பூதங்களைச் சுத்திகரிக்கப் பச்சை சரக்கே தக்கதென்றும், பௌதிகங்களைச் சுத்திகரிக்க வதனைப் பஸ்மமாக்கவேண்டியதென்றும் விதித்ததற்கிணங்க வர்த்தமான காலத்திலுங் கையாடுவது திருஷ்டாந்தமாயுமுளது.

ஆனால், பெரும்பான்மையோருக்கு எப்பசுவின் சாணத்தைக் கொள்ளவேண்டியதென்றும் திருநீற்றை உண்டாக்கும் முறை எடுக்கும்முறை தரிக்கும்முறை இவ்வண்ணமென்றுந் தெரியாது, கிடைத்ததைப் பூசி வருவதா லதனாற் பெறவேண்டிய வெண்ணரிய குணங்கள் உண்டாகத்தடைபடுகிறது.

இந்துக்களில் பலர் நெற்றியில் ஸ்ரீ சூர்ணம் (திரு சூர்ணம்), நாமம், சந்தனப்பொட்டு, குங்குமப்பொட்டு

சாந்துப்பொட்டு, *வேங்கைமரப்பால் பொட்டு, வேல மர சாற்றின்பொட்டு, காசிக்கட்டிப்பொட்டு முதலிய திலகங்களையும் விபூதிகளையும் அணிவதும், வாசல் நிலைக்கால்களில், குங்குமம், மஞ்சள், விபூதி, †சாண மிவைகளை சாற்றுவதும்; பெண்கள் மஞ்சள் பூசிக் கொள்வதும்; வேப்பிலை, மாவிலைகளை வாசல்களின் மேல் விட்டத்தில் கட்டிவருவதும் தொன்றுதொட்டு வரும் பழக்கமாயிருக்கிறது அவற்றின் அளவிடற்கரிய விசேஷ குணங்களின் பொருட்டே என்றறிக.

வாசக, மானச, நயன, ஸ்பர்ச தீக்ஷைகள் புரி பவர்களும், மேல் நாட்டாருள்ளும் Mesmerism, Hypnotism, Magnetism முதலானவைகளை நடத்து பவர்களும், Personal Magnetism, Will Force மனோசக்தி இவைகளை ஆக்ருஷ்ணஞ் செய்வதற்கு Mirror Practice (கண்ணாடி அப்பியாசம்) என்ற ஒன்

---

*"குத்திருமல் வெட்டையொடு கூறுமுள மாந்தையிவை
யெத்திசையும் வாரா திடையுங்காண்—சத்தியமாய்ப்
புண்ணிருமல் சீழொழுகல் போகு மலமிறங்குங்
கண்ணொளிரும் வேங்கைக்குக் காண்."

†"ஆவினது சாண மடிபடுவீக் கம்முதிரந்
தாவி வருகிருமி சார்ந்தகப—மேவுசுரந்
தங்குந்தாகம்போக்குஞ் சாற்றின்மெய்ச் சுத்தியப்பால்
தெங்கின்பா லுக்கொக்குந் தேர்."

"வயிற்றுப் பிசமிரத்த வாந்திகா மாலை
நியத்தபெரும் பாடுபுண் ணீங்கும்—வியத்த
கருமைச்சா ரங்கவிழிக் காரிகையே நாளும்
யெருமைச்சா ணத்தி னியல்பு."

றை அனுஷ்டிக்குங்கால் புருவமத்தியில் பொட்டிட வேண்டியிருக்கிறதென்பது அவற்றில் பழக்கப்பட்டவர்களுக்குத் தெரிந்தேயிருக்கும். அவர்கள் இம்மார்க்கத்தால் முன்னர்கூறிய மனோதத்துவ பலன்களையும் கிரஹித்துக்கொள்ளுகிறார்கள். இதனருமைகளை யுணர்ந்தே பண்டைக்காலந் தொட்டே இந்துக்கள் விபூதி பூசியும், பொட்டிட்டும் கண்ணாடிகளில் நோக்கியும், அக்காலத்தில் மந்திரம் (மனோதிரம்) செப்பியும் வருவதாகிறது.

மானவன் :—தாங்கள் விவரித்துரைப்பது அதியற்புதத்தி னனுபவமேயன்றி வேறில்லை ; விசாரியாக் குற்றத்தால் மறைந்துகிடக்கின்றன.

தானவன் :—மேலும், யாவரேனும் வாந்தி எடுக்கையில் *உருத்திராக்ஷத்தைத் தேனிற் சிறிதிழைத்து நாவிற்றடவினுலுடனே பித்தத்தைச் சாந்திசெய்யுங் குணத்தைக் காணலாம். பித்தமோ அக்கினியின் கொதிப்பு ; இதனைத் தணிக்கும் சக்தி உருத்திராக்ஷ மணிக்கிருப்பதாலன்றோ, சதா அங்கத்தின்கண் அணிந்திருக்கின், மயிர்க்கால் (துவார) வழியாய் இஃதின் குணம் இரத்தத்திற் கலப்புற்று, மூளையைத்தாவிச் சுத்தமாய் வைப்பதால் மனம் ரஜஸ் தமஸாம்ஸமாய் விசிரிம்பிக்காது, சத்துவ குணத்தையே விசிரிம்பிக்கி

*"நீளுமதி தாகத்தை நீங்காமுத் தோஷத்தை
யாளு விக்கல் பித்தத்தை யாற்றுங்கா—ணாளு
மிருத்திரா மற்கபத்தை வீட்டுமே நல்ல
வுருத்திராக் கத்தின்வலி யுன்."

றது. இதைக் கருதியே சாதுக்களிதனை நூறென்றும் ஆயிரமென்றும் அணிகிறார்கள். மனஞ் சாந்தமானதால் சாது என்னும் நாமம் வழங்கப்படுகிறது. * துளசிமணி யோவெனின், சிலேஷ்மத்தி லவதியாகிப் பிராணன் செல்லாது வாதைப்படுங்காலத்தில் துளசியை நசித்துத்

---

*"ஐயம் வயிறுளைச்ச லஸ்திசுரந் தாகமும்போம்
பையசுர மாந்தம் பறக்குங்காண்—மெய்யாக
வாயி னரோசகம் போம் வன்காரஞ் சூடுள்ள
தூய துளசிதனைச் சொல்.

செய்ய துளசிவிஷந் தீர்க்குங் கபமறுக்கும்
வெய்ய ரடிவிஷத்தை விண்ணேற்றும்—தையலரே
முத்தோஷத் துண்டா முரணேட்டு மவ்வழியா
மெத்தோஷ மும்போக்கு மெண்.

இருமலொடு நெஞ்சி விழுப்புச் சுவாசங்
கிருமி சலதோஷங் கேவல்—மருமச்
சளிருட்சை சூலைவிஷஞ் சந்நியிவை போக்குந்
தளிரார் கருந்துளசி தான்.

நிலத்துளசி மாதர்தன் நீண்முலைப்பால் மந்தம்
வலுத்தசுரம் பித்தங்கண்மாற்றும்—அலத்துகண
மாந்தசுரம் பித்தசுர மாபெரிய சீதசுரஞ்
சேர்ந்தோடச் செய்யுந் தெளி.

கபத்தொடு குத்திருமல் காணு தொழிக்குஞ்
சபத்தைச்செய் முத்தோஷஞ் சாடும்—விபத்தழலைச்
சாய்த்துடலைப் போஷிக்குந் தாரணியி லுள்ளோர்க்கு
நாய்த்துளசி யீதுநவில்.

தாபச் சுரமுந் தணிவித் திரிதிகளுஞ்
சோபச் சிலவிஷமுந் தோற்றுவே—கோபிச்சங்
குற்றுளசி லேஷ்மத்தா லூன்றுகா சம்பறக்குங்
கற்றுளசிப் பேருரைக்குங் கால்."

தீர்த்தம் விடுகிறார்கள் ; அது கோழையையறுத்து வாயு செல்ல இடந்தருகிறது. இதுவுமன்றி புண்புரைக்கு மேற்பூசு களிம்புகளிலும் துளசிரசம் சேர்க்கில் ரணங்களைக் குணப்படுத்துந் தன்மையிருக்கிறது. துளசிமணிகளை அல்லது துளசிவேரின் துண்டுகளைச் சதா அணிந்திருப்பதால் ஏன் மேற்படி கஷ்டங்களை வாராது தடுக்கும்படியான குணாதாரத்தைத் தாராது? தருமென்பதே துணிபு. இப்படியே கருடனுக்கு இரைபோடுவதிலும், சாணத்தால் வீடு மெழுகுவதிலும், காலையில் வாசல்களில் சாணந்தெளிப்பதிலும், சுண்ணத்தூளாற் கோலமிடுவதிலும், வேப்பிலை, மாவிலை தோரணங்கட்டுவதிலும், வீட்டில் நடந்தேறும் சுபாசுப காலங்களில் 'ஆலம்' சுழற்றுவதிலும், எலுமிச்சம் பழங்களையறுத்துச் சுற்றுவதிலும், வேப்பிலை, பட்டுக்கயிறு மஞ்சட்கயிறு இன்னமும் ஹிந்துக்களுக்குரிய பலவேறு சாங்கியங்களிலும் மேலான வபிப்பிராயங்கள் கோடிக்கணக்காய் புதைந்துகிடக்கின்றன. நிதானத்துடன் சற்று யோசித்துப்பார்த்தால் ஒவ்வொன்றின் குணங்களும் புலப்படக்கூடியதேயன்றி வேறில்லை. ஆகையினால் நம் புராதனர்கள் ஏற்படுத்தியிருக்கும் ஆசாரங்களை அநாசாரமென்று வழங்குவது அறியாமையுஞ் சால வவசரமுமேயாம்.

மாணவன் :—சுவாமிகாள்! நாம் ஆரம்பித்ததொன்று இப்போது விசாரணையாவது பல்வேறு விஷயம் எனினும் தெரிந்து தெளியவேண்டிய முக்கிய

விஷயங்களையாம். வெகு யூகமாய் குணாகுணங்களை மந்தமதியுடைய விச்சிறியேனும் அறியும் வண்ணம் புகட்டி யாநந்தக் கடலிலாழ்த்துகிறீரே, இது என்ன ஆச்சரியம்! கைம்மாறென் செய்வல்!

தானவன் :—நான் 'தான்' என்கிற அகங்காரங் கொண்டு நிற்கிறவன். தோற்றலான கடத்திற்குப் பழைய வாசனை வரில் நிர்மாண காயர்களாகிய சித்தர் கணங்களை வந்திக்கும் சித்தமுடையவனாவேன். அவர்களது நாமதேயங்களை உச்சரித்த மாத்திரத்திலும் சங்கற்பித்த மாத்திரத்திலும் அவர்கள் தெரிந்துகொள்வார்கள். நாம் சம்பாஷிப்பதையும் தெரிந்தவர்களே. யதார்த்த பக்தனையும், அயதார்த்த பக்தனையும் அவர்களறிந்தவர்களே. சர்வத்திராளு மிவர்களைத் துதிசெய்யவேண்டியது கடமை. இதை விளக்கிவைப்பதற்காகவே பிரஹ்மஸ்ரீ தாயுமான சுவாமிகளும் சித்தர் கணங்களுக்குப் பதிகமாலை சூட்டியிருக்கின்றனர். இம்மஹன்னியர்களாசியாற்றான் இங்கத்தியும் உஜ்ஜீவிப்பது.

மானவன் :—தங்களதுமொழி "சித்தர் கணம்" என்று சப்தித்ததும் மனந் திடுக்கென் றஞ்சலையுண்டாக்கிற்று. அஃதுடனே தங்களது வதனாரவிந்தத்திலும் ஆனந்த வசீகரமுண்டாகி ஜ்வலிக்கிறது. அத்தவராஜ சிங்கங்கள் தங்களுக்கு யாதேனுமாசீர் வசனம் சிரேசாதனம் செய்திருக்கற்பாலதென் றெண்ணுகிறேன் சுவாமி!

தானவன் :— ஆட்சேபனை யென்னை !

மானவன் :— சுவாமி! தாங்க ளிதுவரையி லுத ஹரித்துவந்தவற்றில் சோபான அநுஷ்டானங்களின் பலன் தெரியவந்தது. சுழிமுனையைப் பார்க்க வேண்டும், கலையறிய வேண்டும், ஜோதி புலப்படும், காயாதி கற்பம் சாப்பிடவேண்டு மென்கிறார்களே இவைகளென்னையோ ?

தானவன் :—"சித்தர் சொன்னது சித்தாந்தமதிற் றெளிந்து கொள்ளுவது வேதாந்த" மென்பதிருக்கப் பலர் கிரியா யோகத்திலாழ்கிறார்கள். யோக சாரகர் சகாமமின்றி நிஷ்காமிய ஞான யோகமாய்ப் பொருள் படுத்தி நடந்தால் மோட்ச சாம்பிராச்சியம் வாய்க்கும். அவ்வண்ணம் பற்றாது *சுவாசபந்தனஞ் செய்வதே

---

*பிராணாயாமம்:— சிலர் பிராணாயாமமே ஞானமென்று நினைத்து மோசம்போகிறார்கள். சுவாசமானது சூட்சுமசரீரத்தின் ஓர் அங்கமாயிருந்து கொண்டிருக்கிறது. யோகிகள் பிராணாயாமஞ் செய்யவேண்டியதவசியம். ஆனால் அதுவே பொருளென்று மயங்காது கூடஸ்தனைத் தரிசிக்கவேண்டிய முறைமையிற் கையாடவேண்டியது.

"You will learn to store up more power as well as to use less power. The Hindus, who have studied and practised this part of physical and mental culture for thousands of years, speak of the breath as the most valuable help towards the storing up of energy. Their word *Prâna* is often confused with breathing or breath ; really it is a general word for every kind of energy. Perhaps modern science might rather call it vibration. The Hindu who wishes to store up his energy or *Prâna*, succeeds

அதீதநிலையென்று சித்தைக் கோறி, யிவற்றை வழிபடு மார்க்கங்களாயெண்ணாது, கடாகாரமாவாரைப் பழிப்பதை யிச் செய்யுட்களால் காண்க:—

---

in doing so to a great extent by the practice of various rhythmical breathings.

As another example of a real advance, Mr. McMillan, in "Means and Ends in Education," says that breathing-exercises were practised in Bradford Board Schools for six months by 40 boys chosen from 80 boys of ordinary physique. The chosen 40 were older boys, and therefore not likely to grow so fast, but they grew one-tenth more than the younger 40 who had no such lung-training.

So striking is the effect of better breathing upon the health, that the practice cannot begin too early.

A Hindu *Yogi* will begin to teach his child from the very earliest years not only about God the Father, but also about better breathing. The two educations go on, as they always should, side by side." என

(Euastace Miles, M. A.) எம். ஏ. பட்டம்பெற்ற யூஸ்டேஸ் மைல்ஸ் என்னும் ஆங்கிலேயரும் நவின்றிருப்பது போன்றே சந்தியாகாலத்தில் சாதுக்கள் பிராணாயாமஞ் செய்துவருவதினால் நாடி சுத்தியும், மனோதிடமும் வசீகரமும், உண்டாகிற தென்பதே சித்தம்.

ஷை ஆங்கிலேய வபிப்பிராயத்தின் மொழிபெயர்ப்பு.

நீ சக்தியை அதிகமாய் சேர்த்துக்கொள்ளவும் கொஞ்சமாய் உபயோகிக்கவும் கற்றுக்கொள்வாய். சரீரமனோபயிற்சியின் இவ்வம்சத்தை அறிந்து பல்லாயிரம் வருடங்களாக அப்யசித்துவந்த இந்துக்கள், சக்தி சேகரம்பண்ணுவதற்கு மிக்க பிரயோஜனமான உதவி சுவாசமே எனப் பகர்கின்றனர். அவர்கள் உபயோகிக்கும் "பிராண" என்னும் பதமானது

உபதேசவுண்மை.

" கரும யோக மெட்டாகு மதனுற் சித்தி கைகூடும் [கும்
பெருகு மதனுற் பெருமையுண்டாம் பெரிய தடிப்பு முண்டா
அருமை யாகக் கருதொணு ததனுன் மனமு நிலையாதால்
உரிய ஞான யோகத்தா லுழலு மனமு நிலைத்திடுமே."

அடிக்கடி 'சுவாசித்தல்' அல்லது 'சுவாசம்' எனத் தப்பர்த்தம் பண்ணப்பட்டுவருகிறது ; கிரமமாக அது எவ்வித சக்திக்காக வும் உபயோகிக்கக்கூடிய ஓர் சொல். நவீன கலைஞானிகள் அதனை 'விசிரிம்பித்தல்' எனப்பொருள்படக் கொள்ளல் ஒரு வேளை தகுதியாயிருக்கும். தனது சக்தி அல்லது பிராணனை விர்த்திசெய்துகொள்ள விரும்பும் இந்துக்கள் பலவகைப் பட்ட சுவாச அப்பியாசங்களை அளவாய்ச்செய்து சித்தியடை கிருர்கள். இதன் அரியப்பிரயோஜனத்திற்கு இன்னெரு அத்தாட்சியாக. மாக்மில்லன் என்பவரும் தானியற்றிய " மீன்ஸ் அண்ட் எண்ட்ஸ் இன் எஜுகேஷன் " என்னும் ஆங்கிலேய புஸ்தகத்தில் பிரட்போர்ட் போர்ட் பள்ளிக் கூடங்களில் சாதாரண தேககாத்திரத்தையுடைய 80 பையன் களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 40 பையன்கள் பிராணு யாமம் அப்பியாசித்துவந்ததாகவும், அவ்வாறு தெரிந்தெடுக்கப் பட்ட 40 பேரும் அவ்வளவு விரைவாய் வளரக்கூடிய பருவமல் லாத வயது அதிகப்பட்டவர்களாயிருந்தபோதிலும், தங்களைப் பார்க்கிலும் இளையவர்களும் பிராணுயாம அப்பியாசம் பயி லாதவர்களுமான 40 பையன்களைவிட பத்திலொருபங்கு அதிகமாய் வளர்ந்திருந்தார்களெனவும் சொல்லுகிருர். சரி யாய் சுவாசிப்பதின் (பிராணுயாமஞ்செய்வதின்) பலன் சௌக்கியத்திற்கு இவ்வாறு கைகண்டதாயிருப்பதால், இந் தப்பயிற்சி (அதிக இளமையில் தொடங்காது) இளமையி லேயே தொடங்கலாம்.

ஒரு இந்துயோகியானவர் தன்னுடைய குழந்தைக்கு அதிசிறு வயதிலிருந்தே கடவுளைப்பற்றி மட்டுமல்ல, சரி யாய் சுவாசிக்கவும் கற்றுக்கொடுக்க ஆரம்பிப்பார். இந்த இரண்டுவித்தையும் கிரமப்படி எப்போதும் அடுத்தாப்போல வே நடந்தேறிவருகிறது.

“சித்த ராயினோர் தியங்குறு *சுழிமுனை யதுவே
சித்த னென்றுரைத் ததனையே தெரிசித்து மாய்ந்தார்
மத்த வேடத்தர் சிலரந்த மார்க்கமும் விட்டுச்
சொத்தை தேகத்தி னுசியி னுனிகண்டு சோர்ந்தார்.”

“இந்தமுக் கலைக டம்மை யிடைநடு பின்னுய்க் கூறி
அந்தமுக் கலையே தாங்க ளென்றெண்ணிச் சிலர ழிந்தார்
பந்தமோ கத்தா லிந்தப் பாழுடல் சித்தி செய்து
செந்திரு வருள்பெ ருமற் செத்தபேர் கோடா கோடி.”

“ஆதியா மிடைகலையு மரிதான பிங்கலையு மவற்றின் மேலே
சோதியாஞ் சுழிமுனையுஞ் சுகமாகுமிம்மூன்றுந் தொடர்ந்து [நோக்கில்
சூதான நிறமூன்று முருமூன்றுங் குறிமூன்றுந்தோன்று மென் [றே
காதலித்திந் நெறியிருந்து சிலர்வீணே வாணாளைக் கழித்திட் [டாரே.”

“நலமாக †நாலுபிள்ளை யுண்டோன் றுனே
நாதனு வானென்ற முறைகா ணுமல்

(சுஷும்னு)

* சுழிமுனை—பாஹிய சுழிமுனை, ஆந்தரசுழிமுனை என இருவகையுளவெனவும் ஆந்தரசுழிமுனையைக்கண்டால்,

“சுழியாகிய முனைகண்ட பினுற்று ருறவற்ருய்
சூதும்பல பொய்பேசிய தொழிலும் பிறர்க்கிட்டாய்
வழியாகிய துறைகண்டபி னநுட்டானமு மற்ருய்
வழங்கும்பல நூல்கற்றிடு நினைவும் பிறர்க் கிட்டாய்
விழியாகிய மலர்கண்டபின் னுயரார்ச்சனை யற்ருய்
மெய்ந்நீற்றிடு திருமந்திரம் விட்டாய் சிவமுற்ருய்
அழியாப்பதி குடியேறிமுன் னச்சம்பல வற்ருய்
யாரொப்பவர் நினையுற்றவ ரலைவற்றிரு மனமே”

என்னும் பலனுண்டாவதால் தானவன் ஞான சுழிமுனையை நிலைநாட்டத் துணிகின்றுர்.

† மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

உலகமதிற் சிலமூடர் சிசுக்க டம்மை
யுரலதனிற் போட்டிடித்துக் கற்ப மென்று
நிலமைபெற மனமுவந்து தின்று தின்று
நீணிலத்திற் சாகின்று ரையோ! வையோ!
சலனமதையடக் கவல்ல மகனே யிந்தச்
சண்டாள ருறவைநீ தவிர்த்தி டாயே!

நிஷ்டாநுபூதி.

“ நிட்டை நிலையீ தென்றுரைப்பர் நிகழும் வாயுத் தாரணையை
நிட்டை யதுதா னலவென்றே நிலவு மேலோர் புகலுவார்
நிட்டை யாதல் கருத்தடங்க நிறுத்த லதுவே சிவயோகம்
நிட்டை விடாது சாதிப்போர் நித்த மெய்வீ டுறுவாரே.”

“ பங்கமுற மனங்கொண்டு சுவாசமது தன்னைப்
பந்தனஞ்செய் தருங்கற்பம் பற்பலவும் பயின்றே
அங்கமதைத் தான்சுழற்றி யபானவழி தன்னு
லயம்வாங்கி யவ்வழியா லதைமீள விடுத்தும்
இங்கிவைகள் பலவியற்ற லட்டமா யோக
மென்பரிவை சிவயோக மியற்றுவோர்க் கிலையால்
தங்குசிவ யோகத்தா லாக்கமுட னழிவுந்
தானிலாப் பரமசா யுச்சியந்தா னடைவார்.”

“ புத்திகொள் கிரியா யோகசா தனையைப்
புரிந்திடு பவர்களிவ் வுலகில்
எத்தனை கால மிருப்பினு மீண்டு
மிறப்பொடு பிறப்பினை யடைவார்
சத்திய மாக வறிதிநீ.”

“ * கருநெல்வி † வெண்சாரை யென்று ரைத்த
கற்பமதை யின்னதென்று கண்டு நெஞ்சம்

---

* நல்வினை - புண்ணியம். † தீவினை - பாபம்.

ஒருமைபெறத் தெளிந்தறியா தனேக மூட
 ருற்றமல மூத்திரமே யஃதென் றெண்ணி
விரகறுஞா னியைப்போலத் தினமுந் தின்று
 மேதினியிற் சாகோமென் றிறுமாப் பாகிப்
பரமஞா னிகளேவற் புரிகிலாது
 பாழாஞ ரிவரையுநீ பதராய்க் காணே."

மானவன்:—குருப்பிரபோ! ஆனல் வேதாந்திகளுக் குரித்தான அநுஷ்டானங்க ளிவ்வண்ண மெலாமிராதோ? அடிமைக்கு அம்மேம்பாடான நிஷ்காமிய ஞானயோகத்தைத் தீட்சாநுக்கிரகஞ் செய்துவிக்க வேண்டுந் திருவே! விசாரணையில் சரியை கிரியை யோகம் வழிபடுமோர்க்கமா யிருக்கிறதே யொழிய ஐக்கிய முத்தியை யீயு மார்க்கமாயில்லைபோற் காண்கிறது. ஆகையாற்றானே

(நிஷ்டானுபூதி)

"சரியையின் றொழிலி னாலுஞ் சற்கிரியையினும் யோகம்
புரிதரு முயற்சி யானும் பொருந்தொணு தென்பர் மேலோர்
உரியதே சிகனு ரைக்கு மொருமொழி யுண்மை யாலே
அரியமெய்ஞ் ஞான வீடிங் கடைவது திண்ண மாமே"
என நவின்றன ராப்தர்!

தானவன்:—புத்தி தீவிரதரத்திற்காக மெச்சுகிறேன்; கருமமும், பக்தியும், யோகமும், மல விட்சேபங்களை நீக்குமேயொழிய அஞ்ஞானத்தை நீக்க மாட்டாதென் றறிக.

மானவன்:—அஞ்ஞானத்தை நீக்குவதெங்ஙனே? சுவாமி!

தானவன்:—மதி மாணு! உபாயம்விளக்குதும்.

வாசிட்டம்.

"தவங்களாற் றெய்வ நீராற் சாத்திரங் களினுற் போகாப்
பவங்களை யுயர்ந்தோர் பாதம் பணிந்துபற் றறுக்க வேண்டும்"

நானெனும் பொருளைக்கண்ட பெரியாரை சேவித்து ஓர்மொழி மஹா வாக்கியம்பெற்றுல் அஞ்ஞானம் நீங்கற்பாலது.

மானவன்:—மண்டேடப்போய் மாணிக்கங் கிடைத்தாற்போல் பேசவுந்தெரியாத வெனக்குப் பிரஹ்மப் பிரகாசமாகிய தங்களது சமுகப்பெருமையால் தர்க்கஞ் செய்யு மாற்றலுண்டாகித் தத்துவ வசனம் பிராப்தமாயிற்று. பெரியோரைப் பற்றுவ தவசிய மவசியமென் றுணர்ந்தேன்; அனுபவம் பெற்றேன். அடியேனின் பவங்களைப் போக்கவல்ல நாதாந்த ஸ்வரூபர் நீவிரே. வெள்ளாட்டைப்போன் றவரிட மிவரிட மோடாது 'ஒன்றைப்பிடி யுறுதியாய்ப்பிடி' யென்னும் ஆக்ஞாவின் வண்ணம் மர்க்கடம் போற் பற்றக்கடமைப்பட்டேன். யாது! யாது! சுவாமிகள் தங்களது சீதள திருஷ்டியுடன் விழிகளை அபரஞ்சிதம் போன்ற இரப்பைகளால் மூடிக்கொண்டு அசைவின்றி சாந்தாநந்தமாகின்றீர்! க்ஷணப்போதில் உறங்கி விழித்தவர்போல் திருதிருஷ்டியினுல் ஆராய்கிறீர்! ஏழையின் மனக் குரங்கும் *கறங்குபோ லலையாது குவிந் தின்புறு

* காற்ருடி பட்டம்.

கிறதே! எனக்கும் எக்காலத் தத்தகை பாரமார்த்திக வானந்தம் ஜனிக்குமோ குருநாதா!

தானவன் :—ஓம்! ஓம்! போலி உனக் (உருவத் துக்) கல்ல யதார்த்த உனக் (அருவத்துக்)கு அறிவா னந்த உனக்கு, சாட்சியாகிய உனக்கு, விருப்பு வெறுப்புக் கிடையா. ஆதலால் சுகமுமில்லை, துக்கமுமில்லை; ஜாக்கிர சொற்பன சுழுப்தி முதலான அவஸ்தைகளு முனக்கு வந்ததில்லை, வருகிறதில்லை, வருவதுமில்லை. இவை யனைத்தையும் சாட்சியாய் நின்றறியும் அபாரன் நீ.

மானவன் :—அப்படியா சுவாமி உருவமே இல்லா மற்போனால் அபாரமான வஸ்துவை நாடுவது எவற் றைக்கொண்டு? அப்பரம னெங் கிருக்கின்றனர்? யா னெங் கிருக்கின்றனன்?

தானவன் :—நன்றுவினவினை! இம் மேற்கோளா னுஞ் சந்தேகந் தீர்தி.

வள்ளலார்.

"வாழ்த்திடவும் வாயில்லை வணங்கிடவுஞ் சிரமில்லை
சூழ்த்திடவு மலரில்லை தொழுதிடவுங் கையில்லை
யேத்திடவும் பாவில்லை யெதிர்த்திடவோ ரிறையில்லைப்
பார்த்தவிடந் தொறுமியானே யெனையானே பணிகின்றேன்"

வாசிட்டம்.

"மேனியிற் புறத்தி னுள்ளின் மேலொடு கீழிற் றிக்கில்
வானில்வை யகத்தி லெங்கு நானன்றி மற்றொருன் றில்லை
யானிலா விடமு மில்லை யெனதிடத் திலாது மில்லை
தானிகழ் பொருள்வே றில்லை சச்சிதா நந்த மென்றான்."

மானவன் :—இவ்வதிகாரங்களால் நான்தா னெங்கும் பூரணமாயிருக்கிறதாகவும், துவிதமானு லல்லோ வணங்க நேரும் என்றும், பழமை வாசனையால் வணங்கச் சிந்திக்கில் என்னையே யான் நமஸ்கரிப்பதாயும் தெரியவருகிறது. இச்சமயம் ஆவ லதிகம் பெருகுகிறது! பக்திப்ரேமை உற்பத்தியாகிவிட்டது! ஏக சொரூபியாகிய என்னை நிரூபியும். ஞானநந்த முக்தா! பரம ஞான சுத்தா, கிருபாவீக்ஷண்ய சத்தா, சித்தா, அத்தா, என் கர்த்தா, அபயம்! அபயம்!! சமயம் சமயம், தஞ்சம். குருவே!!!

தானவன்:—இன்று விடைபெற்றுக்கொள்க. குருவாரம் பௌர்ணிமி யாதலால் பூரணையிரவு 12-மணி நேரத்திற்குச் சந்திக்கில் அக்கால் தீட்சைசெய்குதும்.

மானவன் :—மதிபூரண மாவதால் நமக்கென்ன, யாதேனும் பயனுளதா? பூரணை உபதேசத்திற் கனுகூலமாவ தெவ்வண்ணம்?

தானவன் :—ஒவ்வொன்றையும் நீ விவரமாகக் கேட்பதினுல் அதிக உல்லாசங் கொள்ளுகிறேன். எருமையைப்போற் கலக்கி விசாரிக்காமலும், மந்தமாய்ச் சொன்னதற்கெல்லாம் தலையசைத்து விடாமலும், நுணுக்கமாய் ஆராயுங்குணமுடையையே! இப்பூமி சர்வபுறத்திலும் நட்சத்திரங்களால் சூழப்பட்டு உருண்டை வடிவினதாய்ச் சூரியனைச் சுற்றிவருகிறது. அப்படிச் சூரியனை வலம்வர $365\frac{1}{4}$ நாள் செல்லும்; இதுவுமன்றி இப்பூமி தன்னைத் தானேயும் 24-மணி நேரத்

திற்குள் சுற்றிக்கொள்ளுகிறது. இதனால்தா னிரவு பகலாகிறது. பூமியானது சூரியனுக்கும் சந்திரனுக்கும் சமநிலையிலிருக்குங் காலந்தான் பௌர்ணிமி எனப்படுகிறது. வலத்தில் சந்திரனும் இடத்தில் சூரியனு மிருக்கப் பிருதிவி கோளம் நடுநிலைமையாக வாகாசத்தில் மிதந்துகொண்டிருப்பதால், அக்கால் அதில் வசிக்கும் பௌதிகக் கூட்டங்களின் கருவி கரணங்களைச் சமரச நிலையில் ஈடுபடுத்த ஏதுவாயிருக்குமென்பது நம்பிக்கை. அச்சந்தர்ப்பம் நிஷ்டை சாதனைக்கும் உபதேசம் செய்வதற்கும் அநுகூலமானது.

மானவன் :—பூதங்களின் செயற்கும் கடங்களின் செயற்கும் பரஸ்பர சம்பந்த முண்டோ?

தானவன் :—உண்டு. கிரகணம் பீடிக்குங்காலையில் ஆகாரமுட்கொண்டால் போதுமானபடி ஜீரணமாகாது, அகக்கருவிகளும் பலவீனமுற்று வியாதி சம்பவிக்குமென்று சொன்னதும், கர்ப்பிணிகள் கிரகண காலத்தில் உலாவினாலும் யாதேனும் தொழிற் புரிந்தாலும் கர்ப்பத்திலுள்ள சிசு அங்கவீனமுறு மென்று ஆக்கியாபித்ததும், மாறுனோர்க்கு அவ்விதமே நடப்பதும் நாம் பெஹுசாய்க் கண்டதா யிருப்பதால், பூதங்களுக்கும் பௌதிகங்களுக்கும் பரஸ்பர சம்பந்த முண்டென் றறிக!

மானவன்:—இவ்வனுபவம் கண்டதுண்டு, கண்டதுண்டு; நீவிரியம்புவது முற்றுஞ் சரிதான்போலும். சூரியனைப் பூமி வலம் வருகிறதென்பது ஆங்கிலேயர்

நம்பிக்கை; அப்படியே கிரகணமும் நிழற் படுவதா லுண்டாவதென்பர். ஆனால் நம் முன்னோர்கள் சூரியன் அஸ்தமய மானனென்றும், ராகு கேது என்னும் சர்ப் பங்கள் பானுவையும் திங்களையும் விழுங்குவதே கிர கண மென்றும் செப்பியிருக்கிறார்களே. அதன் விவர மறிவிக்கப் பிரார்த்திக்கின்றேன் சுவாமி.

தானவன்:—இவை புராண மதம்; ஆனால் வராக மிகிரர் எழுதிய பஞ்சசித்தாந்திகை முதலிய நம்மனோ ரது புராதன வான நூலைப்பார்த்தால் இராகுவும் கேது வும் முறையே சந்திரனது ஏறு இறங்கு சாயைகள் என்று தெரியவரும். ராகு கேதுக்கள் சாயைக் கிர கங்கள் என்று நீ கேட்டதில்லையா? தகுந்த வித்வான் களிடம் அப்புராணத்தின் சாரத்தைக் கேட்கில் யதார் த்தம் வெளியாகும். இதுவுமன்றி இதோ பாகவதத் தில் தெளிவாய் எழுதியிருப்பதைப் பார். 21-வது அத்தியாயம் 41-ம் பக்கம் 3-வது வரி: "சூரியனான வன் சர்வகாலமும் பகற்காலத்தில் உருமத்தையடைந் தவனாகவே நிற்கிறான். மேருவிற்கு இடது பாரிசத்தி லேயே யிருந்துகொண்டு மேருவை *பிரதட்சணம்பண்

---

*பூமி இடமாக வருவது சூரியன் வலம்வருவதுபோல் தோற்றுகிறது. ஆரியர் (ஆல்டாய் - Altai அல்லது Golden) பொன்மேருமலைக்கு வடபக்கமாகத் துருவகண்டத்தி லிருந்த போது அங்கே ஆறுமாதம் சூரியன் அஸ்தமியாதிருப்பதை யும் ஆறுமாதம் அஸ்தமித்திருப்பதையும் கண்டு அம்மாதிரி எழுதிவைத்தார்கள். அநேக இந்தியமாணவர்களுக்கு "When it is noon the sun is in the south" (மத்தியானத்தில் சூரியன் தெற்கே யிருக்கிறது) என்னும் ஆங்கிலேய வாசகப்

ணுகிறான். எவ்விடத்தில் சூரியன் உதயமாகிறானோ அதற்கு நேரான திக்கில் அஸ்தமன மாகிறான்." 24-வது அத்தியாயம் 45-வது பக்கம்: "யதார்த்தமாகச் சூரிய சந்திரர்களை ராகு கேதுக்கள் பிடிக்கிறதில்லை."

மானவன்:—ஆமாம் சுவாமி! இதோ என்ன தெளிவாய் எழுதியிருக்கிறது! ஊன்றி வாசியாத குற்றத்தால் மதியந்தர்களாகிய வென்போன்ற சில்லோர் கண்ணுடையவர்களான நம்முன்னோராகிய பேராசிரியர்களைப் பூகோள, ககோள, கூவான, கணித *சாஸ்திரமறியாதவர்களென்றும், மற்றும் ஆழ்ந்த கருத்துடையவர்க ளல்லரென்றும் உளறுகிறார்கள். இவை மதியீனம், மதியீனம்.

புஸ்தகங்களிலுள்ள வாக்கியம் அர்த்தமாகாததற்குக் காரணம் அவர்களுக்கு இவ்விஷயம் அறியமுடியாமையே.

*"The religion of the Vedas is based upon the theory of *evolution* and Professor Huxley admits that when he says 'The doctrine of *evolution* was known to the Hindu Sages long before Darwin was born. There were Darwinians before Darwin and evolutionists before any word like *evolution* existed in any other land.'"—(Prabuddha Bharata.)

"ஹிந்துவேதம் உலகோற்பத்திக் கொள்கையை அநுசரித்திருக்கிறது. ஹக்ஸ்லி என்னும் தத்வசாஸ்திரியும் இதை ஒப்புக்கொள்ளுகையில், 'டார்வின் பிறப்பதற்கு நெடுங்காலத்திற்கு முன்னமேயே சிருஷ்டிவாதம் ஹிந்து ரிஷிகளுக்குத் தெரிந்திருந்தது. டார்வின் என்பவர் பிறப்பதற்கு முன்னமேயே அவரைப்போன்ற டார்வின்களும், சிருஷ்டி (Evolution) என்னும் பதம்போன்ற வார்த்தை வேறெந்த தேசத்திலும் உண்டாவதற்குமுன் இந்தியாவில் உலகசிருஷ்டிவாதிகளும் இருந்தார்கள்' என்று சொல்லுகிறார்."

சற்குணகரமே! விநாயகர்புராணம் யான் வாசித்ததுண்டு; அதில் அவரது அவதாரங்களைப்பற்றி பலவாறியம்பி யிருக்கிறது. நிற்க, நம் முதற்றுதி பகவனுக்குக் குஞ்சரமுகமும், மனுஷிய சரீரமும், அவரின்பேரில் அறுகம்புல் லணிவதும், தந்தத்திலொன்றுடைந்திருப்பதும், கரமொன்றில் சங்கும், ஒருகரத்தில் மோதகமும் மற்றோர்ஹஸ்தத்தில் தாமரைப் புஷ்பமும் ஏந்திக்கொண்டிருப்பதும், மூஷிகவாகனம் ஊர்ந்திருப்பதும் நோக்குங்கால், சர்வாதாரவஸ்து சகலத்திற்கும் உள்ளும் புறம்புமாயிருக்க, அதற்கு இத்தகைய லக்ஷணங்களை அமைத்திருப்பது எற்றிற்கோ வெனுஞ் சங்கையுண்டாகின்றது. புராணம் வித்துவான்கள்பாற் கேட்கச் சொன்னீரே. இதற்கென்ன கருத்துளதோ அறிய ஆவல் உண்டாகியுளது.

தானவன்:—பிரபஞ்சத்துள் வாழும் மக்களது அதிகாரத்திற் குகந்த வண்ணமெல்லாம் சகுணோபாசனைக்கும், நிர்க்குணோபாசனைக்கும் வஸ்துவைப் பற்பல விதமாய் பிராசீன நல்லாசிரியர்கள் நிரூபித்திருக்கின்றனர்கள். அங்ஙனமாயினும், முக்குற்றமும் நீங்கிய அறிவானந்தத்தைப் புகட்டும் இரகசியார்த்தம் அடங்கப் பெற்றதாயிருக்குமே யொழிய அதற்கு மாறாகவிரா.

மானவன்:—சுவாமி! இவ் விநாயகர் வடிவத்தின் கண் சர்வபரிபூரணமான அறிவானந்த மிருப்பதைப் புகட்டும். ஐயனே!

தானவன்:—அப்படியே செப்புதும். நால்வகை

யோனி எழுவகைத் தோற்றம் எண்பத்துநான்குலக்ஷ பேத ஜீவராசிக ளென்பதுள் சருவமும் அடங்கப்பெற் றிருக்கிற தல்லவா ?

மானவன்:—ஆமாம். சிறிதும் ஐயமில்லை.

தானவன்:—இவ்வெழுவகைத் தோற்றங்களையும் வேறுயாவற்றுள் அடக்கலாம் ?

மானவன்:—வியாகரண நூலாதாரத்தின்படி

நன்னூல்.

1. "புன்மர முதல வுற்றறியு மோரறி வுயிர்"
(புல் மரம் முதலியவை பரிசத்தை அறிகிற ஓரறி வுடைய உயிர்களாம்.)

2. "முரணந்தாதி நாவறிவொ டீரறி வுயிர்"
(இப்பி சங்கு முதலியவை பரிசத்துடன் நாவா லிரசத்தையு மறிகிற ஈரறி வுயிர்களாம்.)

3. "சிதலெறும் பாதி மூக்கறிவின் மூவறி வுயிர்."
(கறையான், எறும்பு முதலியவை ஷெ பரிச ரசத் துடன் மூக்காற் கந்தத்தையும் அறிகிற மூவறி வுயிர்களாம்.)

4. "தும்பி வண்டாதி கண்ணறிவி நாலறி வுயிர்."
(தும்பி வண்டு முதலியவை, ஷெ பரிசம், ரசம், கந்தத்துடன் கண்ணால் உருவத்தையும் அறிகிற நாலறி வுயிர்களாம்.)

5. "வானவர் மக்க ணரகர் விலங்கு புள் ஆதி செவி யறிவோ டையறி வுயிரே."
(தேவர்கள், மனிதர், நரகர், மிருகங்கள் பறவைகள்

முதலியவை ஷெ பரிச, ரச, கந்த, ரூபத்துடன், செவியாற் சத்தத்தையும், அறிகிற ஐயறி வுயிர் களாம்.)

தொல்காப்பியம்.

6. "மக்கடாமே யாறறி வுயிரே."
(மக்கள், ஷெ பரிச, ரச, ரூப, கந்த, சப்த மென் பவைகளுடன் (தன்னைப்) பகுத்தறியும் அறிவையு முடைய ஆறறி வுயிர்களாம்.)

என்பவற்ருல் சருவமும் இவ்வதிகாரத்துள் அடங்கப் பெற்றதாயிற்று.

தாணவன்:—மஹா சுகமான அதிகாரம் நவின் றனை; "ஒற்றைக் கொம்பன் - விநாயக னைங்கரன், வெற்றி யானை - முகவன் கணபதி, பாசாங் குசதரன் - ஆகுவா கனனே." என சேந்தன் திவாகரத்திலும், மற்றும் நிகண்டுகளிலும் தெய்வப்பெயர்த்தொகுதியில் விள்ளும் நாமங்கள்போன்றே, வடநூலிற் கோசங் களிலும் பரியாயப்பெயர்கள் வரையப்பட்டிருக்கின் றன; அவற்றுள் (गणेश) கணேஷ் என்பதற்கு (Ram Narain Lal) இராம் நாராயணலால் என்பாரும் தமது ஆங்கிலேய கோசத்தில் *"An epithet of God" (= கடவுளுடைய பண்பைவிளக்கு மோர்சொல்) "the

*சுவஸ்திகம் கணேசனுடைய பண்பை விளக்கும் விசேஷணங்களிலொன்று.

"As Atma always appears to us in Three Manifestations, the ancients regarded the numeral three as a sacred number. In order to worship this Atma together with its three conditions, the Vedic followers made a symbol

Hindu God of wisdom and prudence" (இந்துக்களின் ஞானமூர்த்தி: சூழ்ச்சிமூர்த்தி) "the *Janus of Hindus" (இந்துக்களின் யுகாந்த சாந்தமூர்த்தி:

---

of it. This symbol, they represented by the figure 卍 or more briefly + and gave it the name of Ganesh or the Lord of all Deities. On all sacred and ceremonial occasions, this figure was invariably drawn out, and worshipped as the foremost deity, being always assigned the first place among the Gods in the order of their worship. This is done by the Vedic followers even up to the present day."—(The Vedic Philosophy by Har Narayan.)

"எப்போதும் ஆத்மா மூன்று பிரசன்னமுடையதாக நமக்குக் காணப்படுகிறபடியால், பூர்வீகர்கள். மூன்று என்னும் இலக்கத்தை ஓர் பரிசுத்தமான எண்ணெழுத்தாக மதித்துவந்தனர். அதன் மூன்று பொருத்தங்களோடு இந்த ஆத்மாவை ஆ ராதிப்பான் வேண்டி வேதாநுசாரர் அதற்கோர் அறிகுறியுண்டாக்கினர். இந்த அடையாளத்தை இந்த 卍 அல்லது சுருக்கமாய் இந்த + வடிவத்தால் குறித்துக்காட்டி அதற்குத் தெய்வத்திற்கெல்லாம் கர்த்தன் எனப்பொருள்படும் கணேஷ் என்னும் நாமம் வழங்கினர். பரிசுத்தமான வைபவங்களிலும் சடங்காசார காலங்களிலும் இந்த உருவம் இடையறாமல் எழுதப்பட்டு, தேவர்களை உபாசிக்கும் முறையில் முதன்மையான விடத்தை யதற்கு நியமித்து, முதல் தெய்வமாக வணங்கப்பட்டது. இவ்விதம் இன்னும் நாளைக்குங்கூட வேதாநுசாரர்களால் செய்யப்பட்டுவருகிறது" என்று ஹார் நாராயணர் என்பவர் இயற்றிய வேததத்துவ சாஸ்திரத்தில் இயம்பியுளது.

(WEBSTER'S DICTIONARY.)

* "Janus = A Latin deity represented with two faces looking in opposite directions. His temple, at Rome, was never closed except in a time of universal peace."

"ஜேனஸ் என்பது நேர் மாறான பக்கங்களில் பார்த்துக்கொண்டிருக்கும் இரண்டு முகங்களையுடையதாகக் குறிக்

அநந்த திருஷ்டா) என்று தெளிவாய் அறைந்துளார். ஹிருஷீகேசிய ஸ்வாமி ஸ்ரீ விசுத்தாநந்தாஜீ ப்ரஸித்தகாமலிவாலேபாபா வெனும் மஹான் தாமியற்றிய "*பக்ஷபாத ரஹித அனுபவ ப்ரகாஷ்" எனும் மஹா விசேஷித்த கிரந்தத்தில் (गणेश) கணேச என்பதை கண + ஈச என்று பகுத்து; சடத்திற்கும் சித்திற்கும் உரிமையானதென்றும் அகத்தின்கண்கொண்டுபார்த்

கப்பட்டிருக்கும் லத்தீன் பாஷையோருடைய ஒரு தெய்வம். ரோமாபுரியிலுள்ள அவரது கோவில் உலகமெங்கும் (கலக மற்று) சமாதானமாயிருந்த ஓர் காலத்தில் தவிர மற்றெப்பொழுதும் மூடப்படவில்லை."

* "गणनाम मन सहित चत्तु आदि इंद्रियोंका है, वा <u>गण</u>नाम इस नामरूप मूर्ति सहित सकारण समूह प्रपंचका है; तिनको जो नियमन करे नाम प्रेरणा करे, तिसका नाम <u>ईश</u> है, वा ब्रह्मा, विष्णु, शिवा दिक, सर्व मूर्ति अमूर्तिमान, प्रपंचगणका जो मालिक होवे तिसका नाम <u>गणेश</u> है.................. ....इससे <u>गणेश नाम</u> मन आदिकोंके साक्षि चैतन्य आत्माका है."

பக்ஷபாத ரஹித அனுபவப்ரகாஷ்: "கணநாம மன ஸஹித சட்சு ஆதி இந்திரியோங்கா ஹை, வா கண நாம இஸ் நாமரூப மூர்த்தி ஸஹித ஸகாரண ஸமூஹ பிரபஞ்சகா ஹை, தினகோ ஜோ நியமன கரே நாமபிரேரண கரே, திஸகா நாம ஈஷ ஹை, வா பிரம்மா, விஷ்ணு, ஷிவாதிக, ஸர்வமூர்த்தி அமூர்த்திமான், பிரபஞ்சகா ஜோ மாலிக் ஹோவே திஸகா நாம கணேஷ் ஹை * * * * இஸஸே கணேஷநாம மன ஆதி கோங்கே ஸாக்ஷி சைதன்ய ஆத்மாகா ஹை.

தால் கணேச என்பது ஸாக்ஷியே ஒழிய வேறல்ல வென்றும் மஹா சமத்கார மாயும் யுக்திபூர்வக மாயும் தீட்டியுள்ளார்; இவைக்கிணங்க காசி மடாதிபதியாகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளும், காசி துண்டிராஜ கணபதி திருவருட்பாவில்,

"இரவில்லை பகலில்லை யிலாபமே சங்களில்லை
யின்பதுன் பங்களில்லை
யானில்லை யெனதில்லை யிதமில்லை யகிதமில்லை
யெண்டிசைகள் காலமில்லை
வரவில்லை போக்கில்லை பாவபுண் ணியமில்லை
மரணம் பிறப்புமில்லை
மண்ணுதி யாசையில்லை மனமான பேயில்லை
மலமாயை யில்லையென்று
பாவுபட் டப்பக லெனும்பெரிய வுன்வடிவு
பார்த்திருக் கின்றவடியார்
பாததா மரைபரவி நானுமவர் போலுனைப்
பார்க்கவர மென்றருளுவாய்
காதலா மலகமென முத்தியருள் கங்கைசூழ்
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும்பெரிய குணமேரு வேயருட்
கருணாநிதிக் கடவுளே."

வியாபகவிளக்க அறிவே கணபதி வடிவமென தீர்க்கமாய் மொழிந்தனர். ஸ்ரீ சிவஞானவள்ளலாரும்

"ஆகமெனுங் கோயிலின்கண் ணறிவென்னுங் கணபதிக்கே
யன்பு செய்வாம்"

என திருக்கை விளக்கினர். அத்திருக்கெனும் சைதன்யம் சதுர்வகை யோனி, சப்தவகைத் தோற்றம், எண்

பத்து நான்கு லக்ஷபேத சராசரத் துள்ளும் புறம்பும் அகண்டிதமாயும் அசலமாயு மிருப்பதால் அவரைச் சர்வத்திற்கும் நாயகமாயும் சகல கணங்களுக்கும் பதியாயு மழைத்தனர்கள் மூதாதையர். சோதனையில் நாமரூபங்கள் பாதகமாக அஸ்திபாதிபிரியங்களே சாதகமாகிறது. அச் சாதகவஸ்துவே ஆத்மா - அகம் - கூடஸ்தன் - பிரஹ்மம் - மோக்ஷம் எனத்தகும் பதியெனும் நாயக மாயிற்று. அவர் ஓரறிவு ஜீவர்முதல் ஆறறிவு ஜீவர் வரையினும் அவற்றிற்கு ஆதாரமாய் பூரித்திருப்பதால் **கணபதி** என்பதாயிற்று. இப்போது அவரது அங்கத்தை ஆராய வெள்ளிடை மலைபோல் தெளிவீர், விரைந்து பரிசோதித்துக் காண்மின்.

மானவன்:—குணவந்தரே! இதர சொரூபங்களுக் கலங்கரிப்பதுபோல் விநாயகருக்கும் பல மலர்களணிந்தாலும் அவ்விக்நேஸ்வரருக்குப் பிரதானம் 'அறுகுபுல்' அணிகின்ற ஆன்றோர் ஆக்ஞாவை ஆராய்கிறபோது, அறுகம்புல் அணிவது இறைவன் ஓரறிவுயிரில் நிறைந்திருப்பதை யறிவித்தற்கேயெனத் தெரிகிறது.

சங்கு தனது கரத்திலிருப்பது, இறைவன் ஈரறிவுயிரிலும் நிறைந்திருப்பதையும்; மோதகம் கரத்திலிருப்பது, (அதில் எறும்புகள் சூழ்வதால்) இறைவன் மூவறிவுயிரிலும் அமைந்திருப்பதையும்; தாமரைப்புஷ்பங் கரத்திலிருப்பது (அதில் வண்டுகள் சேர்வதால்) இறைவன் நாலறிவுயிரிலும் விகசிதமாயிருப்பதையும்;

யானை சிரசுடைத்தானது, ஐயறிவுடைய ஜீவராசிகளி(ல் மிகப் பெரிய வடிவத்தி)ன் கண்ணும் இறைவன் நிரம்பியிருப்பதையும் அறிவிக்குங் குறியாயிருக்கிறது.

மானுஷிக சரீரந் தாங்கியிருப்பது இறைவன் ஆறறிவுயிரிலும் நிரம்பியிருப்பதை யறிவிக்குங் குறியாயிருக்கிறது.

ஓரறிவுமுதல் ஆறறி வீருகவுடைய உயிர்களின் கூட்டம் கண என்றும், அவற்றிற்காதாரமாய், நித்தியமாயும், சத்தாயும் நிறைவாயுமுள்ளது ஈச என்றும் தெரியவந்தது. இதுவே கணேச என்னும் பதத்தின் பொருளாயிருப்பதால் மெத்தவும் வியப்பை யுண்டுசெய்யக்கூடியதும் யதார்த்தபொருளடங்கியதுமான ஸத்தாம்சத்தைக் காட்டிவைத்தீர். தந்தமொன்று முறிந்திருப்பானேன்? தங்களுடைய முன்னிலையில் எனக்குப்படுவதைச் சொல்லுவேன். யானைமருப்புக்குத் தந்தம் என்றுபெயர். தந்தம் எனும்பதம் அவரவருடையது எனப் பொருள்படுவதாகிறது. பிரபஞ்சத்தார் யாவத்திராளும் இவ்வுடம்பையே எனது எனது நான் நான் என்றிருப்பதால் அஞ்ஞானத்திற் கடிமையாகிறார்கள். இதனால் மடமையென்ற ஆணவம் கன்மம் மாயையாகிய மலம் பொருந்திய கயமுகாசூரன் வயமாகின்றனர். ஆணவம், கன்மம், மாயையாகிய அவனைச் சம்ஹாரஞ் செய்வது

ஞானவாளாலன்றி மற்றெவ்விதமாகிய ஆயுதங்களி ஞலு மேலாதென்பது திண்ணம். ஆனல் அகங்கார மமகாரத்தால் உண்டாகும் "தந்தம்" அல்லது "தம் தம்" என்னும் செருக்கை யுடைத்தமாத்திரத்தில் அவ்வாயுதத்தால் ஆணவம், கன்மம், மாயை யென் கிற வடிவமுடைய கயமுகன் நானன்று நானன்று என மாண்டும், பின்னும் பிராரத்த முள்ளமட்டும் ஆன்மா இச்சரீரத்தை மூஷிகவாகனமாக (அநிச்சா, பரேச்சாவாக) வூர்ந்து திரிந்துகொண்டிருக்கிறன். அக்கால் கயமுகன் நசித்ததைக் குறிக்க ஓர் தந்தம் முறிந்தும், பரமாத்மாவே தான் எனும் அகங்காரமுள தைக் காட்ட மற்ருேர் தந்தமட்டிலும் பூரணமாயு மிருக்கிறது.

இதுவல்லவா ஞானர்த்தம்! புதைந்திருந்தது கரதலாமலகம்போற் றெள்ளெனப் புலப்பட்டது. இவ் வாறன்றிச் "சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம் - வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம் நடையு நடைப்பழக்கம்" என சிலர் மனன சக்தியினல் பலசெய்யுட்களேப் பாடஞ்செய்து வைத் திருந்து இயம்புகிறதுமுண்டு. ஆனல் தங்களது வாய் மொழியின் சாரமோ, உள்ளுறைப்பினின்று பஹிர் முகப்படும் சுந்தராமிர்தம் போலிருக்கிறது. இதைக் கொண்டே அறுமுகக்கடவுள், மஹாவிஷ்ணு, பர மேசுவரன் மற்றும் சகுணமூர்த்திகளது சாராம்சத் தை அறிவது எங்கடமை போலும்.

தானவன்:—மற்றும் யாவத் சந்தேகமுண்டா யினும் அச்சமின்றி வினுவில் விடைபகரச் சித்தம் சித் தமே.

மானவன்:—மஹா சுவாமிகளது ஆக்ஞாவின் வண்ணம் நாளை இரவு தங்களது திருச்சந்நிதானத் துக்கு அடியேன் வரவேண்டிய கடமை யிருத்தலால் கொடுக்குஞ் சிரமத்தை மன்னிக்கப் பிரார்த்திக்கி றேன். நமஸ்காரம், நமஸ்காரம்; சென்று வருகிறேன் குருப்ரபோ!

தானவன்:—(ஓம் சோ ஹம்)

(பொது) இவ்வாறு சாது சாக்ஷாத்காரமாய் ஜீவன் முக்ததிசையில் விதேகமுக்த சமாதியை நாடி யிருந்தனர்.

பிரதம தின சம்பாஷணை முற்றும்.

சுபம்.

ஓம்.

ஸ்ரீமதி இரத்தினம் சுவாமியார் அம்மணிகள்.

ओं

"नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन।
यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा वृणुते तनूं स्वां॥"

"நாயமாத்மா ப்ரவசனேன லப்யோ ந மேதயா ந பஹுனா
[ச்ருதேன ।
யமேவைஷ வ்ருணுதே தேன லப்யஸ்தஸ்யைஷ ஆத்மா வ்ரு
[ணுதே தனூம் ஸ்வாம் ॥"

"This *atman* is not to be attained by a study of the Vedas, nor by intelligence, nor by much hearing, but the *atman* can be attained only by him who seeks to know it. To him, this *atman* reveals its true nature."

(Kathopanishad.)

(வெறுமனே) வேதங்களை வாசிப்பதாலும், புத்தி சாதுர்யத்தாலும், அதிக சிரவண (பல)த்தாலும் (மட்டுமே) ஆத்மலாபம் கிடைக்கக் கூடியதல்ல; ஆனால் யாவன் அதை அறியவேண்டுமென்று (தீவிரதர முமுக்ஷுவாய்) தேடுகிறானோ அவனால்தான் ஆத்மா அடையக்கூடியது. அவனுக்கு ஆத்மாவே தன் ஸ்வரூபத்தோடு பிரசன்னமாகிறது.

(கடோபநிஷத்.)

ओं

"नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः ।
नाशान्तमानसो वापि प्रज्ञानेनैनमाप्नुयात् ॥"

" நாவிரதோ துச்சரிதாந் நாசாந்தோ நாஸமாஹிதா ।
நாசாந்தமானஸோ வாபி ப்ரஞானேனைன மாப்நுயாத் ॥ "

"None who has not turned away from bad conduct, whose senses are not under control, whose mind is not collected, or whose mind is not at rest, can attain this *atman* by knowledge."

(Kathopanishad.)

யாவனொருவன் துர்நடத்தையிலிருந்து விலகவில்லையோ, எவனுடைய இந்திரியங்கள் ஜெயிக்கப்படவில்லையோ, எவனது மனம் ஒருமுகப்படவில்லையோ அல்லது யாவனுடைய மனம் (சகல ஆசைகளையும் துறந்து) ஶாந்தியடையவில்லையோ — அன்னவன் ஞானத்தால் ஆத்மாவை அடைய முடியாது.

(கடோபநிஷத்.)

பௌர்ணிமி தீக்ஷோபதேச ஸம்பாஷணை.

(போது) மானவன் பௌர்ணிமி யிரவு குறித்த நேரத்திற்கு முன்னரே ஆசிரமத்திற்கு வந்துதானவனுக்கு நமஸ்காரஞ் சமர்ப்பித்து, பின் வருவதைச் சொன்னார்.

சுவாமி! இங்கிருந்தகன்றதுமுதற் றேகந்தா னங்கிருந்ததே யொழிய "எங்கணா யினு மன்பரா யிருப்பவரிதயம் விட்டகலாரே" என்றபடி சிந்தை யுமது திருவடியினை விட்டகலவே யில்லை யில்லை.

தானவன்:—வருக வருக, பக்த! இன்னமுந் தகுதியான பௌர்ணிமிக்குச் சிறிது பொழுதுளதாதலால், இதுவரையிலும் நீ எவ்வெவர்பா லென்னென்ன உபதேசம் பெற்றிருக்கிறாயோ, அவை யாவற்றையும் கிரமமாக இயம்புக. அவற்றா லதிகாரத்துவம் தெரிய வரும்.

மானவன் :—தேசிகா! அடியேனுக்கு ஸ்ரீமத் சாங்குசித்த சிவலிங்க நாயனார் சுவாமிகள், பஞ்சாக்ஷரத்தை ஸ்தூலம், சூட்சுமம் என சத்தியக்ஷரங்களுடனும், பீஜத்துடனும் போதித்தனர். இஃதை மன திலடுத்தடுத்

துச் சங்கற்பஞ் செய்ததில் பக்திப்ரேமை அதிகரித்துப் பயித்தியம் பிடித்தவன்போல, கண்ணுறு கரைபுரள அலறியலறி யழுது தொழச் சத்துவம் வாய்த்தது. ஸ்ரீமத் - அபரஞ்சிதவிழி சுவாமிகள் மத்திய ஆருதாரத்தில் ஒளியைக்காட்டி அதனிலேயே நாட்டம் வைத்திருக்கக் கட்டளை யிட்டனர். அதைச் செய்யுங்கால் சங்கு நாதம், சிங்கநாதம், கின்னரம், மத்தளம், மணி முதலான நாதங்களும் கேட்கப்பெற்றேன். மரகதம், மாணிக்கம், ஸ்படிகம்போன்ற பிரகாசங்களெல்லாம் காணப்பெற்று இதுதான் ஞானமென்று சந்தோஷித்தேன். ஸ்ரீமத் இருஷி யோகீஸ்வர சுவாமிகள் சருவத்தையும் வெட்டவெளியாக்கி பிடரிமார்க்கமாய் உச்சி வழியே, ஆகாயத்தில் சந்திரன் சூரியன் நக்ஷத்திரங்களைப் பார்த்திருந்து, பிறகு அவைகளையுந் தள்ளி வெறு வெளி நாட்டத்தை இடைவிடாது யூகிக்கச் செய்தனர். இதனுல் விளைந்த காட்சியி னதிசயத்தை யென்னென்று சொல்லுவேன். நான் வீட்டினுள் ஓர் மூலையில் உத்தரதிசையை நோக்கி யுட்கார்ந்து மானசீக ஸ்நாநம் ஆசனசுத்தி, திக்பந்தனம், விபூதி ருத்திராக்ஷ தாரணம் முடித்து, கணபதி சரஸ்வதி சுப்ரமண்யர் விஷ்ணு ஈஸ்வரன் இவர்களது பீஜாக்ஷரங்களைத் தியானித்துப் பின்னும், அகஸ்தியர் சித்தர் கணங்களையும் அவரவர்களது முக்கியாட்சரங்களையும் கொண்டு தியானித்துச் சற்குருவையும் வந்தித்து ஹிதையென்னும் நாடிவழியாய் துவாதச ஸ்தானங்களையும் மானசீகமாகவே சுத்திசெய்து, உச்சிமார்க்கமாய் வெளியில்

சென்று அகண்டாகார நாட்டமாயிருந் திருக்கையில் மின்னல்போன்று ஜோதியுண்டாயிற்று. அச்சமயம் "அப்பப்ப! இஃதென்ன விந்தை! நாம் பூஜைசெய்யும் வீட்டின் மேற்கூரை *நாகத்தகட்டினால் மூடப்பட்டு அதற்குமேல் ஓடுகள் பரப்பியிருக்க, வானத்தின் மின்னல் நமக்கெப்படி தெரியவந்தது" என்று ஆச்சரியங் கொண்டு, மறுபடியு மச்சங்கற்பங்களை விலக்கிப் பழைய படி அகண்டாகார விருத்தியிலிருந்தேன். உடனே நக்ஷத்திரங்கள் தெள்ளெனப் பிரகாசிக்க சந்திரனொரு புறம் ஜ்வலிக்கத் தரிசித்தேன். சற்று நேரந்தான் தோற்றியது. உடனே மெத்தையினின்று கீழிறங்கி வீதியில் நின்று வானத்தை யண்ணாந்துபார்த்ததில் யதார்த்தமாய் அச்சமயம் சந்திரனெவ்வளவு வளர்த்தியோ அதே கிரமமாயும் எங்கு தோற்றியதோ அதே ஸ்தானத்திலேயே இருக்கவும், அதைச் சூழ்ந்திருந்த மேகமும் மற்றும் நக்ஷத்திரங்களின் கூட்டமும், ஆகாயத்தின் சீதளதிருஷ்டியும் கண்டது கண்டபடியே உள்ளிருக்கையில் புலப்பட்டதென்று தெரிந்தேன். அக்கால் எனக்குண்டான வதிசயத்தையும், ஆனந்தத்தையும் என்னென்று சொல்லுவேன்! இக்காலமு மஃதை நினைக்கநினைக்க மனோ வுல்லாச மாகின்றது. இவ்வண்ணம் ஓர் தினம் பகலில் நிஷ்டை கூடியிருக்கையில்

---

* இம்மலைப் பிராந்தங்களில் பனி அதிக மாதலாலும் மழையுங் கனமாதலினாலும், கீழ்நாட்டில் வீடுகளுக்கு ஓடு மூடுவதுபோலன்றி (Zinc) நாகத்தகட்டை பரப்பி அதற்கு மே லோடு மூடுவது வழக்கம்.

ஆதித்தனைப் பார்க்கப் பெற்றேன். நிஷ்டைகலைந்து வெளியே சென்று பார்க்கையில் வானத்தின்கண் அந்நேரம் பிரகாசித்திருக்குஞ் சூரியன்தான் எனக்குப் புலப்பட்டதென்று கண்டு புளகாங்கிதம் கொண்டேன். சுவாமி இப்பொழுதும் அச்சாதனையைக் காலைமாலை அநுசந்தானஞ் செய்து வருகிறேன்.

தானவன்:— நீர் விடுதி ஜென்மத்தவ ராயினதினால் யாவும் கிரமமாகப் பெற்றிருக்கின்றீர். சமயதீட்சையும், விசேஷதீட்சையும் பெற்று அக்குருமணிகள் வாக்கியந் தட்டாது அனுஷ்டித்து வந்ததினாற்றான் இன்று நிருவாணதீட்சைக்கும் பாத்தியஸ்தராகப் போகிறீர்.

மானவன்:— தயாநிதி, இப்பொழுதுதான் தங்களால் தீட்சையுள்ளும் பலவேறு விதமான தீட்சையுண்டெனக் கேள்வியுற்றேன். இதற்குமென்மேலும் மற்றும் வழிதேட வேண்டியதென்றும் தெரிந்துகொண்டேன். இவ்வளவிலேயே நின்று நாதத்தைக் கேட்டதும், காட்சியைக் கண்டதும் போதுமென்றால் அவன்கதி என்னவாகிறது?

தானவன்:—நன்மதி மாணவ! கேளும்.

நிஷ்டானுபூதி.

" இத்திற மான யோகசா தனையி
லிருந்துசா திப்பவர் தமக்குச்
சுத்தமா நாதத் தொனிகளும் பலவாத்
தோன்றிடு மணிகடன் மேகம்

'மத்தளம் பேரி யாழொலி சிலம்பு
வளையளி தாளமென் றுமையாட்
கத்தனு மொழிந்தா னன்றியு முரவோ
ராய்ந்தெடுத் துரைத்தன ரன்றே."

"இயம்புநன் னிலையி னிட்டைசா திப்போர்க்
கின்னொளி கோடிக ளொன்றாய்
வயங்குவ போல வகக்கணிற் றோன்று
மற்றதும் பொருளல வென்றே
தியங்குற வெந்தை யுமைக்குரைத் திடவே
தேவிகேட் டதனைநீ தெளிய
நயம்பெறப் புகறி யென்னவே வினவ
நாதனுந் தெளிவுற நவிலும்."

மந்திரங்களை மட்டிலும் சங்கற்பித்து வருவதால் ஜனனமரணாவஸ்தையினின்று விடுபட முடியாதெனினும் மேலானவழிகளை யுணர ஏதுவாகும். ஒளியினுட்டம் வைத்தால் நட்சத்திரலோகத்தில் ஜனனமெடுக்க நேரும். சந்திரனைப் பாவனை செய்தால் அவ்வுலகத்திற்குத் தூமாதிமார்க்கத்தால் பிதுர்யானவிற் சேர்க்கும். சூரியபாவனையினால் அவ்வுலகத்திற்கு அர்ச்சராதிமார்க்கத்தால் தேவயானவிற் சேர்க்கும். ஆகாசபாவனையால் வெளியில் சேரநேரும்; அத்துவிதிகள் நாட்டம் *உணர்வெளியாதலால் மேற்சொல்லியவைகளுக் கெல்லாம் கர்த்தவ்வியமாய அதீதத்தில் ஐக்கியமாக்கும்.

---

* வெளியே பஞ்சகிருத்தியங் கட்குங் காரணம். அதனைச் சுபாவம் என்பார்கள் சிலர். அச்சுபாவம் சக்தியென்றும், அச்சக்தி சத்தன்பாலுளதென்றும், சத்தன் சுவாதீனன்

R6 N15 5606.

வள்ளலார் சாத்திரம்.

" மண்ணோடு மண்ணார் போனார் வளியொடு வளியார் போனார்
தண்ணொடு தண்ணார் போனார் தழலொடு தழலார் போனார்
விண்ணொடு விண்ணார் போனார் விளங்கறி வுருவாய் நின்ற
நுண்ணிய நானே யெங்கு நுழைந்திடா திருக்கின் றேனே."

என்பது கவனிக்கத்தக்கது. விளக்கைப் பொருத்தினால் மேனோக்கி எரிகிறது. ஜலத்தை மேலே இறைத்தால் கீழே விழுகிறது. தேயுவும் வாயுவும் மேனோக்குவதாயும், பிருதிவியும் அப்புவும் கீழ்நோக்குவதாயும், ஆகாயம் சமரசமாயும் சஞ்சரிக்குங் குணமுடைத்தானது. நம்முடைய சங்கற்பமும் இவைகளில் யாவற்றைப் பற்றி சாதித்து வருகிறதோ அவ்விடத்தையே நோக்கி உடலினின் றுயிர் விலகுகையில் அச்சங்கற்பத்துடன் அதற்குரித்தான ஸ்தானத்தில் அவ்வப்பூதங்க ளாகர்ஷித்து ஜனனத்திற் கீடுபடுத்தும். இதற்கு சாக்ஷி சடபாரதரே போதாதா? பகவத்கீதை 8 - வது அத்தியாயம். 5 - வது சுலோகம்.

अन्तकाले च मामेव स्मरन्मुक्त्वा कलेबरम् ।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः ॥ ५ ॥

" எவன் பிராணாந்திய காலத்தில் என்னையே ஸ்மரித்து சரீரத்தைவிட்டுப் பிரிகிறானோ அவன் என் சொரூபத்தை யடைகிறான். இதில் சந்தேகமில்லை." 6-வது சுலோகம்.

यं यं वापि स्मरन्भावं त्यजत्यन्ते कलेबरम् ।
तं तमेवैति कौन्तेय सदा तद्भावभावितः ॥ ६ ॥

என்றும் அச்சத்தாமாத்திரம் இன்னதெனவும் ஸ்பஷ்டமாயறிந்து அதுவாயிருப்பதுவே வேதாந்திகள் அநுபவம்.

"குந்திபுத்திரா! எவன் அந்தியகாலத்தில் எந்தெந்த வடிவத்தை எண்ணி தேகத்தை விடுகின்றானோ அவன் அந்த வடிவ சங்கற்பத்தால் அச்சொரூபத்தையே அடைகிறான்"

என்று ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்குத் திருவாய்மலர்ந்திருப்பதாலும் கடைசி எண்ணம்போன்றே ஜன்மம் எடுக்க நேருமென்றேற்படுகிறது. ஆனால் சுகாதீத அறிவாயிருப்பவன் செல்வதற்கு இடமில்லையாதலால், அறிவாயிருப்பன். இதற்குமுன் சொன்ன துவித நாட்டம் மனதைக்கொண்டு செய்யவேண்டியது. ஆனால் அத்துவிதிகள் நாட்டமோ மனதைக்கொண்டு செய்வதல்ல. இவர்களது நாட்டத்தை அம்மனம் அறியாது. இவர்கள் அம்மனதையும் அதற்குமேலான ஜீவனையும் அறிவர். அவ்வறிவே ஆத்மா, அதுதான் நீ, நான், பரமான்மா, பிரஹ்மம், மோட்சம், ஆனந்தம். இது சாஸ்திரவாராய்ச்சியினால் வாய்க்கக் கூடியதன்று; ஆனால், பாரம்பரை ஆசிரியரிடம் உத்கிருஷ்ட மகாவாக்கியோபதேச மூலமாகவே பெற்றனுபவிக்கத்தக்கது. அஃதின்றேல்.

வள்ளலார்.

"குருவிலான் பெற்ற ஞானங் குமரியைக் குமரி கூடி
மருவிய வின்ப மொக்கும்"

என்ற வண்ணமும்; அஃது உற்றால்,

வள்ளலார்.

"மண்ணிடை நம்போல் வந்த
குருவினால் பெற்ற ஞானங் குமரியைக் குமரன் கூடி
மருவிய வின்ப மொக்கு மென்பர்நன் மதியு ளாரே"

என்பதைப் போன்றும் இன்பமுண்டாகும்.

மானவன்:— சுவாமி கடிகாயந்திரத்தில் 12 மணிக்கு 10 நிமிஷமிருக்கிறது.

தானவன்:—அப்படியானல் அருகில்வாரும் பக்த. முன்னுமக் குபதேசித்த குருப்பிரபுக்களனைவரையுஞ் சிந்தித்து சிரப்பிரணமம் சமர்ப்பித்துக் கொள்க.

மானவன்:— அங்ஙனமே ஆயிற்று, இதோ தங்களையும் வலம்வந்து தங்களது திருச்சன்னிதானத்தில் பத்திர புஷ்பாதிகளுடன் மஞ்சள் குங்குமம் விபூதி தாம்பூலம் துளசிபத்திரம் *லவணமின்றிய நவநீதம் சந்தனகுச்சு சமிதை நவதானியாதி பண்டுபலாதி பசும் பால் தேன் சமர்ப்பித்து, திருவடிக்கமலங்களுக்குப் பூஜை நடாத்தி அப்பாதபத்மங்கள் என்சிரம்பட அத்தியந்த பக்தியுடன் சாஷ்டாங்க நமஸ்காரம் சமர்ப்பிக்கிறேன்.

தானவன்:—அங்ஙனே சற்றிரு, சிரசின் உச்சிக் குழியில் பெரிய விரல்களா லழுத்துவதால் யாதும்

---

* Satyartha Prakash of Maharshi Swami Dayanand Saraswathi:-What is the good of *Havan* or Fire Sacrifice?

Answer : All men know that the foul air and bad water produce disease, which in turn begets suffering among mankind; but, on the contrary, pure air and water bring on health, and the absence of disease produces comfort among them.

தயாநந்த சரஸ்வதி மஹாரிஷி எழுதிய சத்தியார்த்த ப்ரகாஷ் என்னும் புஸ்தகத்திலுள்ளது:—

எக்கியம் நைவேத்தியம் முதலான அக்னிஹோத்திரத்தால் என்ன நன்மை உண்டு?

சங்கடப் படவேண்டாம். மௌனமாயிரு *பாததீட்சை செய்து கடத்திற்குள் நாட்டத்தை நிரப்புகின்றேன். ஆயிற்றெழுந்திரு.

மானவன் :—சுவாமிகள் என்னமோ லகிரியாகவும் போதையாகவு மிருக்கிறதே.

தானவன் :—பின்னுற் செப்பு, இப்போது நான் சொல்லுவதை கவனி.

மானவன் :—கட்டளைப்படியே வாய்பொத்திக் கொண்டேன். தற்சமயம் தங்களது சன்னிதானம் மகா விசுவாசத்தையும் பயங்கரத்தையும் விளைவிக்கிறது சுவாமி!

தானவன் :—நான் உனக்கு தெரிகிறதா?

மானவன் :—ஆம் உடம்புதான் நீவிரென்று தெரிகிறது.

தானவன் :—இவ்வுடம்பு உன் காதிற்கா நாசிக்கா அல்லது மற்றும் எந்த அவயவத்துக்குத் தெரிகிறது?

உத்தரம் : அசுத்த காற்றும் கெட்ட ஜலமும் வியாதியையுண்டாக்குகிற தென்பது மனிதருக்குத் தெரிந்ததே; வியாதியோ மனுஷருக்கு உபத்திரவத்தைப் பிறப்பிக்கிறது; ஆனுல், இதற்கு எதிராக, சுத்தமான காற்றும் தண்ணீரும் சௌக்கியத்தைப் பயிற்றுகிறது; நோயற்றபோது சுகாநுபவம் உண்டாகிறது.

*தீட்சைகள் அஸ்ததீக்ஷை, வாசகதீக்ஷை, மானசதீக்ஷை பரிசதீக்ஷை, நயனதீக்ஷை எனப்பலவுள.

மானவன் :—என் கண்ணுக்குத் தெரிகிறது

தானவன் :—கண்ணுக்குத் தெரிகிறதென்று காதிற்குத்தெரிந்து சொன்னுயா? நாசிக்குத்தெரிந்து சொன்னுயா? வாய்க்குத்தெரிந்து சொன்னுயா?

மானவன் :—இவைகளுக்கெல்லா மெப்படித் தெரிந்து சொல்லக்கூடும். என் கண்ணுக்குப்பின் னிருக்கும் மனதிற்குத் தெரிந்து சொன்னேன்.

தானவன் :—மனம் என்ன செய்கிறது?

மானவன் :—மனம் கண்களின் துவாராவாக (வழியாக)த் தங்களைப் பார்த்துக்கொண்டிருக்க, புத்தி விசாரிக்க, சித்தமும் அகங்காரமும் அவைகளுடைய குணத்தை கற்பிக்கிறது.

தானவன் :—மனம் நினைக்கிறதென்றும், புத்தி விசாரிக்கிற தென்றும், சித்தமும் அகங்காரமும் அவைகளுடைய தொழில்களை செய்கிறதென்றும், நீயே தெரிந்துகொண்டாயா? அல்லது நானே தெரிந்துகொண்டேனு?

மானவன்:—நான்தான் தெரிந்துகொண்டு சொன்னேன்.

தானவன் :—தெரிந்தவுடன் உனக்கென்ன உண்டாகிறது.

மானவன் :—விருப்பு அல்லது வெறுப்பு அல்லது உபேட்சை யுண்டாகிறது.

தானவன் :—இவைகளுடைய வியவகாரத்தால் விருப்பு வெறுப்பு உபேட்சையடைவது மனமுதலான அந்தக்கரணங்களா? அல்லது வேறு யாதேனுமா?

மானவன் :—இவைகளுடைய சேஷ்டையை அறிவதும் அதினாலின்பு துன்புறுவதும் வேறு யாதோ ஒன்றுக்குத்தானிகழ்கிறது. அதுதான், சுவாமி, நான்! முன்னம் அங்கவஸ்திரம் யாவருடையதென்றும் சிரம் முதலானவை யாவருடையதென்றும் கேட்டபோது எனது எனது என்றேனே அதுதானிது.

தானவன் :—சிஷ்ய! சிஷ்ய! அவ்வளவு அவசரப் படாதே, அதுதான் ஜீவன். இந்தவிடத்தில் மயக்கமுடையோர் ஜீவனிருப்பதென்பதை மட்டுந்தான் அறிவார்களே யொழிய அச்சீவனின் செயலின்னதெனத் தெரியாதவகையிற் கலங்கி அந்தக்கரணத்துடன் கலந்து, அதிலிருந்து தியங்கி பொறிகளிலிறங்கி, பொறிகளிலிருந்து விஷயங்களிற் சென்று, இத்தூலமே நானென்று கலங்கி அஞ்ஞானத்திற் காளாகிறார்கள்.

மானவன் :—நாதா! இவைக ளொன்றன் பின்னொன்றாக அடுக்கடுக்காய் இருக்கிறதே. பொறிகளில்லாவிட்டால் விஷயங்களைப் பார்க்க, கேட்க, முகர, முடியாது. அந்தக்கரணங்களில்லாவிட்டால் பொறிகளிருந்து மென்னபயன் ஜீவனே யில்லாவிட்டால் அந்தக் கரணங்களெங்கே?

இவைகளால் ஜீவன்தான் சுகமும், துக்கமும், சாந்தமு மடைகிறவனென்றாயிற்று. முன்னமே தாங்கள்

எனக்கு சுகமும் துக்கமும் மற்றதும் கிடையாதென்று நவின்றிருப்பதால், நான் இச்சீவனுமல்லன்; இதற்கு மேலாயிருக்கப்பட்டவன்தான் நானாக இருக்கவேண்டும். விஷயம், பொறி, கரணம், ஜீவன் இவைகளை எப்படி தனித்தனியாய் நிரூபித்தீரோ அங்ஙனே யாவற்றிற்கும் மேலாயிருக்கும் என்னையும் புகட்டிவையும் சற்குருநாதா! சிற்பிரகாச வேதா!! கருணாநிதி, குணநிதி!!! நமஸ்காரம்.

தானவன் :—சமீபத்தில் வாரும் ஐய! செவியிலோதுகிறேன். **தத்தோம் அசி** (அந்த ஜீவனுக்கு விருப்பு வெறுப்பு உபேட்சை * * * * தெரிகிறதா? தெரிகிறதா?) அதுவே சாட்சியாம். அதுதான் நீ தெரியவந்ததா? ஓம் தத்ஸத் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மானவன் :—என்ன ஆச்சரியம்! என்ன சூட்சுமம்! என்ன ஆனந்தம்! என்ன சுகம்! இதுவே சதா நானாயிருக்க, அடடா தெரியாதுழன்றதே ஜீவன். இந்தப்பதார்த்தமே நான். சந்தேகமின்றி அங்கை நெல்லியங்கனிபோற் றெரியவந்ததால் தன்யனானேன். நினைத்திருந்தபடி ஒருபோழ்தும் நான் விவகாரத்தி லீடுபட்டவனுமல்லன் படுகிறவனுமல்லன் படப்போகிறவனுமல்லன் சுவப்பனாவஸ்தையு மெனக்குக் கிடையாது, சுழுத்தியவஸ்தைக் கீடானவனுமல்லன். இவைகளையெல்லாம் தனித்திருந்தறிந்த சாட்சியே நான். பின்னும் நீருமஃதே நானுமஃதே, அழியுமகங்கார மமகார மெனக்குக்

கிடையவே கிடையாது. தனந்தானியம், மக்கள் சுற்றம் கைவிட்டேகினும் நான் வியாகூலத்திலாழ்பவனல்லன். வியாகூலத்திலாழ்பவன் ஜீவன். அச்சீவ வியவகாரத்தையு மறிந்து சாட்சியா யிருப்பவனாகியவன்தான் நான்.

பஞ்சபதமகாவாக்கியம்.

" விமலனே யென்னுள் வேரற்ற காட்சியே
நிமலனே நித்தி யானந்த ரூபனே
கமலனே நேயக் கதிரவன் போலுளத்
தமல னேயறி வானந்த ரூபனே."

" அறிதரு மலத்தை மூன்று யபிமானியானைப் போற்றி."

கைவல்லியம்.

"ஐயனே யெனது ளேநின் றனந்தசென் மங்க ளாண்ட
மெய்யனே யுப தேசிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன்
செய்யுமா றொன்றுங் காணேன் றிருவடி போற்றி போற்றி"

தானவன் :—பழமை விவேகாநந்தத்திலகமே! நின்றீவிரம் அழகு! சாலவழகு!!

கைவல்லியம்.

" சிட்டனிவ் வாறு கூற தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்
கிட்டவா வென விருத்திக் கிருபையோ டருளிச் செய்வார்
துட்டமாந் தடைகண் மூன்றுந் தொடராமற் சொருப ஞான
நிட்டனா யிருக்கி னீதே நீசெய்யு முதவி யாமே."

என்று நவின்றுள்ளதை யுள்ளத்திருத்தவும்.

மானவன் :—குருபிரபோ! சித்தம். சித்தம். இனியும் சந்தேகம் என்பதும் ஒன்றுண்டோ! அப்படி

வரும் சந்தேகம் யாவனுக்கு? ஜீவனுக்குத்தானே, அதற்குக் காரணம் அந்தக்கரணம் முதலானவை யன்றோ! நானோ இவைகளையும் இவைகளது அஞ்ஞான சந்தேக விபரீதங்களையும் அறிபவனுச்சுதே ஆயினதினு லென்பேர் அறிவு.

தானவன் .— வாழ்க. நிர்மாண காயராசி சூழ்க. இற்றை முதலஞ்ஞானந் தாழ்க. இஃதால் தோம்பத லக்ஷியமானுய். தத்பத நாட்டம் புகட்டுகிறேன். சிரத்தையுடன் கவனியும்.

மானவன் :—தடுத்தாட் கொண்ட தேசிக மணியே! தொம்பதம் தத்பத மென்கிறீரே இவை ஜீவனை பந்திக்கும் ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்துவம் எனும் மூன்றையும் பஸ்மமாய் நீற்றுவிடுமோ ?

தானவன் :—ஐயமென்னை! "தொம்பதம் விளங்கின் மேல்வினை (ஆகாமியம்) மறைத்ததொல் லிருள கன்று போயொளிக்கும் தம்பதமான தற்பதம் விளங்கிற் சஞ்சிதமாயை போயொளிக்கும் அம்பதமான வசிபதம் விளங்கிலரும் பிராரத்தம் போயொளிக்கும் செம்பூத வருளே வடிவதா யான்மாச் சிவத்தினுக் கங்கமாய் நிகழும்." என குமாரதேவர் திருவாய் மலர்ந்திருப்ப தாலும், மஹாவாக்கியமாதலாலும், ஒருமொழி யென்பதாலும் இதைவிட வேறுவிதி யாவற்றுளது.

மானவன் :—அப்பனே தோம்பதத்தில் விளங்கித் தத்பதமும், அதனினின்றும் அசிபதமும் பெற்றபின்

னல்லோ பிராரத்துவம் நாசமாகிறது. தொம்பத தத்பத அப்பியாசத்திலேயே இருந்து அசிபத லக்ஷியார்த்தம் வாய்ப்பதற்கு முன்னம் ஜீவன் விலகிவிட்டாலோ? அவன்கதி என்னவாகும்.

தானவன் :—ஏ சிஷ்ய கேட்கத்தகுந்ததை கேட்டாய். மானவர்களிற் பலர் ஆசான்பாலண்டி அறிவேதான்என்று தெரிந்துகொண்டு தொம்பத அப்பியாசியாயிருந்து மேற்படி யிரண்டு படிகளுக்கும் முயற்சிக்காது திரும்பவும் மண், பெண் பொன் வாஞ்சையிலாழ்ந்து அதிஞகாரமாகி, போலி சுகத்திலழுந்துகிருர்கள். அப்படிக்கின்றி வைராக்கியத்துடன் ஞானசொரூபமாய் சதா நிஷ்டையில் ஸ்வாநுபவத் தேர்ச்சியுற்று அருள் விலாசராயிருக்க நேர்பவர் வெகுசிலர். வீண் பிரசங்கம் செய்வதால் ஞானியாவதரிது. இதோ இச்செய்யுளை நோக்கு "தன்னைத்தானறியாமல் நாய்போல உளறினல் தாரகம் வெளியாகுமோ, தானென்ற வாணவ பேய் தனைக்கொல்லாமல் தப்பிதங்கள் போகுமோ, பொன்னையும் மண்ணையும் பெண்ணையும் மறக்காமல் பொய் மெய்யு மொன்ருகுமோ" ஆசான்பாலண்டியும் விரக்தியில்லாது வியவகாரத்திலாழில்,

"அடுத்தமற் றிரண்டு சனனத்தில் வீட்டை
 யடைந்திடுந் தொம்பத நெறியோர்
அடுத்த மற்ருெருநற் சனனத்தில் வீட்டை
 யடைந்திடுந் தற்பத நெறியோர்
அடுத்தவிச் சனனத் தினிலடைந் திடும்வீ
 டசிபத நெறியுளோ ரிவரும்

அடுத்தவிவ் வுடலோ டடைந்திடா விடின்மே
லாக்கையொன் றெடுக்குமென் றுணர்வாய்."

அசிபதம் வாய்க்காதவர்களுக்கும் அவதியுண்டு.

மானவன்:—அப்படியா! அப்படியா! ஐயா! உனது செல்வனை அசிபதத்திற் சேர்த்துவிடும் ஐயனே, துய்யனே மெய்யனே, என்னை யதார்த்த ஞானியாக்கி விடும் ஞானவீக்ஷண்யனே.

தானவன்:—

உபநிடதம்.

" சத்தமுத லைந்தனையும் பொறிகளறி யும்பொறிக
டம்மைத் தானு
யொத்தகா ணமதறியுங் காணத்தை யறியுமுயி
ருயிரைத் தானு
நித்தியமா யிருந்தறியுஞ் சாட்சி."

என்பது வரை தொம்பதம்.

" அகண்டாகார நீங்கிமேலா யித்தனையும் பகுத்தறியு மறிவுவடிவாயிருப்பதியல்ப தாமே."

என்பதும்,

" விடயமறிந் திடும்பொறிகள் விடய மாமோ
மிக்கபொறி யறிகரணம் பொறிக ளாமோ
வடையவறி சீவனந்தக் கரண மாமோ
வதனையறிந் திடுஞ்சாட்சி சீவ னாமோ
தடையறவொன் றினையறியு மொன்று மேலாஞ்
சாட்சியையொன் றுலறியத் தகுமோ தானு
யிடையறநின் றிலகுமெனி னதனைக் காண்டற்
கேதுண்டா மதுவாகி யிருந்து காணே."

என்பதுவும் தத்பதம். திரிசியமாகிய யாவத் வஸ்துவினுள்ளும் புறம்பினுமிடையினும், ஐம்பொறிகளுள்ளும் புறம்பினு மிடையினும், அந்தக் கரணங்களினுள்ளும் புறம்பினுமிடையினும், ஜீவனினுள்ளும் புறம்பினுமிடையினும், இவைகளியாவற்றிற்கும் இருப்பிடமாகிய வெளியில் வெளியாகவும் உணர்வொளியாகிய, நான் ஏகமாயிருப்பதை நிரூபிக்கின்றேன். இந்த நாட்டந்தான் தத்பத லக்ஷணம், இதுவே அசலம் மோக்ஷம் பிரஹ்மம் நீ அது என்பது.

மாணவன் :—தேசிகா ! இனி சங்கிக்கவேண்டியவை இன்னதென்றறியா அறிவிலியாகிய நாயினேற்குத் தாங்களே பிரசன்னை யுண்டாக்கி, உத்தரமீயக் கிருபைபாலிப்பதால், ஆர்ஜவகுரு நீவிரே யென்பதற்கையமென்னை ? குருதட்சணை முதலியதுங் கவனியாது, பொருளவாவற்றுச் சீவன் கடைத்தேறினாற் போது மென்கிற கருணையே திருவுருக்கொண் டெழுந் தருளுஞ்சிவ சொரூபமே சரண்.

பிரமக்தை

“ மாரிபோன் மாறுவேண் டாதே
மீட்சியில் பதத்தைக் கருணையா லளிக்கும்
வித்தகக் குரவனே யெவருந்
தாழ்ச்சிசெய் தேத்தற் குரியதத் துவமாஞ்
சங்கர னென்றிடத் தகுவான் ”

என்பதிற் கிலக்கான ஆசிரியர் கிடைக்கப் பெற்றதும் பாக்கியமே.

தானவன் :—ஹே சிஷ்ய! மனதைச் சிதறவிடாது இனி இயம்பும் சோதனையின் நடையைப் பின்பற்றிக் கொண்டே வருக.

மானவன் :—அங்ஙனே குருமணி.

தானவன் :—இப்போது நீயாரென்று தெரியுமா?

மானவன் :—தெரியும்; சுவாதீனப் பிரகாசமுடைய அறிவே நான்.

தானவன் :—தெளிவதற்குமுன் நீ என்பதை எதுவாய்க் கொண்டிருந்தனை?

மானவன் :—இந்த உடம்பைத்தான்.

தானவன் :—உடம்பென்பதெது காண்பியும்.

மானவன் :—இதுதான்.

தானவன்:—இதுதான் இதுதானென்று பரிசித்துக் காண்பிக்கிறாயே அப்பரிசம் எதனைத் தொட்டுக் கொண்டிருக்கிறது? உடம்பையா அல்லது சருமத்தையா (தோலையா)?

மானவன் :—என் உடம்பின்மேலுள்ள சருமத்தைத்தான் இப்போது என் கை பரிசித்துக் காண்பிக்கிறது.

தானவன்:—நான் உடம்பை காண்பிக்கவே கேட்டதன்றி உடம்பின்மேலுள்ள சருமத்தையன்று; இது நிற்க, சிரம் முதல் பாதம்வரை மூடியுள சருமத்தை நீக்கிப்பார்த்தால் அதனுள் என்ன புலப்படும்?

மானவன் :—மாமிசந்தான் புலப்படும்.

தானவன் :—அப்போது உடம்பென்பது மாமிசந் தானு ?

மானவன் :—என் உடம்பின் மேலுள்ள சருமம் என்று சொன்னதுபோலவே என் உடம்பின் மாமிச மென்றால் தவறுகுமோ ?

தானவன் :—அம்மாமிசத்தையும் நீக்கிவிட்டால் அதனுள் யாது புலப்படும் ?

மானவன் :—சருமத்திற்குள்ளே மாமிசம், மாமி சத்திற்குள்ளே அஸ்தி (எலும்பு) தான் புலப்படும்.

தானவன் :—அவ் வஸ்தியா உடம்பென்பது ?

மானவன் :— என்னுடம்பின் சருமம், என் மாமி சம், என் எலும்பு என்றியம்புவதே யொழிய, அஸ்தி தான் உடம்பெனப் பகர்வதில்லையே !

தானவன் :—அப்படியானுல் அவ்வெலும்பையு முடைத்தால் யாது புலப்படும் ?

மானவன் :—மூளை.

தானவன் :—அப்போது அம்மூளையா நீ (உடம் பென்பது) ?

மானவன் :—என் உடம்பின் சருமம், என் உடம் பின் மாமிசம், என் உடம்பின் அஸ்தி, என் உடம்பின் மூளை யென்கிறபோது நானுகின்றது உடம்பன்று ; வேறுமொன்றே.

தானவன் :—அம்மூளையையு மெடுத்துவிட்டால் யாதிருக்கும்?

மானவன் :—ஒன்று மிருக்காது. இருக்கவுங் காணேன்.

தானவன்.—மதிவல்லோய்! இவ்விடத்தில் நீ முன்சொன்ன வார்த்தைக்குப் பங்கம் வாராமல் காத்துக்கொள். உன்னுடம்பைக் காட்டெனக் கேட்டதற்குச் சருமத்தைத் தீண்டினுய், அதின் பெயரை வினவிட 'என் உடம்பின் சருமம்' என்ருய்; பின்னுங்கேட்க 'உடம்பின் மாமிசம், உடம்பின் அஸ்தி, உடம்பின் மூளை' யென்ருய். இப்போது ஒன்றுமில்லை யென்கிருயே. அங்கவஸ்திரத்தை உடைத்தானவன்ருனே நீ. அங்கவஸ்திரமே நீயென்று சொல்ல பைத்தியக்காரனல்லவே. இக்கால் சருமம் முதலியவைகள் எங்கிருக்கிறது. உடம்பென்பதெங்கிருக்கிறது? யோசித்தறைக.

மானவன்.—சருமமாதிக ளடங்கிய விக்கூட்டத்தைத்தான் உடம்பென்று பல்லோரும் அங்கீகாரஞ் செய்திருக்க வவற்றின் கலப்பின்றி உடம்பைமட்டும் தனியே எப்படி காண்பிக்கக்கூடும். ஆகவே சருமமாதிய விவற்றின் சமுதாயமே உடம்பெனப்படுகிறது.

தானவன்.—இருக்கட்டும். உன் அருகேயிருப்பதென்ன?

மானவன்.—* * * * * குடை.

தானவன்.—பிரத்தியக்ஷத்திற் தோற்றுகிற தல்லவா? பிரத்தியக்ஷத்திலும் விபரீதம், சந்தேகம், யதார்த்த மென மூன்றுவகை. இவைகளைப்பற்றி விஸ்தரிக்கில் காலமாகும். திருஷ்டாந்தா யுக்தி பூர்வகமாய் விளக்குகின்றேன்.

மானவன்.—அங்ஙனே சுவாமி. சிரமம் க்ஷமித்தருளுதிர்.

தானவன்.—* * * * மேலிருப்பதற்குப் பெயரென்ன?

மானவன்.—துணி.

தானவன்.—உள்ளிருக்கும் ஒவ்வொன்றிற்கும் பெயரென்னே?

மானவன்.—கம்பிகள், மத்தியில் மூங்கிற்குச்சு.

தானவன்.—குடையென்று வழங்குவதற்கு இருப்பாய் (பொருளாய்) இருப்பது என்ன?

மானவன்.—துணி, கம்பிகள், மூங்கில்.

தானவன்.—அவற்றில் குடையென்பது எங்கேயிருக்கிறது?

மானவன்.—* * * * இதுதான் குடை: துணி, கம்பிகள், மூங்கில். (மூன்றுஞ்சேர்ந்தது.)

தானவன்.—பக்த! இதோ *இவ்வளவு பிரமாண

* இந்திரபீடம் ஸ்ரீசச்சிதானந்த ஸ்வாமிகளின் பாணி.

முள்ள ஒரு கைக்கடிகாரத்தை அதே அளவுவாய்ந்த மற்றொரு கைக்கடிகாரத்தினுள்ளே நுழைத்து வைக்கக்கூடுமோ ? கூடாதல்லவா ? ஒரு கைக்கடிகாரத்தின் மேலே அல்லது கீழே அல்லது பக்கங்களில்தானே மற்றொரு கைக்கடிகாரத்தை வைக்கக்கூடும்.

மாணவன் :— ஆமாம் சுவாமி.

தானவன் :—அப்படிப்போல் துணி, கம்பிகள், மூங்கில் இவைகளுக்கு எப்புறத்தில் குடை யென்பது இருக்கிறது ?

மாணவன் :—குடை என்பது துணி, கம்பிகள் குச்சு இவைகளுக்கு மேலும் கீழும் பக்கத்திலுமில்லவே யில்லை. இந்தத் துணி, கம்பிகள் குச்சு இவைகளைத்தான் குடை என்பது.

தானவன் :—குடை யென்பது துணி, கம்பிகள், மூங்கில் இவைகளைத்தவிர உண்டா ?

மாணவன் :—இல்லவே இல்லை. இருப்பது துணி கம்பிகள் குச்சு ; வழங்குவது குடை என்று ; குடை யென்பதற்குத் தனியே பொருள் கிடையவே கிடையாது. ஆ ! என்ன விந்தை !

தானவன் :—அப்படியே உடம் பென்பதும் சருமம், மாமிசம், அஸ்தி, மூளை, இவைகளின் எந்த புறத்திலிருக்கிறது ?

மாணவன் :—உடம் பென்பது இவைகளின் மே

லும், கீழும் பக்கத்திலுமில்லவேயில்லை. இந்த சருமம், மாமிசம், அஸ்தி, மூளை இவைகளைத்தான் உடம்பென்பது.

தானவன் :—உடம்பென்பது சருமம், மாமிசம், அஸ்தி, மூளை இவைகளைத்தவிர உண்டா ?

மானவன் :—இல்லவேயில்லை. இருப்பது சருமம் முதலானவைகள் ; வழங்குவது உடம்பென்று. உடம்பென்று தனியே வேறு பொருள் கிடையவே கிடையாது ; ஆ! என்ன மயக்கம்! இருப்பது சருமம் முதலானவைகளே ; இவைகளின் தோற்றத்திற்கு உடம்பென்பதாயிற்று. உடம்பென்பதற்குத் தனியே வேறு பொருள் எந்தப் புறத்திலு மில்லவேயில்லை. இது என்ன அஞ்ஞானம்! ஆராய்ந்து பாராமல் அந்தகாரத்திலாழ்ந்து உடம்புடம்பென்று வழங்கி வந்ததினின்று இன்றுதான் தெளிந்தனன். அப்பப்பா ! வேதாந்த மென்பது வெறுமனே நம்பிக்கொள்ளும் மரபல்லை. உள்ளங்கை நெல்லியங் கனிபோற் புலப்படுத்தும் வாத சாம்பிரதாய நெறித்தாயிருக்கிறதே.

தானவன் :—இனியுங்கேள் மானவா, ஒன்றுமில்லாததுதா னிருப்பது, உடம்பென்பது தோற்றமாயிற்று. இதற்கு மேல் இனியுமியம்பும் யுக்தி நுணுக்கங்களை வெகு கவனமாய் மனனித்து வருக. இல்லாதது எப்போது மில்லாததாகி இருப்பது நீயே யென புலப்படும் வித்தியானந்தம் வெளிப்படும்.

மானவன் :—ஐயையா ஒன்றுமிலாததுவுமில்லாததாகி உடம்பென்பதைப்போன்று அபாவமாகுமா!

தானவன் :—இரண வைத்தியரொருவர் பிராண வாயு விலகிய ஓர் கடத்தைச் சோதிப்பான் வேண்டி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சேதித்துச் சருமம் மாமிசம் மூளை இவற்றை ஓர் புறமும், அஸ்திகளை யெல்லா மற்றோர் புறமுமாக ஓர் அறையில் குவித்து விட்டு வெளியே வந்துவிட்டதாகவும், அவ்வறைக்குள் நாம் சென்று பார்த்ததாகவும் வைத்துக்கொள்வோம். அப்போதாங்கு சேதித்து வைக்கப்பட்டிருப்பவைகளைப் பார்த்து என்னென்று வழங்குவோம்?

மானவன் :—மாமிசம், அஸ்தி என்று வழங்குவோம்.

தானவன் :—உடம்பென்று ஏன் வழங்கப்படாது?

மானவன் :—உடம்பு இருந்தால்தானே உடம்பு என்னலாகும்.

தானவன் :—உடம்பெங்கே சென்றிருக்கிறது?

மானவன் :—எங்குஞ் செல்லவில்லை. இந்த சருமம் மாமிசம் அஸ்திகள் மூளை முதலிய இவைதான் உடம்பாகத் தோற்றிக் கொண்டிருந்தது. அப்போதிருந்ததும் சருமமும், மாமிசமும், அஸ்தியும், மூளையுந்தான். இப்போதிருப்பதும் சருமம் மாமிசம் அஸ்தி மூளைதான். இடையிலே தோற்றல் மாத்திரமானது உடம்பு என்பது. அது பொருளல்ல. எப்படியெனில்,

துணி கம்பி குச்சு இவைகளைத்தவிர குடையென்பதற்குத் தனியே மற்றொரு பதார்த்தங் கிடையவே கிடையாததுபோல் சருமம் முதலானவைகளைத் தவிர உடம்பில்லை. இருப்பது சருமம் முதலானவைகளே என்று திடமாகக் கண்டனன். இன்னமும் இந்நடையென்னென்ன யுக்திக்குச் செலுத்துமோ சுவாமி! அதிக ஆவலுடன் எதிர் பார்க்கிறேன். ஆதியில் தங்களுக்குப் புத்திபேதனமென்று நவின்றதை நினைக்கில் அது முற்றும் என தறியாமையாலேயே நேர்ந்ததே யென்று ஜீவனுக்கு வருத்தமும் நாணமுஞ் சம்பவிக்கின்றது.

தானவன் :—முன்னம் தீர்மானித்த சருமம் மாமிசம் அஸ்தி மூளை, இவற்றை என்ன செய்யவேண்டி நேரும்?

மானவன் :—குழிகெல்லி அக்குழியிற் புதைத்து விடவேண்டியதுதான்.

தானவன் :—அவைகளைப் புதைத்துச் சிலவருடங்கள்சென்றபின் பார்த்தால் அக்குழியினுள் அம்மாமிச முதலானவைக ளிருக்குமோ?

மானவன் :—எது! யாவும் மண்ணாய்ப்போயிருக்கும்.

தானவன் :—இம்மண் எங்கே இருக்கிறது?

மானவன் :—மண்ணின் பேரிலேயே இருக்கிறது.

தானவன் :—எந்த மண்ணின் பேரிலிருக்கிறது?

மானவன் :—உலகமண்ணின்பேரில் சருமம் மாமி சம் அஸ்தி மூளையாகிய மண்ணிருக்கிறது.

தானவன் :—இச்சரும மாமிச அஸ்தி மூளை மண் எந்த ஊரிலிருந்து வந்தது? இது நூதன மண்ணு அல்லது பழைய மண்ணு?

மானவன் :—பழைய மண்ணென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. புதுமண்ணென்றால் எங்கிருந்து வந்ததென் றவ்விடத்தைச் சொல்லவேண்டியிருக்கும்.

தானவன் :—பழமை மண்ணென்பது சரியே. இஃதெவ்வண்ணந் தோற்றிக் கொண்டிருந்தது?

மானவன் :—சருமம் மாமிசம் அஸ்தி மூளையா யிருந்தது.

தானவன் :—மாமிசமு மஸ்தியுமெங்கே இருந் தது? மண்ணெங்கே இருந்தது?

மானவன் :—சருமாதிகளைத்தவிர உடம்பென்பது கிடையாது. ஆகையாலுடம்பு தோற்றம். அப்படியே மண்ணைத்தவிர சரும மாமிச அஸ்தி மூளை கிடையாது. ஆகையால் சருமாதிகள் தோற்றம், இருப்பது பொருள் மண்ணே. இவ்வாற்றாலிப்போதும் மண்ணே யாகிவிட் டது.

தானவன் :—மண் எப்படி உடம்பாயிற்று? (விய வகாரவார்த்தை.) * * *

மானவன்:—“ தந்தையின்பால் சுக்கிலமாய் இர

ண்டுமாதங்களிருந்தது. அச்சுக்கிலம் உற்புத்தியோ தந்தையுண்ட அன்னபானாதிகளால் விளைந்தது. இதன்விவரமெப்படியெனில் அருந்தினது அமர்வாசயமாகிற பையில் விழுந்து பின்பு பானத்தோடுகூடி பக்குவாசயப் பையில் வீழ்ந்து பிராணவாயுவிரண்டு கூறுக்க வொரு கூறு சிட்டமாகிற திப்பியு மற்றொரு கூறு சாரமாகிற ரசமுமாகும். இந்த விரண்டில் ரசமானது தாதுக்களாகவும் திப்பியானது மலமாகவும் மாறும். அஃதெப்படியெனில், நாள்தோறுமருந்தின (அறுசுவை) அன்னபானாதிகள் தேகத்தில் மூன்று நாளி லிரதமாம். இதன் திப்பி மலப்பையில் மலமுஞ் ஜலப்பையில் மூத்திரமுமாய் நாள்தோறுங்கழியும். இந்த இரதம் மூன்று நாளில் உதிரமாம். இதன் திப்பி தோலு முரோமமுமாம். இந்த உதிரம் மூன்று நாளில் மாமிசமாம். இதன் திப்பி சேத்துமமாம், இந்தமாமிசமும் மூன்று நாளில் மேதையாம். இதன் திப்பி பித்தமாம். இந்த மேதை மூன்றுநாளி லெலும்பாம். இதன் திப்பி நகங்களாம். இந்த எலும்பு மூன்றுநாளில் மச்சையாம். இதன் திப்பி குறும்பி, பீளையாம். இந்த மச்சை மூன்று நாளில் சுக்கிலமாம். இதன் மலம் முகத்திற் பரு, நெய்ப்புமாம். இந்த சுக்கிலம் மூன்று நாளில் தேகத்தின் பலமாம், இதன் திப்பி நிரந்தரம் நீங்குகிற நாலங்குல வாயுவாம். இந்த பலம் மூன்றுநாளில் பிரகாசமாயேழுதாதுக்களுக்கு முள்ளேயோங்கி பின்பு நீங்கிப் பரத்தோடே கூடிப்பரமேயாகும்." இவ்வுடலுக்கு முதற்காரணஞ் சுக்கிலமும் அச்சுக்கிலத்திற்குக் காரணம்

அன்னபானுதியுமாம். இவ்வன்னபானுதிக்குக் காரணம் பண்டு பதார்த்த தானியங்கள், இப்பண்டு பதார்த்த தானியங்கள் பஞ்சபூதத்தினு லுண்டாகியது. அப் போது இவைகளுக்கு முக்கிய வாதாரம் மண்ணே. பின்னை அன்னையின் வயிற்றிற் சுரோணிதத்துடன் கலப்புற்றுக் கருப்பாசயத்திற் கட்டுண்டிருந்தது. அச் சுரோணிதமும் மேற்கூறியவாறு மண்ணே. சிசு அங்கு உண்டு தன் தேகத்தை வளர்த்ததும் தாயுண்ட அன்னபானுதியின் சாரமே.

"ஆகநாள் விந்து விட்ட வைந்தாநாள் கடுகு போலாம்
போகயீ ரைந்தா நாளில் பொருந்திய முட்டை போலாம்
ஏகமா தத்திற் பிண்டம் இரண்டினில் மார்பு மட்டாம்
பாகமா மூன்றுந் திங்கள் பகருந்தி மட்டு மாமே.

மட்டுடன் நாலாந் திங்கள் வளர்ந்திடும் பாத மட்டும்
கட்டுட னைந்தா மாதங் கருதுபூ ரணமாம் ஆறில்
தட்டுட னெலும்பு ஜீவன் தலைமயிர் நரம்போ டேழாம்."

என உறுப்புகள் உற்பத்தியாகி முதிர்வதற்கெல் லாம் காரணம் தாயுண்ட அன்னபானுதியின் சார மாகும் மண்ணும்.

"எட்டுடனறிவாம் ஒன்பதில் தசம் பிறவியாமே"

என ஜனித்த பின்பும் அன்னையூட்டும் பாலின் காரணமும் மண்ணே. பின்னை அக்குழந்தை பால்ய, யௌவன, கௌமார வயோதிக பருவங்களை யடை யும்போதெல்லாம் கடத்தை வளர்க்கப்புசிக்கும் போஜ னுதிகள் யாவும் மண்ணின் கண்ணேயிருந்து தோன்

றியவாதலால், அவைகளால் உற்பத்தியான இச்சரீரமும் மண்ணே. ஆகையாலிப்போதும் மண்ணேயாகிவிட்டது. மண்ணைத்தவிர உடம்பென்பதே இல்லை.

தானவன் :—முன்னும் மண், பின்னும் மண்; இடையிலென்ன?

மானவன் :—இடையிலுடம்பு; அதைச் சோதித்தால் சருமமுதலியன என்கினும் அவற்றைச் சோதித்தால் மண்ணைத்தவிர வேறில்லையே! முக்காலங்களிலுமிருப்பது மண்ணே. இடைக்காலத்தில் தோற்றன் மாத்திர முண்டாகிறது.

தானவன் :—மண்ணென்பது ஒரு உடம்புதானு அல்லது சருவ உடம்புகளும் மண்ணு?

மானவன் :—மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் யாவும் அவ்வண்ணமே மண்தான். இதுவுமன்றி தங்கம் முதலான பஞ்ச லோகங்களும் நவமணிகளும் மற்றுமுள்ளனவும் முன்னும் மண்ணிலிருந்துண்டாயின. பின்னும் மண்ணுகவே முடிகின்றன. இடையிலும் மண்ணைத்தவிரவில்லை. இடையில் பலவகையாகத் தோற்றங்களுண்டாகிறதே! இவ்வண்ணமே சருவமும் தோற்றல் மாத்திரமாயிருக்க இவைகளைப் பொருளெனமதித்து மயங்கி, மண்ணுன உடலை நானென்றும் மண்ணுன பந்து பொக்கிஷ ஆடையாபரண பதார்த்தங்களை எனதென்றும், அகங்கார மமகாரங்கொண்டு சக்கிரவர்த்திமுதல் பிபீலிகை

யீருயுள்ள ஜீவர்கள் காதலுற்றுத் திரும்ப மண்ணுகவே அழிகிருர்களெனத் தெரிந்தனர் பிரஹ்மஞான வித்தியாபரர்கள். அப்புண்ணிய பிரஹ்மஞானிகள் ஏனையோரை அஞ்ஞானிகளென்றும் அந்தகர்களென்றும் புகலுவதி லிழுக்கென்னை ?

தானவன் :—சுவப்பனத்தின்கண் நாடு நகர் இல்லம் சுற்றம் பெண்டீர் மக்கள் திரவியம் சுகம் துக்கம் யாவும் நிகழுகிறதல்லவா ? அச்சமயத்தில் அவைகளைப் பொய் யென்று தெளிகின்ருேமா ? இல்லவேயில்லை. யதார்த்தமாகவே லயிக்கிருேம். விழித்த பின்போ அயதார்த்தமென்று தெளிகிருேம். அப்படியே ஆராய்ச்சி செய்து தெளியாததால் கடமுதலானவைச் சத்தியம் போற் காண்கிறது. ஆராய்ச்சி தீர்ப்பில், உடம்பு முதலானவைத் தோற்றல் மாத்திரமாய் விடுகிறது. ஞானசிலர் சதா விழித்திருப்போருக்குச் சமானம். மற்றையோர் சுவப்பனத்திலீடுபட்டு மயங்கி அல்லல் சுகதுக்கத்தைச் சல்லாபமாக யதார்த்தமென வனுபவிப்போருக்குச் சமானர். இம்மித்தை யானந்தத்திலீடாகாது தெளிவதன்ருே ஆநந்தம். இஃதிலெவை சிரேஷ்டமோ ? எவை புருஷார்த்தமோ ? இயம்புக.

மானவன் :—சுவப்பனத்திரவியமும் அக்கால் நிகழும் சந்தோஷ முதலானவையும் உண்மையானவையாயிருக்காமல் (ஆபாசமாய்) சிறிது போது மயக்கத்தால் நேருவதால் இவ்வுடல் முதலானவையும் ஆராய்ச்சியின்றியவழி உளவாயும், ஆராய்ச்சி யுற்றவழி இலவா

யும் போவதால், இவற்றை எந்நன்மதியினர்தான் புருஷார்த்த மென்பர்? இதனால் சுகப்பிரஹ்மரிஷி முதலானோர்களும், திருவெண்காட்டடிகள், பத்திரகிரியார், அருணகிரியார், ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியர், ஸ்ரீ கிருஷ்ணசைதன்ய சுவாமிகள், ஸ்ரீ குமாரதேவர், ஸ்ரீ தாயுமான சுவாமிகள், மற்றும் சமயக்குரவர்களும், ஆழ்வாராதிகளும், மற்றும் அக்காலத்து அனந்த ராஜ ராஜாக்களும் பண்டிதர்களும் செல்வப் பிரபுடீக தனவந்தர்களும்; இக்காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண

ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர்.

ஸ்ரீ விவேகாநந்தசுவாமி.

பரமஹம்ஸதேவர், ஸ்ரீ விவேகாநந்தர், இன்னமும் இவரது கூட்டத்தவரும்; ஸ்ரீ சுவாமி யோகீஸ்வராநந்தர் (M. A.), * வெல்லனூர் ஸ்ரீசமாதி சத்குரு ஸ்வாமி, ஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமி, ஸ்ரீஸக

* இவர் ஹடராஜயோகி. தமக்குள் நடக்கும் நாடிகளைப் பெஹுநேரம் ஓடாது நிறுத்திவிடும் சக்தி வாய்ந்து பூமிக்குள் புதைத்துவைத்தால் பலதினங்களிருந்து யாதொருகஷ்ட

ஜானந்தஸ்வாமி, ஸ்ரீ சங்கரானந்தஸ்வாமி, (M. A.), ஸ்ரீ தயானந்த சரஸ்வதி, ஸ்ரீ சுவாமிராம் டிரத் (M. A.), மற்றும் இவரது கூட்டத்தினரும்; ஸ்ரீமதி பிளவட்ஸ்கி அம்மை, (கர்னல்) ஸ்ரீ ஆல்காட், ஸ்ரீமதி அனி பிஸ்ஸன்ட் அம்மை இவர்களது கூட்டத்தவரும்; () ஸ்ரீ வேமன்னசாமி, ஸ்ரீ இராமலிங்கசாமி மற்றும் பெரியோர் அநேகரும் கல்விச்செல்வக் களஞ்சியம்பெருசாயுடைத்தா யிருந்தும் அவையாவும்தோற்றலெனக் கண்டல்லோ சீச்சீயென வெறுத்துத் துறவிகளாகி சுவப்னஜகத்தைவிரும்பாது, நித்தியானந்த வடிவான ஆனந்தத்திலீடாகி சுகித்தனர்கள் சுகிக்கின்றனர்கள். மண்ணுகப்போகும் எஜமானனண்டை அலுவல்புரிந்து மண்ணுன

ஸ்ரீ இராமலிங்க சுவாமி.

மூமின்றி கண்டசமாதியுற்று ஆநந்திப்பவர். பல்லோரும் பத்துமுறைக்கு மேல் தரிசித்துளார்கள். சுழூப்தி யவஸ்தையை வென்றவர்.

கூலியைப்பெற்று மண்ணான பதார்த்தத்தை யுண்டு மண்ணான கடத்தைவளர்த்து மண்ணாகப் போவதை, கிருபாநிதியே! உமதருட் கடாக்ஷத்தால், தெள்ளென உணர்ந்து தெளிந்தாநந்திக்கும் யானும் அஞ்ஞானப் படுகுழியில் வீழ்வேனோ!!! அடடா கண்ணிருந் தும் அந்தகாரமந்தகாரம். இதோ வின்று முதற் றுறந்தேன்! மாடென்ன மண்ணே, மக்களென்ன மண்ணே, நாடென்ன மண்ணே, வீடென்ன மண் ணே, வீட்டுக்குள்ளிருக்கும் தட்டுமுட்டுச் சாமான்க ளும் மண்ணே, யாவும் மண்ணே. முன்னிருந்த ராஜ ரும் மண்ணே, இப்போதிருக்கும் ராஜரும் மண்ணே, இனிவரும் ராஜரும் மண்ணே, அன்னோர்கள் பத்தினி, புத்திரரும் மண்ணே. மந்திரியும் மண்ணே, குடிகளும் மண்ணே, சேனாதிபதியும் மண்ணே, இரதகஜதுரக பதாதிகளும் மண்ணே. அவர்களது ஸ்திதியும் மண் ணே தோட்டந்துறவும் மண்ணே, மாளிகை முதற் குடிசைவரை யாவும் மண்ணே, இவர்களணியு மாடை யாபரணாதிகள் யாவும் மண்ணே, சீச்சீ உலகத்தி லென்ன ஆசை, புலப்படாதழிக இவ்வாசை.

"மண்ணாசைப் பட்டேனை மண்ணுண்டு போட்டதடா"

"முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே"

என்றது சத்தியஞ்சத்தியம். என்ன அஞ்ஞானம்! இவை

யாவும் பிருதிவிமுதலிய அணுக்கூட்டங்களென உணர்ந்தும், அவாவறுக்காது திரும்பவுமிவற்றினி லீடுபடுவதா மதி! இன்றேல் வரும் அதோகதி! உற்றால் வாய்க்கும் பரமாத்ம நிதி! ஆனதால் யான் அவாவற்றேன். நான் தெளிவுபெற்றேன் பெற்றேன். ஆனந்தமுற்றேன் உற்றேன். இத்தோற்றலாகிய பொய்ப்பொருளின் மீது இச்சை வைத்திருப்பேனேயாகில் இவைகளுக்காபத்து வருகையில் யானும் துயரத்திலாழ நேரும். இவைகளை முற்றிலுமே கைவிட்டுவிட்டால் துயரமெற்றிற்கு வரும்? ஆகையால் சருவமும் மண்ணென்றுணர்ந்து இவற்றின்மேற் பிரீதியற்று ஆனந்தமயமாயிருக்கும் சன்னியாசி யானேன். சந்தோஷம்! சந்தோஷம்!!

தானவன் :—(ததாஸ்து) யாவும் மண்ணென் றுணரப்பெற்ற இவ்வளவுடன் திருப்தி கொள்ளலாமா? இன்றேல் இம்மண்ணும் தோற்றலா, பொருளா வென்றாராய்ச்சி செய்யலாமா?

மானவன் :—குருப்பிரபோ, சில சுவாமியார்களிடம் எம்போலியர்கள் சென்று யாதாவது சந்தேகங்களை நிவர்த்திக்கவேண்டினால், "அடே உனக்குப் பக்குவம் போதாது." அப்படியே அந்த சாஸ்திரம் இந்த சாஸ்திரம் வாசித்துக்கொண்டுவா தனக்குத்தானே தெள்ளெனத் தெரியும் என்கிறார்கள். தெரிந்த நீவிர் சொல்லு மென்றால், உடனே கோபாவேசத்துடன் "பெரியவர்களிடம் பயங்கரமின்றி பேசத் தொடங்குகிறாயா அடே மடையா! அடே தடியா! இவனை யாவ

ரிங்கு சன்னிதானத்திற்குள் விட்டது. கழுத்தைப்பிடித்து நெட்டி உதைத்து வெளியில் தள்” ளென்று விரட்டி விடுகிறார்கள். சிலர் விசாரணை இன்னதென்றறிந்து ஐயந்திரிபகற்ற வலியிலாததாற்றான் சாந்தியாதீத கலையிலாழ்ந்து நிர்விகற்பத்தி லிருப்பதுபோல் நான் பேசும் வார்த்தை அவர்கள் செவியில் ஏறாததாய்ப் *பகட்டி மௌனம் சாதிக்கிறார்கள். சிலரோ, “அப்பா! ஏட்டுச்சுரைக்காய் கறிக்காகுமா? இவை யாவும் வாய்ஞானம். ‘கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்.’ சாந்தமாயிருக்கப்பார். மனதை நாசம் செய்ய நேர். நாங்கள் வீண்வாயாடக் கற்றுக்கொண்ட பரம்பரையைச் சேர்ந்தோமல்லோம்” என்பதூஉம் வழக்கமாயிருக்கிறது. ஆனால் ஞாயம் சோதனை பொருத்தமென்னும் மூன்று முகத்தால் ஐயந்திரிபகற்ற வலியுள்ள ஆசானைப்பெற்றதே பாக்கியம். ஆக்ஞையின்படி நடக்கிலின்னமுஞ் சிலாக்கியம். இம்மண்ணிற்கு மேலும் ஆராய்ச்சியுளதாதலாற்றான், இனியும் வியவகாரம் நடத்தலா மென்றீர் போலும்.

தானவன் :—தற்போது மணி நான்காய்விட்டது, பிரதோஷகால சம்பவம். திருசியமின்றி திருக்காயிருக்கும் என் வடிவத்திற் றூங்கப்போகின்றது. நீவிரும் நாளை வருக; இப்போது விடை பெற்றுக்கொள்க.

---

* பகட்டிமௌனம்=போலிமௌனம். யதார்த்த மௌனத்தையுடைய மஹான்களுமுளர். அவரை சருவமௌனர் என்பர்.

மானவன்.—அங்ஙனே அடியேன் நமஸ்காரம் நமஸ்காரம். தங்களது பாதப் பெருவிரலை உச்சிக் குழியின்கண் ஊன்றினீரே அக்காலுண்டான லஹிரி இன்னமும் சற்று புலப்பட்டுக்கொண்டே இருக்கிறது. சென்று வருதும் மஹாசுவாமி.

போது.—தானவரது திருச்சந்நிதானத்தை விட்டகல மனமில்லாத மானவன், ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு ஆசிர்மத்தை விட்டகன்று, சமீபத்திருந்த அழகிய சீதளச் சோலை சந்நியாசியாகிய தனக்கு இல்லமாக நல்கி, தேசிகரால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட விசாரணையைப் பசு அசைபோடுவதைப்போன்று பன்முறை சிந்தித்துச் சிந்தித்து மனனஞ் செய்திருந்தனர்.

பௌர்ணிமி தீக்ஷோபதேசம் முற்றும்.

சுபம்.

ओं

" सर्वकर्माणि मनसा संन्यस्यास्ते सुखं वशी ।
नवद्वारे पुरे देही नैव कुर्वन्न कारयन् ॥ १३ ॥"

" சர்வகர்மாணி மனசா சந்யஸ்யாஸ்தே சுகம் வசீ ।
நவத்வாரே புரே தேஹீ நைவ குர்வன்ன காரயன் ||"

" The self-restrained embodied Self (man) renouncing all actions by his mind (but performing actions by his body) lives at ease within the city of nine gates (his body), doing nothing and causing nothing to be done."

(Bagavad-Gita 5th Chap: 13th Sloka.)

இந்திரியங்கள் - மனசு, இவைகளைச் சுவாதீனமாயுடையவன் சகல கருமங்களையும் (விவேகத்தையுடைய) மனதினாலே விட்டுவிட்டு, ஒன்பது வாயில்களையுடைய பட்டணத்தைப் போலிருக்கும் தேகத்தில் (தேகம் கர்மங்களைச் செய்தாலும்) ஒன்றும் செய்யாமலும் செய்விக்காமலும் ஆனந்தமாயிருக்கிறான்.

(பகவத்கீதை 5 : அத் : 13 சுலோகம்)

உ

ஓம்!

நிருவாண தீக்ஷானுக்கிரக வல்லபம்.

அடுத்ததினங்காலை சூரியோதயம், ஒன்பது நாழிகைக்கு மானவன் சுவாமிகளது சந்நிதானத்திற்குவந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ் சமர்ப்பித்து "சுவாமிகள் இனியும் அடியேனுய்யும் வண்ணம் ஞானமிருத தாரையை பரோட்சியும்" எனப் பிரார்த்தித்தனன்.

தானவன் :—(குதூஹலத்துடன்.)

"காக முறவு கலந்துண்ணக் கண்டீரகண்டா காரசிவ [ணமா
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித்ததும்பிப் பூர
யேகவுருவாய்க் கிடக்குதையோ வின்புற்றிட நாமினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே"

என் தாயுமான சுவாமிகள் காருண்யத்தின் பொருட்டாய்த் தாமே ஜகத்தோரைக் கூவிக் கூவி அழைத்திருக்க, இக்காலும் ஞானவான்களுக்கு அத்தயாளமில்லாதுபோமா! நேற்று அவயவங்களைத் தவிர உடம்பில்லையென்றும் சருமாதிகள்-அஸ்திகளைத்தவிர அவயவங்களில்லையென்றும் சருமமாமிச அஸ்திகளும் மண்ணைத்தவிர இல்லையென்றும் தீர்மானித்ததில்,

உடம்பு-அவயவம்-மாமிசம்-அஸ்தி இவைகள் தோற்ற மாத்திர மென்றும், மண்ணே பொருளென்றும் விசாரித்துத் தெளிந்தோமல்லவா, மானவா? அந்த மண்ணெங்கே யிருக்கிறது? இம்மண்ணிருக்கும் ஸ்தானத்தின் வடிவமென்ன? அளவென்ன? செயலென்ன? வேறென்ன கலப்புற் றிருக்கிறது? யோசித்துச் சொல்லுக.

மானவன் :—உற்றுநோக்கும்போது, இதுகாறும் விசாரித்த மண்ணானது 25,000 மைல் சுற்றளவுள்ள இப்பூகோள மண்ணின் பேரில்தா னிருக்கிறது. இவ்விரண்டு மண்ணும் ஒன்றே. இம்மகத்துருவாகிய மண் உருண்டைவடிவினதாய் பெரும்பாகங்களில் ஜலத்தால் சூழப்பட்டு அந்தரத்தில் புகைக்கூண்டு செல்லுங்கால் எப்படி யாதொரு பற்றின்றி மிதந்திருக்கின்றதோ அவ்வண்ணமே சருவபுறத்திலும் யாதொரு பிடிப்புமின்றி மிதந்துத் தன்னைத்தானே சுற்றிக்கொண்டும், சூரியனை வலமாகச் சென்றுகொண்டுமிருக்கிறது.

தானவன் :—இலட்சணம் யாவும் செப்பியது உண்மையே. அப்படி மிதந்திடும் உருண்டைவடிவம் நுணுக்கக்கூடாதபடி கடினமாயிருக்கிறதா? பிரிக்கக் கூடியதாய் உதிரியாயிருக்கிறதா?

மானவன் :—பூமியை வெட்டியெடுக்க யெடுக்க மண் வருவதாலும், மண்ணெடுத்த ஸ்தானத்தில் குழிகள் உண்டாவதாலும், திரும்ப அக்குழிகள் நிரம்புவதாலும், அணுக்களை ஒன்றின்மேலொன்றாய் அடுக்கி

வைத்தாப்போல்தான் இப்பூமியி னிருப்பான திருக்கி றதே யொழிய, பிரிக்கக்கூடாமல் கெட்டியான வஸ்துவாயிருக்கவில்லை. ஆகையாலிப்பூமி யுதிரியே.' (அணுச்சையோகமேயாம்.)

தானவன் :—கூடைகளில் மண்ணைவாரி யெடுத்தால், எடுத்துவிட்ட அளவிற்கு என்னவிருக்கிறது?

மானவன் :—ஒன்றுமில்லை.

தானவன் :—நன்றாய் யோசித்துச் சொல்.

மானவன் :—என்ன இருக்கிறது? வெளி (ஆகாயம்) தானிருக்கிறது.

தானவன் :—அங்குமட்டுந்தானா வெளி இருக்கிறது?

மானவன் :—இல்லையில்லை. பூமியைச் சுற்றிலுமிருக்கிறது. அதற்களவில்லை. பூமியை சுற்றிலும் அளவு கடந்தும் பூமியிலுண்டான குழியிலுமிருக்கிறது.

தானவன் :—குழியிலுண்டான வெளி எங்கே இருந்தப்பா வந்தது ?

மானவன் :—வெளி யெங்கே இருந்து வந்தது ? அது அங்கனே தானிருக்கிறது.

தானவன் :—மண்வெட்டி ஒருபுறங் குவித்திருக்கிறதே அங்கே வெட்டுவதற்கு முன் வெளி இருந்ததல்லவா ?

மானவன் :—ஆம் வெளி இருந்தது.

தானவன் :—இப்போ தஃதெங்கே போயிருக்கிறது ?

மானவன் :—எங்கே போகும், அவ்விடத்தேயே யிருக்கிறது.

தானவன் :—பூமியினின்று ஒருகூடை மண்ணைத் தோண்டி எடுத்தால் அதற்குத் தகுந்த குழி யுண்டாகி அதனளவிற்கு வெளிகாணும்; ஒருசிரங்கை மண் எடுத்தால் அதற்குத்தகுந்த குழியுண்டாகி அதனளவிற்கு * ஆகாயங்காணும்.

ஒரு சிட்டிகை மண் எடுத்தால் அதற்குத் தகுந்த குழியுண்டாகி யதனளவிற் காகாயங்காணும். இப்படியே ஸ்தூல அணு, சூட்சும அணு, பரமாணுக் கணக்காய் மண்ணை யெடுப்போமேயானால் அவ்வவற்றிற்குத் தகுந்த குழியுண்டாகி அதனளவிற் காகாயங் காணுமல்லவா ?

மானவன் :—ஆமாம். அவசியம் அததற்குத் தகுந்தவண்ணம் வெளியுண்டாகும்.

தானவன் :—முன்சொன்ன கிரமமாய், ஆசியா - ஐரோப்பா - அமெரிக்கா - ஆபிரிக்கா - ஆஸ்திரேலியா என்னும் நாமதேயங்களுடைய மண்ணடங்கிய இவ்வுருண்டை வடிவ பூமியை கூடைகூடை மண்ணாகவும், சிரங்கை சிரங்கை மண்ணாகவும், சிட்

---

* ஆகாயம் என்று வழங்குவது ஸ்தூல ஆகாயம். அதினின்று காற்று முதலானவற்றை எடுக்கில் சுத்தாகாயமாம். அஃது ஸ்தூல திருஷ்டிக்குக் கிடைப்பதில்லை.

டிகை சிட்டிகை மண்ணாகவும், ஸ்தூல அணுவாக வும், சூட்சும அணுவாகவும், பரமாணுவாகவும், வெட் டிப்பிரித்து எறிந்துவிட்டால் இம்மகத்தூருவான பிரு திவி உருண்டை இருந்த விடத்தி லென்ன புலப்படும்?

மானவன் :—என்ன? வெளிதான் புலப்படும்.

தானவன் :—அவ்வெளி எங்கிருந்து வந்தது?

மானவன் :—எங்கிருந்தும் வரவில்லை. முன்ன மேயே அது அங்கேயேயிருக்கிறது.

தானவன் :—இப் பிருதிவியை (தோண்டிய மண் ணை) வேறொருபால் வைத்தோமே அங்கிருந்ததும் வெளிதானே? அது இப்போது எங்கே போய்விட்டது?

மானவன் :—அதுவு மங்கேதா னிருக்கிறது. சுவாமி! இவ்விசாரணையால் வெளியில்லாத இடமில்லை யென்றும் வெளிக்குள்தான் சருவமும் இருக்கிறதென் றும், சருவத்தினுள்ளும் புறம்பு மிடையும் இவ்வெ ளியே பரிபூரணமா யிருக்கிறதென்றும் தெரிகின்றது. மகாநுணுக்கமான அணுவைத் துண்டித்தாலும் அஃ திற்குள்ளும் புறம்பேயு மிடையிலும் வெளியே நிரம்பி யிருக்குமென்று புலப்படுகிறது.

தானவன் :—ஆமாம் வெகு சாக்கிரதையாக யுக் தியைக் கிரகிக்கிறீர். அதிகாரத்தன்மை மிக்கது. புத்தி சாலித் தனத்திற்காக யாவற்றையும் கிரமமாய் சொல்ல வேண்டுமென்று அதிக ஆவலும் சந்தோஷமும் கொள் ளுகிறேன். இது நிற்க துவியணுகம், திரியணுகம்

பீலு என்று * வேதாந்த வித்வ சிரோமணிகளும் கலைஞானிகளும் தர்க்கம் உணர்ந்தவரும் வழங்கும் வார்த்தைகளை இயம்பிப் பரமாணுவைக் கரைக்க முயலில், கடின யுக்தியாயும் சொற்கள் மலைப்பாகவு மிருக்கும். நும்போன்றார்வசம் அங்ஙன முணர்த்தப் புகில் உமக்கு விஷயம் அறிந்துகொள்ளக் கஷ்டமாயிருக்குமென்று நிராகரித்து, வெள்ளைத் தமிழினால் போதமாகும்படி வசனித்து அத்துல்லிய பிருதுவி அணுக்களையும் தோற்றலென நிரூபிக்கிறேன். கவனமாய்க் கிரகித்துக்கொள்ளும்.

மாணவன் :—அங்ஙனே சிரவணித்து மனனஞ் செய்துகொள்ளுகிறேன், தேசிகோத்தமப் பிரபு!

தானவன் :—பரமாணுக்கள் கூட்டம் தூசி, தூசியின் கூட்டம் ஸ்தூலாணு, ஸ்தூலாணு சையோகமே

---

*"True science and true religion," says Professor Huxley "are twin-sisters and the separation of either from the other is sure to prove the death of both. Science prospers in proportion as it is religious and religion flourishes in exact proportion to the scientific depth and firmness of its basis."

உண்மையான கலைஞானமும் உண்மையான வேதமும் ஏககாலத்தி லுற்பவித்த விரண்டு சகோதரிகள் போலிருக்கின்றன. இவற்றில் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்தால், இரண்டும் நசிக்குமென்பது திண்ணம். எவ்வளவுக் கெவ்வளவு மதத்தை அநுசரித்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு கலைஞானமும்; எவ்வளவு ஸ்திரமாகக் கலைஞானத்தை அநுசரித்து ஆழ்ந்ததாக விருக்கிறதோ அவ்வளவு மதமும் செழிப்புற்றோங்கும்.

இவ்வுருண்டையாகிய பிருதுவியென்னும் பூமி. இப்பூமியினின்று தாவரம், ஊர்வன, நீர்வாழ்வன, புள், விலங்கு, மக்கள் எனும் ஓரறிவுமுதல் ஐயறிவையுடைத்தான ஜீவகோடிகளும் பகுத்தறிவை யுடைத்தான ஜீவர்களும் உற்பத்தி யாயினர்; இந்த உருவங்களெல்லாம் மறுபடியும் அவ்வண்ணமே இப்பூமியில் லயமாகும். தெரிபவந்ததா ?

மானவன் :—தெரிந்தேன் சுவாமி. ஆயிரம் வருஷத்திற்கு முன்னிருந்த ஜீவராசிகளெல்லாம் பெரும்பாலும் மண்ணாகவே அழிந்துவிட்டன. இப்போதிருக்கும் ஜீவராசிகளெல்லாம் இன்னமும் ஆயிரம் வருஷமிருக்கப் போகிறதில்லை. மண்ணாகவே அழியும். அதற்குப் பின்னும் உண்டாகும் ஜீவராசிகளும் அன்று முதல் ஆயிரம் வருஷத்திற்குள்ளாக மண்ணாகவே அழிந்துவிடும். ஆகையால், சமுத்திரத்திலெப்படி அலைகளும், நுரைகளும், குமிழிகளும், உற்பத்தியாகிச் சற்று போதிலெல்லாம் அதுவாகவே அடங்குகின்றனவோ அஃதேபோல், இம்மண்ணினின்று மக்களென்றும், மிருகமென்றும், பட்சியென்றும், ஊர்வன, புற் பூண்டென்றும் சிலகாலம் தோன்றி உலாவிச் சில காலத்துள் மீண்டும் உதித்த அம்சமான மண்ணாகி விடுமென்பது முக்காலமும் சத்தியம்.

தானவன் :—* இம்மண்ணை யணுவாக்கி, ஸ்தூ

---

* காரியம்—மண், காரணம் - ஜலம்; காரியம் - ஜலம் காரணம் - அக்கினி, காரியம் - அக்கினி, காரணம் - வாய்வு, காரியம் - வாய்வு, காரணம் - வெளி, காரியம் - வெளி, கார

லாணு சூட்சுமாணுவாக மகா நுண்ணியவணுவாக்கிப் பிரிக்கக்கூடாத அம்மகா நுண்ணிய அணுவையும் நசிக்கமுயன்றால் அதன் கதியென்னவாகுமென்று பிரபல சுருதி முறையிடுகிறது. அதாவது, ஜலாணுக்களாகுமென்பதாம். அச்சலாணுக்களில் இனிப்பிரிக்கக்கூடாத மகாநுண்ணிய அணுவையும் நசித்தால் அக்கினியாணுக்களாகும். அவ்வக்கினியாணுக்களில் இனிப்பிரிக்கக்கூடாத மகாநுண்ணிய அணுவையும் நசித்தால் வாயுவாணுக்களாகும். அவ்வாயுவாணுக்களில் இனிப்பிரிக்கக்கூடாத மகா நுண்ணிய அணுவையும் நசித்தால் ஆகாயமாகும். இவ்வாகாயமே மிகுதியானது. இதை எவ்வண்ணம் பாழ்படுத்துவது ?

மானவன் :—ஆகாயமென்றால் ஒன்றுமில்லாதது, சூச்சியமென்பர். அதை வெட்டுவதற்கும் சாத்தியப்படாது. நசிப்பதற்கும் முடியாது. அதற்குள்தான் சருவமுமிருப்பது. அதுதான் சருவமுமாய்த் தோன்றுவது, மீண்டும் சருவமும் அதே மயமாகிறது. அதை எவ்வண்ணம் பாழ்படுத்துகிறது!

தானவன் :—உலகத்தின்மேலுள்ள யாவும் மண்ணே, அம்மண்ணும் துல்லியவணுக்களின் கூட்டமே;

ணம் - சக்தி, காரியம் - சக்தி ; காரணம் - சத்தன். பின்னர் - காரியகாரண ரஹிதம் என்பதற்கு உபநிஷத்து, சப்தபிரகாணம், கைவல்லிய நவநீதம், தாயுமானசுவாமிகள் பாடல், திருமூலர்மந்திரம் இவைகளே போதுமானவை. அன்றியும், தற்காலத்தில் ஆங்கிலேயருடைய ஆராய்ச்சியும் சக்திபரியந்தம் முடிவுபெற்றிருக்கிறது.

அத்துல்லியவணுவும் ஜலாணுவைத்தவிர இல்லையென்றால் * மண் 'அணு' எந்தப்புறமிருக்கிறது? ஜல 'அணு' எந்தப்புறமிருக்கிறது? இருப்பதுமண்ணு, ஜலமா? இருப்பது ஒரு பொருளா, இரண்டு பொருளா?

மானவன்:—சுவாமி! ஜலம், தோற்றலாகிய துல்லிய மண் அணு. இச்சலமோ, அக்கினியைத்தவிர இல்லை; இவ்வாற்று லிருப்பது அக்கினி, தோற்றல் ஜலம். இவ்வக்கினியோ வாயுவைத்தவிர வில்லாததால் இருப்பது காற்று; தோற்றல் அக்கினி. இவ்வாய்வோ ஆகாயத்தைத்தவிர வில்லாததால், இருப்பது ஆகாயம்; வாய்வும் தோற்றமே என்று யாதாமோர் சந்தேகமுமின்றித் தெரிந்தனன்.

தானவன்:—மகத்துருவமான இப்பூமியை துல்லியவணுவாக்கி ஒருங்கே நசிக்கச்செய்தால் மகத்தான ஜலமயமாகுமல்லவா? அம்மகத்தான ஜலத்தை துல்லிய வணுவாக்கில் மகத்தான அக்கினிமயமாகுமல்லவா? அம்மகத்தான அக்கினியை துல்லியவணுவாக்கினுல் மகத்தான வாயுவாகுமல்லவா? அம்மகத்தான வாயுவை துல்லியவணுவாக்கி நசிக்கச் செய்தால் ஆகாயமாகுமல்லவா? அந்த ஆகாயமிப்போதெங்கே போயிருக்கின்றது?

மானவன்:—பரமப் பிரபோ! குணப்பெருங்

---

* பரிசிப்பதற்கே ஏலாத துல்லியஅணுவை எவ்வண்ணம் நசிப்பதென்றால், யுக்திக்கு சாஸ்திராதாரத்துடன் கிடைப்பதால் யுக்தியினுல் நசிக்கச்செய்க.

கடலே! மண்ணையே மாமிசமென்றும், அம்மாமிசத்தையே அவயவமென்றும் அவ்வவயவத்தையே உடம்பென்றும் ஏற்றிக் கொண்டிருந்த வெனது அந்தகார வஞ்ஞானத்தை நிவிர்த்தித்ததால் மண்ணே உள்ளதென்று (காரணமென்று) ம் மாமிசத்தாலாகிய அவயவவுடம்பு தோற்றமென்று (காரியமென்று) ம் தெளிந்து, அதுவே சத்தென நினைத்து ஆநந்தித்து நிர்த்தனஞ் செய்தேன். இப்போது பார்க்குமளவில், ஆகாயத்தைத்தவிர வாயு எங்கே, அக்கினியெங்கே ஜலமெங்கே, மண்ணெங்கே, உடம்பெங்கே, யாவற்றுக் குள்ளும் புறம்பு மிடையுமிருப்பது ஆகாயமே. ஆகாயமே காரணம், மற்றியாவும் காரியம். ஆகாயமே பொருள், மற்றியாவுந் தோற்றமாத்திரமாயிருக்க ,ஒருவன் கயிற்றைக்கண்டு சர்ப்பமென்றுன்னி நிலத்தின்மீது வீழ்ந்தடியுண்ட பின்னர் கயிறெனக்காண சர்ப்பமில்லாது போய்விட்டதாயினும் காயமட்டிலும் ஆறவில்லை. அப்படியே ஆகாயமே யதார்த்தமாய் எங்கு மிருக்க, பூதமென்றும், பௌதிகமென்றும், பிராந்தியுண்டாயிற்று. பிராந்தி இப்போது நீங்கி சருவமும் ஆகாயம்; வேறொரு பொருளுங் கிடையவே கிடையாதெனத் தெளிந்தும், முன்னம் சர்ப்ப பிராந்தியினால் காயமுண்டானது கயிறெனத் தெளிந்த வக்கணமே ஆறுதிருந்ததுபோல் அஞ்ஞானத்தினால் யான் முன்னம் எண்ணிய பூதபௌதிகத் தோற்றங்கள் மீண்டு மீண்டுந் தோற்றுகின்றது. தோற்றினுமென்ன? கானற்சலம் சதாதோற்றினும் பூமியை நனைக்கும் சக்தியுளதாமா?

*பொய்த் தோற்றமென்பதற்குத் தடையென்னே! அக்கானற் சலம் முக்காலமும் பொய்யானதுபோல் உலகமும் தோற்றன் மாத்திரமேயென்றும், ஆகாயந் தானுள்ளதென்றும் சந்தேகமின்றி அறிந்தேன். இதுவுமன்றி இங்ஙனே இந்திரியங்களும், † அந்தக் கரணங்களும், ‡ ஜீவனும், § அணுவணுவாகப் புலப்படுவதாலும் அவ்வணுக்களும் ஆகாயத்தில் மிதப்பதாலும் அவ்வாகாயமே இவைகளுக்குள்ளும் புறம்புமிடையும் கவளீகரித்திருப் பதினாலும் இவைகளுமாகாயத்தைத் தவிர வேறில்லை யெனவுமுணர்ந்தேன்.

தானவன்:—அவ்வாகாயத்தை அல்லது வெளியைக் கையினால் பிடிக்க முடியுமா?

மானவன்:—பிடிப்பதற்கு முந்தியே என் கையில் இருக்கும்போது பிடிக்கிறேன் என்றுசொல்வதெப்படி?

தானவன்:—இவ்வாகாயம் மற்றைய பூதங்களைப் போல் உருவமா? அன்றி அருவமா?

---

* சதசத்விலக்ஷணம்.

† "பரிசமின்றிச் செயலுடைத்தாதல் மனத்தினிலக்கணம்."

‡ "சுகமுதலியனவுடைமை சீவான்மாவினிலக்கணம்."

§ "மனஞ் சுழுமுனை நாடியில் ஒடுங்கிய காலத்திற்றுயில் கூடும்; ஒடுங்காத காலத்து அறிவு நிகழும் என்பதனால் அணுவாதல் பெறப்பட்டது. அப்படியே ஜீவனும் ஓர் கடத்தையாசிரயித்தபோது சுகமுதலியவையும், இற்றேல் இன்மையுமாகின்ற போக்குவரவால் அணுவாதல் பெறப்பட்டது."
(தருக்க சங்கிரகவுரை.)

மாணவன்:—அருவந்தான் என்பதற்குத் தடையென்ன? எது தனக்கென்று ஒரு உருவமில்லாததோ, எதில் இதரபூதசரீரங்கள் வியாபித்திருக்கின்றனவோ, அதுவே அவ்வாகாயம். அது அதிசூக்கும பரமாணுக்களால் நிறைந்ததென்றும், அப்படி நிறைந்திருப்பினும் இதரவஸ்துக்களினது சலனத்துக்கு எள்ளளவு தடையேனும் செய்யாது அவற்றின் செயல்களுக்கு அநுகுணமாயிருக்குமோர் சர்வவியாபக பதார்த்தமென்று இயற்கை சாஸ்திர நிபுணர்கள் கூறுவது உண்மையேயாயினும், சித்ரூபமான ஆத்மசம்பந்தமாய்ப் பார்க்கும்போது சடவஸ்துக்களெல்லாம் அழியக்கூடியனவென்று தங்களது சன்னிதியுணர்வா லறிந்த எனக்கு ஆகாயம் சூனியமென்றே சொல்லலாம்போலத் தோற்றுகிறது.

தானவன்:—ஏ சிஷ்ய! அப்படியே உன்னைத்தவிர இவ்வாகாயமும் இல்லையென்றும், சருவ வியாபகமாயிருப்பது நீயே யென்றும் புகட்டுகிறேன். இதுதான் தத்பத உபதேசம். கவனம் கவனம்.

மாணவன்:—வேதவேதாந்தசாகரமே! உமது திருவாக்கா மமிர்தத்தைப்பெறும் பாக்கியம் பெற்றேன். இதைப்பார்க்கிலும் மேலான செவியுணவுமுண்டோ? கட்டளைப்படி வெகுபயபக்தியுடன் கிரகித்துக்கொள்ளச் சித்தம் சித்தம்.

தானவன்:—இப்போது நீ எங்கே இருக்கிறாய்?

மானவன் :—உடம்பு கதிதான் மண்ணாயிற்று, மண்ணுந்தான் ஆகாயமாயிற்றே ஆகையால் உடம்பும் ஆகாயந்தானே. இதனால் நான் ஆகாயத்தில்தானிருக்கிறேன்.

தானவன் :—நான் ஆகாயத்தில்தா னிருக்கிறேனென்று சொல்லவந்தாயே, இங்கு நான் என்பதற்கு பொருள் எது ?

மானவன் :—இங்கு நான் என்று சொல்லவந்தது உடம்பென்னலாமேயெனில் உடம்பு தோற்றமாத்திரமென்றும், ஆகாயத்தைத்தவிர இல்லையென்றும் உணர்ந்ததால், அவ்வாறியம்புவது பொருந்தாது. ஆகாயமாகிய நான் ஆகாயத்திலிருக்கிறேனென்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

தானவன் :—அப்படியானால் இருப்பது இரண்டு ஆகாயமா ?

மானவன் :—ஆகாயம் அகண்டமாயிருப்பதுடன் சூனியமாயுஞ் சடமாயுமிருக்கிறதே! இங்கு நான் என்று சொன்னது ஆகாயமாய்க்காணோமே! குருவே! குருவே! திருவே திருவே! தாங்கள் இரகசியமாய் உபதேசித்தீர்களே அதுதான் நான் என்று அறிகிறேன்! அதுதான் மிகுந்திருக்கிறது! அறிகிறது! சாக்ஷியாயிருக்கிறது! மற்றவை யாவும் ஒன்றிலொன்றடங்கிற்று. இது சுத்தமாயும் உணர்வாயுமிருக்கிறதே! அதுவே காண்கிறது.

தானவன் :—அவ்வறிவுக்குள் வெளி இருக்கிறதா? அன்றி அவ்வெளிக்குள் அறிவிருக்கிறதா?

மானவன்:—வெளிக்குள்தான் அறிவிருக்கிறது.

தானவன்:—சர்வவியாபகமென்று அறிவினிடத்து வெளி வியாபித்துச் சொன்னதா, அல்லது அறிவே வியாபித்துத் தெரிந்து கொண்டதா?

மானவன்:—வெளி எப்படி அறிந்து கொள்ளும்? அறிவுக்குத்தான் புலப்படுகிறது.

தானவன்:—அறிவுக்குள் ஆகாய மடங்கிற்றா? ஆகாயத்திற்குள் அறிவு அடங்கிற்றா?

மானவன்:—இவ்வறிவுதான் ஆகாயத்தையளாவி வியாபித்து அறிந்தது. அவ்வறிவுக்குள் ஆகாயம் அல்லது வெளி அடக்கமாகிறது.

தானவன் :—அறிவு எங்கே இருக்கிறது? ஆகாயமெங்கே இருக்கிறது?

மானவன்:—வெளி சூன்யமென்றும், வஸ்துவாய் இருப்பது அறிவென்றும் ஸ்பஷ்டமாய் தெரியவருகிறது?

தானவன் :—யாவருடைய அறிவுக்குத் தெரிய வருகிறது?

மானவன் :—என்னுடைய அறிவுக்குத் தெரிய வருகிறது?

தானவன் :—அறிவு உன்னுடையதான படியி ஞலே அறிவை உடைத்தான நீயார்? நீ என்ன மய மாய் இருக்கிருய்?

மானவன் :—ஒரு வீட்டினுள் பலசாமான்கள் நிரப்பிவைத்திருந்தபோது அவ்வீட்டினுள் சென்று சாமான்களை ஒவ்வொன்ருய் வெளியே கொணர்ந்து வைத்து விட்டு உட்சென்று இன்னமும் யாதேனும் சாமான் இருக்குமாவெனச் சருவபுறமும் ஆராயுங்கால், அங்கு ஒன்றுமில்லையென்று தெளிந்த நான்மட்டிலும் வேறு யாதுமில்லையென தெரிந்து கொண்ட வுணர்வுடன் தனித்திருப்பது எனக்கே தெரிவதாக அநுபவம் விளங்குகின்றபடியே இவ்விடத்தும் அறிவைக்கொண்டு சருமமுதல் ஆகாயம்வரை எடுத்தெறிந்துவிட்டு அப்பால் தன்னையன்றி வேறுயாது மில்லையென்று தெரிந்து கொண்டதும் அறிவே. *அவ்வறிவே நான், அது

---

* இதனையே சுட்டறிவென்பது. இவ்வளவில் நின்று மேலெட்டிப்பாராதாரை மாயாவாதிகளென்பது. இஃது ஆத்மாவுடன் கலப்பதற்கு சமீபித்தபோது தியங்கவைப்பதால் இதினின்றும் விலகி தன் வித்தியானந்தத்தை அடைந்ததும் மேற்படி அறிவை மாயா என்று நவிலவலுவுள்ளதாகும்.

जो सुख नित्य प्रकाश विभु, नाम रूप आधार ॥
मति न लखै जिहिं मति लखै, सोमैं शुद्ध अपार ॥

"ஜோசுக நித்யப்ரகாச விபு நாமரூப ஆதார ||
மதிநலகை ஜிஹிம் மதிலகை, ஸோமைம் சுத்த அபார||"

எது சுகமாகவும் நித்யமாகவும் ப்ரகாசமாகவும் விபுவாகவும், நாம ரூபங்களுக்கு ஆதார மாகவும், புத்தியா லறியாத

தானிருப்பது. அவ்வறிவையுஞ்சுட்டும்* சுகாதீத அறிவாகிய சாட்சியே நான். இவ்வுபதேசமே தாங்கள் இரகசியமாய் திருவாய்மலர்ந்தருளியது. அவ்வறிவே உணர்வெளியாய் சதோதயமா யிருக்கிறது. இஃதால் வெளியை அறிந்தது அறிவல்ல வென்றும்,

---

தாகவும், புத்தியை அறிவ தாகவும், இருக்கிறதோ, அத்தகைய சுத்த அபாரவஸ்து நானாகவே யிருக்கிறேன்.

"I am that pure and infinite Self, who is bliss eternal, manifested, all-pervading, and the substratum of all that has name and form—Whom the intellect cannot discern but who discerns it."

(*Vichar Sagar*, *by Lala Sreeram*, *Delhi.*)

*"According to the Advaita philosophy, there is only one thing real in the universe, which it calls Brahman; everything else is unreal, manifested and manufactured out of Brahman by the power of Maya. To reach back to that Brahman is our goal. We are, each one of us, that Brahman, that Reality, plus this Maya. If we can get rid of this Maya, or ignorance, then we become what we really are."—*Sri Swami Vivekananda*.

" அத்துவைத கலைஞானத்தின்படி பிரஹ்மம் எனப்படும் ஒரே ஒரு வஸ்துதான் உண்மையாய் இருப்பது; மற்றவெல்லாம் பிரஹ்மத்தினிடத்திருந்து மாயாசக்தியால் பிரதீதியாக்கப்பட்ட பொய்ப் பொருளே (மித்தையே) யாம். அந்த பிரஹ்மத்தை அடைவதே மோக்ஷம். நாம், அதாவது நம்மிலொவ்வொருவரும், மாயையோடு (தோற்றல் அல்லது நாமரூபத்தோடு) கூடிய அவ்வுண்மைப்பொருளாம் பிரஹ்மந்தான். இந்த அவித்தையை அல்லது மாயையை ஓட்டிவிடக்கூடுமானால் அப்போது நாம் வாஸ்தவத்தில் எதுவாயிருக்கின்றோமோ (அஸ்தி - பாதி - பிரியம்) அதுவே யாகிவிடுகிறோம். என்றார் ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள்.

அவை கரணங்களே யென்றும் இப்போதுதான் தெரிய வந்தது.

ஆராய்ச்சிக்கு முன்னும் இடையிலும் ஆராய்ச்சிக்குப் பின்னும் சாட்சியாய் நின்றிருந்ததுதான் அறிவு. அதுவே நான். ஓம் ஓம் குருநாதா! ஓம் ஓம் எனது யதார்த்த அப்பனே, மனம் பதறுகிறதே! ஆநந்தபாஷ்பம் பிரவாகமாகின்றதே! சத்குரு,!! சத்குரு!!! ஓம்மணி பத்மஹூம் !!!

பஞ்சபத மகாவாக்கியம்.

"அறிதரு மவத்தை மூன்று யபிமானி யானாய் போற்றி
செறிதருஞ் சடசித் தெங்குஞ் சிதாகாச மானாய் போற்றி
குறியொன்று மின்றி நின்ற குணப்பெருங் கடலே போற்றி
அறிவரு மறிவா நந்த வருட்டிருப் பாதம் போற்றி."

என்பது இவ்வறிவிற்கே தகும். இதுவே உணர்வோடுங்கூடி வெளியாயிருக்கிறது.

தானவன் :—(சோஹம்) அப்படியே மௌனமாய் நில், அசிபதம் வாய்க்கும்.

(போது) மானவன்

கைவல்லியம்

" பலகலையு முணர்ந்தகுரு மொழிந்தபடி யிவனுமநு
பவம்வி டாமல்
பலமலரின் மதுப்போலச் சச்சிதா நந்தமொன்றும்
பரமார்த் தத்தைப்

பலபொழுதுங் கண்மூடிச் சமாதியிருந் தான்விழித்துப்
பார்த்த போது
பலவடிவாஞ் சராசரசித் திரங்களெலாந் தோன்றுமொரு
படமா னூனே"

என்ப அசைவற்றிருந்து பின் விழித்து இவ்வாறியம்பத் தொடங்கினர்.

மானவன்:—குருவும் நான், நானே நான் நான் உடம்பென்றும் இது உலகமென்றும் பலவாறெண்ணி உழன்றேனே! இக்கால் அவையனைத்தையும் தோற்றலென்றும் நானே சர்வபரிபூரணனென்றும் அறிபவந்ததே! சற்குரு மூர்த்தி! தாங்கள் காருண்யமாய் உபதேசித்த சுட்டறிவு கெட்ட சுகாதீத அறிவு எனும் பாரமார்த்திக சத்தால் அவ்வறிவிற்கு எக்காலத்திலும் அறியாமை யென்பதே கிடையாதிருக்கிறதே! ஆனந்தமயமாயிருக்கிறதே! வியவகாரமற்றிருக்கிறதே! இப்போது சிந்தித்துப் பேசுவதெல்லாம் மனமே. நானோ சாக்ஷி சொரூபமாயிருக்கிறேன்.

அஷ்டவக்ர கீதா

*क्वास्ति क्व च वा नास्ति क्वास्ति चैकं क्वचद्वयम ।
बहुनात्र किमुक्तेन किञ्चिन्नोत्तिष्ठते मम ॥

"க்வசாஸ்தி க்வச வா நாஸ்தி க்வாஸ்திசைகம் க்வசத்வயம்.
பஹுநாத்ர கிமுக்தேன கிஞ்சின்னோத்திஷ்டதே மம ||"

---

*"Where is that which is or which is not, where is one or two. What need is there of saying much, there is nothing which takes its rise in me."

இருப்பது எங்கே, இல்லாதது எங்கே? ஒன்றென்ப தெங்கே, இரண்டென்ப தெங்கே? அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியமென்ன: என்னிடத்திலிருந்து உதய மாவது ஒன்றுமே கிடையாது.

தயாபரமூர்த்தி! உமதுருவமும் எனதுருவமும் ஒன்றாகவே இருக்கின்றதே என்ன ஆச்சர்யம்!

தாயுமானவர்.

"மண்ணாதி யைந்தொடு புறத்திலுள கருவியும்
வாக்காதி சுரோத்ராதியும்
வளர்கின்ற சப்தாதி மனமாதி கலையாதி
மன்னுசுத் தாதியுடனே
தொண்ணூற்றொ டாறுமற் றுள்ளனவு மௌனியாய்ச்
சொன்னவொரு சொற்கொண்டதே
தூவெளிய தாயகண் டானந்த சுகவாரி
தோற்றுமதை யென்சொல்லுவேன்."

"This is the final stage of Gnana on self-realization where the knower of Brahman has become Brahman itself, above thought; free from specific cognition. To him all is *chidakasha* (Intelligence unbounded.) He is the very self of knowledge. For him (the very self of intelligence) there is no other to see, no other to speak of. (*The Ashtavakra Gita by Rai Bahadur Lala Baijanath*, B. A., *Meerut*.)

தன்னையுணர்ந்து சுட்டறிவற்ற எண்ணத்திற்கு அதீதப் பட்டு ஆத்மஞானி பிரஹ்மமேயாகும் ஞானத்தின் தீர்ந்த நிலை இது. அவருக்கு எல்லாம் (எல்லையற்ற உணர்வெளியாகிய) சிதாகாசமே. அவரே ஞானத்தின் பொருள். (ஞானமே தானாகிய) அவருக்கு அயலாகப் பார்க்கவும் பேசவும் யா தொன்றுமில்லை.

பட்டணத்தார்.

"வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்
கெட்டாத புட்ப மிறையாத தீர்த்த மினிமுடிந்து
கட்டாத லிங்கங் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாத பூசை யன்றோ குருநாதன் மொழிந்ததுவே."

ரிபுகீதை மஹாவாக்கியம்.

"திருசியமாய்ச் சிதைகின்ற வுடல்நா னல்ல
 இயங்கியிடும் பௌதிகமாம் பொறிநா னல்ல
பிறவிபெறு நானுவா முயிர்நா னல்ல
 பிறந்துநசிக் கின்றமன முதல்நா னல்ல
விருள்வடிவா மஞ்ஞான வுருநா னல்ல
 விவையாவு மொருமித்த திரளு னல்ல
நிருமலமா யாவையுமே நிகழ்த்தா நின்ற
 நீக்கமிலாச் சின்மாத்ர சொரூப மேநான்."

ரிபுகீதை மஹாவாக்கியம்.

"தற்பதலட் சியமான பிரம ரூபந்
 தொம்பதலட் சியமான நீயே யாவா
யற்பமுமே யிதிலைய மாவ தில்லை
 யகண்டசிவன் றன்னுணை யறைந்த துண்மை
சொற்பமிலா வகண்டபரி பூர்ண மான
 சுத்தமதாம் பரப்பிரம நீயே யென்று
செப்பியிடுங் குருபரனே......."

ஓம் ஓம் நீவிரே தீட்சானுக்கிரக விகிதகுரு. நான் இப்போதே மோட்சத்தி லிருக்கின்றேன்! அம் மோட்சமே நான்!

சுகாதீத வெண்பா.

"சடங்கற்ரேஞ் சாத்திரங்க ளற்ரேஞ் சமாதி
யுடம்பற்ரே ஹழ்வினையு மற்ரேந்—திடம்பெற்ரேம்
மெய்ப்பொருளைக் கண்டு விழித்திருக்கக் கண்பெற்ரேம்
எப்பொருளும் வேண்டோ மினி."

என மேதாவிகள் நவின்றது என் சுவாநுபவத் திற்கு ஒத்துவிட்டதே! குருவே நமஸ்து, அருவுரு விலாதோய் நமஸ்து, உணர்வெளியே நமஸ்து!!

தானவன் :—மைந்தா நாமிருவரும் ஏகமே, அத்வைதம் பிரஹ்மம். இனி,

ரிபு கீதை.

"தேகமுதனுனென்ன றுவித விர்த்தி
திகழ்சாட்சி நானென்னல் சாட்சி விர்த்தி
யேகபர நானென்ன லகண்ட விர்த்தி
யிம்மூன்று விருத்திகளி லிரண்டைத் தள்ளி
யாகுமகண் டாகார விருத்தி தன்னை
யனவரத மாதரவா யப்பியா சித்துச்
சோகமுறுஞ் சித்தவிகற் பங்க டீர்ந்து
சொன்னவகண் டாகாரச் சொரூப மாவாய்."

உனக்கு நிருமாண காயர்களது ஆசீர் வசனத்தை முன்னிட்டும் வேதாந்த அபரோக்ஷ ஞானிகளது கருணையைச் சிந்தித்தும் ஸ்திரம்பெற "சருவத்தியாக யோகி" "சருவத்தியாக யோகி" "சருவத்தியாக யோகி" என நாமகரணஞ் சூட்டினன். விதேகமுக்தி கிட்டும்பொருட்டுச் சதேகமுக்தி (ஜீவன்முக்தி) சகித

னுருக. அகக்கண்ணைக் கொண்டே விழித்தனே. ஓம்! ஶாந்தி! ஶாந்தி!! ஶாந்தி!!!

சருவத்தியாக யோகி அன்று முதல் சதா நிஷ்டையிற்படிந்து, சகச சமாதியுடன் சஞ்சரித்திருப்பார். சிற்போது ஆனந்த நிர்த்தனஞ் செய்து மெய்ம் மறப்பர். எவ்விடமாயினுஞ் சரியே, அவையாவுங் கவனியாது ஜனங்கள் நம்மைப் பைத்தியக்காரனென் பார்களே யென்றும் வெட்கிடாது,

ரிபுகீதை.

"துன்னு மாயை யவித்தைக டானிலை
தொடரு * மீசனுஞ் சீவனுந் தானிலை
பின்ன மின்றிய கண்டம தாகிய
பிரம மேயக மென்றுதெ ரிந்திடும்
சின்ன மில்திட மாகிய போதமே
சீவன் முத்தனுக் கானவி லக்கண
மென்ன வானந்தத் தாண்டவ மாடுநம்
மீசன் றன்பரி பூரண ரூபமே."

என்றும்,

"தோற்று கின்ற * சகபர சீவரின்
தொடர்பு யாதொன்றுஞ் சற்று மிலாமலே
சாற்று வாக்கு மனங்கட் ககோசர
சச்சி தானந்தத் தற்பர மாகவே
வேற்று மையின்றி யென்று மிருப்பதே
விதேக முக்த னிலக்கண மென்றிட
லேற்று மாநந்தத் தாண்டவ மாடுநம்
மீசன் றன்பரி பூரண ரூபமே."

என்றும்,

வேதாந்த டிம்டிம:

"घटकुड्यादिकं सर्वं मृत्तिकामात्र मेवच ॥
तथाब्रह्म जगत्सर्वं मिति वेदांत डिंडिमः ॥"

"கடகுட் யாதிகம் ஸர்வம் ம்ருத்திகாமாத்ர மேவச
ததாப்ரஹ்ம ஜகத்ஸர்வ மிதி வேதாந்த டிம்டிம:"

[கடகுடம் முதலியவை எப்படி மண்ணைத் தவிர வில்லையோ அப்படியே ஜகத் முதலனைத்தும் பிரஹ்மத்தைத் தவிர இல்லையென்று வேதாந்த பேரிகை சப்திக்கிறது.]

என்னும் பாடல்களை ஆனந்தமாய் உருசித்துக் கொண்டும், பிரஹ்மோ ஹம் என்று நடனஞ்செய்து மூர்ச்சையாகி விழுவதும், பின்னும் பின்னுமெழுந்து 'சோ ஹம் சோ ஹம்' என்று திரும்பச்சாந்தமாய் மவுன முற்றிருப்பதுமாக விப்படி பிராரத்தமுள்ளமட்டும் உலாவி அத்தியாச்ரமஸ்த மீசையுள்ள ஆண்பிள்ளைத்தீர சிங்கமாக இருந்தனர். ஓம். ஶாந்தி! ஶாந்தி!! ஶாந்தி!!!

நிருவாண தீக்ஷானுக்கிரகவல்லப சம்பாஷணை முற்றும்.

சுபம்.

" अविद्यायामन्तरे वर्तमानाः स्वयं धीराः पण्डितं मन्यमानाः।
जङ्घन्यमानाः परियन्ति मूढा अन्धेनैव नीयमाना यथान्धाः॥"

" அவித்யாமந்தரே வர்த்தமானு ஸ்வயம்
தீரா பண்டிதம் மன்யமானு ।
ஜங்கன்யமானு பரியந்தி மூடா
அந்தேனைவ நீயமானு யதாந்தா ॥ "

Being in the midst of ignorance and thinking in their own minds that they are intelligent and learned, the ignorant wander, afflicted with troubles, like the blind led by the blind.

(Mundakopanished.)

அஞ்ஞானத்தால் சூழப்பட்டுத் தாங்கள் கற்ருேரென்றும் விவேகிகளென்றும் தங்கள் மனதில் எண்ணிக்கொண்டு, குருடரால் வழிநடத்தப்பட்ட அந்தகரைப்போல், மூடர் (சுழல்காற்றுற்ற செத்தைபோன்று பலவித) துன்பங்களுக்கிடாகி அலைந்துழல்கின்றனர்.

(முண்டகோபநிஷத்.)

ஔவை குறள்.

"உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினி லுத்தமனைக் காண்."

"உறக்க முணர்வு பசிகெடப் பட்டால்
பிறக்கவும் வேண்டா பிறப்பு."

"பற்றிலா தொன்றினைப் பற்றினா லல்லது
கற்றதனா லென்ன பயன்."

"வெள்ளி புதனொடு திங்க ளிடமெனத்
தள்ளுமின் கால சரம்.
செவ்வாய் சனிநா யிறுவல மாகவே
கொள்ளிலிவ், வாறிடரு மில்.
வளர்பொன் னிடம்பிறைத் தேய்வு வலமாம்
வளர்பிறை யென்றே மதி."

அவ்வண்ணமியங்காது பிசகில், உபசாந்தம்

அகஸ்தியர்.

"தெளிகதிர்சேய் மூன்றடியாந் தெற்குமந்தன்
செம்பொன்மூன் றடிமேற்குத் திங்கள் வெள்ளி
இளகியநா லடிவடக்குப் புந்திமுன்போ
லிரட்டையனு கிழக்கிரவி."

உ

ஓம்.

பொதுப்பிரசங்கம்.

ஓம்! நிஷ்காமியார்த்தமா யெழுதிய சத்சம்பாஷிணியை வாசிக்கவும் கேட்கவும் அவகாசங் கிடைக்கப் பெற்றிருந்த விசாரணைப் புருஷோத்தமர்காள்!

மானவசரீர மெடுப்பதருமை. அஃதுள்

வள்ளலார் சாஸ்திரம்.

"கங்கையிற் படிந்திட் டாலுங் கடவுளைப் பூசித் தாலும்
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கி னாலும்
சங்கையில் லாத ஞான தத்துவ முணர்ந்திட் டாலும்
பொங்குறு புலால் புசிப்போன் போய்நர கடைவ னன்றே"

ஜீவகாருண்யம், பக்தி, பாசவைராக்யம் இவைகள் வாய்ப்பது துர்லபம். ஒருகால் வாய்க்கினும்

கைவல்லியம்.

"இன்ன வாறந்தப் பிரம்மத்தை யறிவிக்கு
மிலக்கணத் தால்வேதஞ்
சொன்ன ஞானமும் விசாரத்தால் வருமன்றிச்
சுருதிநூல் படித்தாலு
மன்ன தானங்க டவங்கண்மந் திரங்களா
சாரங்கள் யாகங்க

ளென்னதான் செயினுந் தன்னைத்தா னறிகின்ற
திவைகளால் வாராதே."

"இந்த ஞானந்தான் வருவதெப் படியெனி
லிடைவிடா விசாரத்தால்
வந்தடைந்திடும் விசாரந்தா னேதெனின்
மனுதியாஞ் சரீரத்தி
லிந்த நானெவன் சித்தெது சடமெது
விரண்டுமொன் றுக்கூடும்
பந்த மேதுவீ டேதென வுசாவுதல்
பகர்விசா ரமதாகும்."

என்ற துவிதமயக்கற்றுத் தத்-துவம்-அசி மஹாவாக்கிய அத்வைத விசாரணையாளராவது அபூர்வம்.

அத்தகைய விசாரணைக்குப் பாஹ்யசன்னியாசந் தான் உரித்தானதென்று சொல்லவிடமில்லை எனினும்,

"சிந்தை பயமிலச்சை சீல மருவருப்பு
வந்துவிடுஞ் சாந்திகுல மாசார ;—மிந்தவழி
யெட்டுஞ் சிவயோகிக் கில்லையென மாமறைகள்
தட்டும் பெருமுரசந் தான்"

என்பதே யதார்த்த மென்கினும் ஆகாமிய சஞ்சித கருமங்களின்றிப் பிராரத்துவத்தை மட்டிலும் அனுப விக்க வேண்டியிருப்பதால்,

வேதாந்த சூளாமணி.

"உலகிறந்த சீவன்முத்த னுகர்வினைவா சனையா
லுண்பொருள்கள் பலகவர்ந்து மவுனமே யுற்றும்
பலதிறங்கண் மொழிந்துமுப தேசநெறி புரிந்தும்
பரிதவித்து மகிழ்ந்துமிக வேடங்கள் புனைந்தும்

கலைதுறந்து முடையுடுத்துங் கல்விபல பயின்றுங்
கல்லாது மாதர்மயக் கிடையுற்று மிவ்வா
றளவிறந்த நடையுறினு மருள்விளையாட் டென்றே
யவன்றனைநம் புவர்வைய மொருசிறிது முருமல்".

என்பவும் இவ்வுலகிற் சிறந்த ஜீவன் முத்தர்கள் வியவகாரம் அனந்த விதமாயிருக்கும்.

உபதேசமும் வெவ்வேறு விதமாயிருக்கும். அவற்றுள், சமரசன் - சாங்குசித்தன் - சர்வத்தியாகி என்னும் பேதத்தால் விவேகம்-சாங்கியம்-யோகமென மூவகையாய சாஸ்திரங்களுள், சமரசனுக்கு நீயது வென்றுபதேசித்துச் சமரச நூலையும், சாங்கு சித்த னுக்கு நான் நீ அது என்றுபதேசித்து சாங்கிய நூலையும், சர்வத்தியாகிக்கு அது நீயாஞய் என்றுபதேசித்து யோக சாஸ்திரத்தையும் கொடுக்கவேண்டியது குருவின் கடமை. இவ்வாறின்றி மாறுபாடான உபதேசமும் மாறுபாடான சாஸ்திரமும் அளிப்பரேல் அவர் ஆசாரியரன்று. அவர்பா லுபதேசம் பெற்றவனுக்கும் அசம்பாவனை போகாது. அனுபவமும் சித்திக்காது.

வள்ளலார்.

" நிதம்பமிலாப் பெண்ணு நிகழலியுங் கூடி
யிதம்பெற்ற வின்பசுக மேய்க்குஞ்—சிதம்பற்ற
நற்குணமி லாசானு ஞானமிலாச் சீடனுமாய்த்
தொக்கிவரு மின்ப சுகம்"

என்பது போலும்.

இவற்றுள் மூவதிகாரிகளையும் எப்படித் தெரிந்து கொள்வதெனின் :

சமரசன் ஈசுவரனை உபாசிப்பவனாயும் தேகாதிபிரபஞ்சத்தி லாசையற்றவனாயும் சற்கிருத்தியம் செய்து கொண்டிருப்பவன். சாங்குசித்தன் வஸ்துவை யதார்த்தமாய் அறிந்த மகத்துக்களை உபாசிப்பவனாயும் தேகாதி பிரபஞ்சத்தி லாசையற்றுச் சற்கிருத்தியமும் விட்டு மோக்ஷதாகியா யிருப்பன். சர்வத்தியாகி ஞான சொரூபமாய் விளங்குகிற சற்குருவிற்குச் சிஷ்ருஷை செய்து தேகாதி பிரபஞ்சத்தி லாசையற்று இருவகைக் கிருத்தியத்திலும் உபரதியடைந்து நித்திரை மயக்க முடையவன் போலிருப்பன்.

இத்தகைய வதிகாரம் வாய்ப்பதற்குச் சாதுசங்கப் பிரியனாதல் வேண்டும். அவற்றால் சோபானங்களேறி தத்தெரிசனையான பின்னரும்

கைவல்லியம்.

"பொறுமையாற் பிராரத் தத்தைப் புசிக்குநாட் செய்த கர்மம்
மறுமையிற் றொடர்ந்திடாமல் மாண்டுபோம் வழியேதென்றால்
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வார்
அறிவுளோ ரறிந்து பூசித் தறமெலாங் கைக்கொள் வாரே."

சிவானந்த போதம்.

"பெரியோரைப் பித்தரென வுலகத் தோர்கள்
பேசுவதே னிகழ்வதென்ன பிரித்துக் கேளாய்
திரிவார்க ளிச்சைவழி ஜகத்தோர் பார்த்துத்
தீவினையும் நல்வினையும் திரட்டிக் கொள்வார்

சரியாச்சென் றிருவினையு மொழித்துப் போட்டு
சச்சிதா னந்தமென்ற பதத்திற் சார்ந்து
துரியாதீ தப்பொருளைப் பெற்று மந்தச்
சுயஞ்சோதி யாகியே சுகமுற் றுரே."

என்றிருப்பதாற் புகழப்படவும் மிகழப்படவும் நேரும். நன்மை தீமையினுல்தான் ஜனனம் எடுக்க வேண்டி நேருகிறது. பாபகர்மத்தினு லெடுக்குஞ் ஜனனம் இருப்பு விலங்கு அணிந்ததற்கும் புண்ணிய கர்மத்தினு லெடுக்குஞ் ஜனனம் தங்கவிலங்கு அணிந்ததற்குஞ் சமானமாகிலும், இரண்டும் விலங்குதானே ? அவ்விருவகை விலங்கு மொழிவதற்கே சாதுவைச் சிலர் புகழ்வதும் சிலர் இகழ்வதும் தொன்று தொட்டு நடந்து வருகிறது. நேரினும்,

வள்ளலார்.

" உன்னை யொருவ னுயர்சாமி யென்றுரைத்தா
லென்ன மகிழ்ச்சியங்கே யெய்தினுய்—பின்னெருவன்
பாவிபசு வென்றுற் பதைபதைப்பா யாகையினுற்
சீவனல்ல நீயே சிவம்."

ஒழிவிலொடுக்கம்.

" நாயேறி வீழ்ந்தென் னைடாத்துகிலென் ஞானிக்குப்
பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென்—றேயார்
பெருமை சிறுமையில்லை பின்னுமுன்னு மில்லை
வரைவற்று வேண்டிய செய்வார்."

என்றபடி விவகாரசிந்தையற்று கிருதகிருத்தியராவது மஹா சிலாக்கியம், மஹா சிலாக்கியம்.

வள்ளலார்.

"உற்ற சரிதையனுக் கோரா யிரம்பிறப்பு
மற்றையர்க்கு நூறுகும் வன்பிறப்பு—முற்றுகின்ற
யோகிக் கொருபிறப்பு வுண்மைச் சிவஞான
மோகிக்கோ விப்பிறப்பின் முத்தி.

என்பதா விப்பிறவியின் கண்ணேயே ஐக்கியமுக்தி யடைய,

"சரிதையிலே யீசன் சடவடிவாய் நின்றான்
கிரியையிலே மந்திரத்திற் கிட்டி—யருகிருந்தா
னூனமிலா யோகத்தி லுள்ளொளியா யேநின்றான்
ஞானமதி னுனுயி னன்."

வேதாந்த சூளாமணி.

"நானுரிப் பவமெனக்கு வந்தவா றெங்கோ
னசிப்பதெவ ராலெனவாய்ந் தலர்கரங்கொண் டேகி"

மஹாநுபாவ ஸ்ரீ சற்குருபகவான் திருக்காநுக்கிரஹ மகாசமுகத்தில் சிஷ்யரீதியாநுசாரமாக இரு கரங்களையுங் கூப்பி வணங்கிப் பரீக்ஷிப்பதற்கெலா மிணங்கிச் சதுர்வகைப் பணிவிடைகளால் உல்லாசஞ் செய்வித்து மதுரிதவாக்கால் 'என்னவேண்டும் கேள்.' என்ற ஆக்ஞாவா லுய்விக்கப் பரிபாககால சமீபத்தைக் கண்வைத்து தவராஜ சிங்கத்தின் திருவிழி நோக்கியதும் சர்வாங்க நமஸ்காரஞ் சமர்ப்பித்து,

"कथं ज्ञानमवाप्नोति कथं मुक्तिर्भविष्यति ॥
वैराग्यच कथं प्राप्तमेतद्ब्रूहि मम प्रभो ॥"

கதம் ஞானமவாப்னோதி கதம் முக்திர் பவிஷ்யதி ||
வைராக்யம் சகதம் ப்ராப்த மேதத்ப்ரூஹி மம பிரபோ ||

'ஹே பிரபு! ஞானத்தை எவ்வண்ணம் அடைவது? மோக்ஷம் எவ்வண்ணம் சித்திப்பது? இவற்றிற்கு வைராக்யம் எவ்வண்ணம் பிராப்தி யாவது?' என பிரசன்னே செய்ய, அக்கால் ஞானகலா பிரகாசித ஸ்ரீ தக்ஷிணாமூர்த்த தேசிககோலம் ஒருரையால் வாய்க்கு முண்மையைச் சொல்லாமல்சொல்லிய தீக்ஷோபதேசத்தால் தன்னைத் தானறிந்து 'ஓம்!' என்ற அவ்வநுபவம் நமக்கும் வரும்படி உத்கிருஷ்ட தீட்சையை ஸ்ரீ சத்குருநாதன் அநுக்ரகிக்கவும், அத்திருக்காநுபவம் பாவனு - அபாவனுவாகி, சுவாநுபவமும் சித்தித்துச் சமாதி கைவந்து ஜீவன் முக்தராய் சஞ்சரித்து விதேகமுக்தராய் ஐக்கிய சாக்ஷாத்காரமாக நிர்மாணகாயர் ஆசி நம்மீது பரோக்ஷிக்கவுங் கடவது. இச்சீர்த்திபெற வையகத்துள்ளார் யாவரும் தீவிரதரபக்குவமுள்ளவராய்ச் சாதன சதுஷ்டய சம்பன்னராய்ச், சத்தாசிரியர் சேவை பெற்றவராய்ப் பிரஹ்மவித்தைக்குரிய ஓர் மொழி பெற்றவராய், சாலோக - சாமீப சாரூப - சாயுச்சியமெனும் நான்கு பதவிக்கும் மேலான ஐக்கியமுக்தியிற் கலப்புற்றவராய்ச், சர்வ சாட்சி சைதன்ய அறிவானந்த சகிதராகப், பிரஹ்மப் பிரகாசத்தை வந்தனைசெய்து, சற்குரு நாதனைச் சிந்தனை செய்து ஸ்ரீ ஸத்ஸம்பாஷிணி சாஸ்திர முதற்பாகத்தைப் பூர்த்தி செய்குதும். சுபம்! சுபம்!! சுபம்!!!

ததாஸ்து! சற்குருநாத சாக்ஷியே நம:

வாழி.

கட்டளைக்கலிப்பா.

வாழி யேசன காதிம ஹாமுனி
வள்ள லானவி யாசரின் கோத்திரம்
வாழி யேகுரு சங்கரர் மூலரும்
மன்ன ஞஞ்சட கோபரின் வர்க்கமும்
வாழி யேதிருத் தாயுமா னூர்துதி
மற்றும் நால்வரி னுமமும் வாசகம்.
வாழி யேமஹா வாக்கிய சூத்திரம்
மாத வர்முனி வாசமும் வாழியே.

ஓம் தத்ஸத்! ஶாந்தி! ஶாந்தி!! ஶாந்தி!!!

ஸ்ரீ ஸத்ஸம்பாஷிணி முற்றும்.

"ओं. भद्रं कर्णेभि शृणुयाम देवाः ।
भद्रं पश्येमाक्षभिर्यजत्राः स्थिरैरंगै
स्तुष्टुवाँ सस्तनूभिः ।
व्यशेम देवहितं यदायुः ॥
ओं शान्तिः शान्तिः शान्तिः ॥"

"ஓம். பத்ரம்கர்ணேபி ச்ருணுயாம தேவா ।
பத்ரம் பச்யே மாக்ஷபிர்யஜத்ரா ஸ்திரைரங்கை
ஸ்துஷ்டுவாம் சஸ்தநூபி । வ்யசேம தேவஹிதம் யதாயு ||
ஓம் ஶாந்தி : ஶாந்தி : ஶாந்தி : ||

"Om. Oh Gods! may we, with our ears, hear what is auspicious; O ye! fit to be worshipped, may we, with our eyes, see what is auspicious; may we enjoy the life allotted to us by the Gods, offering our praise with our bodies strong of limb.

Om peace! peace!! peace!!!"

ஓம். ஓ தேவர்களே! நாங்கள் எங்கள் காதுகளால் சுபகரமானதைக் கேட்கவும்; ஓ வணங்கத்தக்கவர்களே! சுபகரமானதை எங்கள் கண்களால் பார்க்கவும்; அவயவ பலமுள்ள தேகத்தோடு உங்களைப் போற்றிக்கொண்டு தேவர்களால் எங்களுக்கு அநுக்கிரகிக்கப்பட்ட வாழ்நாட்களை சுகமாய்க் கழிக்கவும் கிருபை செய்யுங்கள். ஓம் ஶாந்தி! ஶாந்தி!! ஶாந்தி!!!

ஓம்.

ஸ்ரீ சற்குரு மயம்.

ஸ்ரீ ஸத்ஸம்பாஷிணி நூல் புஸ்தகவடிவமாகியதற்கு
சஹாயஸ்தர்களாயிருந்தவர்களின்
அபிதேயங்கள்.

நாமமும் இருப்பிடமும்.

ஸ்ரீமான். o T. N. பாலகிருஷ்ணநாயுடு, திருக்காந்தல், நீலகிரி.
,, o R. வெங்கடாசலமுதலியார், அக்கிராரம் ,,
,, o தி. ம. முத்துசாமிபிள்ளை, கடைவீதி, உதகமண்டல
,, o தி. ந. கண்ணுசாமிபிள்ளை, ,, ,, [ம்
,, o ப. பொன்னுசாமிபிள்ளை, ,, ,,
,, o தி. கு. கோவிந்தசாமிபிள்ளை, திருக்காந்தல், நீலகிரி
,, o தி. ரா. நாராயணசாமிபண்டிதர், குன்னூர், ,,
,, o S. R. பட்டுசாமிநாய்க், உதகமண்டலம், ,,
,, o T. மஹாதேவ கவுடர், கோடப்பன்மந்த், ,,
,, P. சென்னகிருஷ்ணம்பிள்ளை, அக்கிராரம், ,,
,, o C. சுப்பிரமண்யர், மஞ்சனைகோரை, ,,
,, o K. S. பொன்னுசாமிமுதலியார், அக்கிராரம், ,,
,, o E. எல்லப்பர், எள்ளனள்ளி, ,,
,, o A. கிருஷ்ணசாமிசெட்டியார், உதகமண்டலம், ,,
,, G. மதுரைநாயகம்பிள்ளை, திருக்காந்தல், ,,
,, o Y. ஆறுமுகம்பிள்ளை, உதகமண்டலம், ,,
,, டி. கிருஷ்ணராவ், திருக்காந்தல், ,,
,, A. திம்மையா, நீத்தி, ,,

ஸ்ரீமான். B. சுந்தரம்பிள்ளை, திருக்காந்தல், நீலகிரி.
,, K. M. பாலக்குமாருபிள்ளை, ஸ்நோடன், ,,
,, M. V. சின்னசாமிபிள்ளை, உதகமண்டலம், ,,
,, o பூ. சின்னசாமிபிள்ளை, லவ்டேல், ,,
,, o S. ஜகநாதம், திருக்காந்தல், ,,
,, o V. I. முனிசாமிபிள்ளை, வெட்டுமலை, ,,
,, o E. மல்லையாசாமி, உதகமண்டலம், ,,
,, S. மருதைநாயகம்பிள்ளை, அக்டர்லோன்வாலி ,,
,, N. மாணிக்கம்பிள்ளை, திருக்காந்தல், ,,
,, நா. ரங்கேசராவ், ,, ,,
,, o S. R. துரைசாமிமுதலியார், சென்னை.
,, A. முருகேசம் பிள்ளை, ,,
,, T. M. பஞ்சநதம்பிள்ளை, திரிசிரபுரம்.
,, o ச. மு. நாராயணசாமிபிள்ளை, சூளை, பெங்களூர்.
,, S. ஞானப்பிரகாசம் உபாத்தியாயர், தண்டு, ,,
,, B. ஸ்ரீனிவாசம், ஊப்பள்ளி.
,, ம. முருகேசப்பண்டிதர், திருக்காந்தல், நீலகிரி.
,, பொ. இரங்கசாமிமேஸ்திரி, வண்ணையம்பதி, திரு
,, M. பொன்னுசாமிபிள்ளை, சென்னை. [க்காந்தல்
,, M. சாலிவாஹனர், ,,
,, சி. குழந்தைவேலர், உதகமண்டலம், நீலகிரி.
,, மு. பெ. ஏகாம்பரம், திருக்காந்தல், ,,
,, வே. மு. ஆண்டியப்பர், ,, ,,
,, மு. ஆ. முத்துசாமிபிள்ளை, சென்னை.
,, மு. ஆ. உலகநாதம்பிள்ளை, ,,

---

o நீலகிரி, உதகமண்டலம், திருக்காந்தல், ஸ்ரீ தக்ஷணாமூர்த்தி கார் மடாலய ஓம் அசலபீட, உ. வி. சபை - தெய்வஸ்தான பார்வை அதிகாரிகள்.

உ

ஓம்.

பிழை திருத்தமும் சிறிது விளக்கமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம் அல்லது விளக்கம்.
vii	18	ஸ்ரீ சுவாமீ ஓம்ப்ர காஸ்நாத்	ஸ்ரீ ஓம்பிரகாச சுவாமிகளென்பார்
8	17	யூடடி	யூட்டி
குறிப்பு 14		உபோத்காதம் = தன் கருத்து சித்தியாகவேண்டி அதற்காதாரமாக உபாயமான வசனங்களை இயம்பல் உபோத்காதமெனப்படும்.	
,,	2	இலௌகீக தெய்வீக வைதீக	இலௌகிக தெய்விக வைதிக
15	2	பூர்ணமதச்யதே	பூர்ணமுதச்யதே
,,	3,4	(பிரஹ்மந்தான்)	பிரஹ்மந்தான்
27	21	பூபூமரம்	பூப்பூமரம்
29	6	ஆச்சிரமம்	ஆச்சிர்மம்
குறிப்பு 31	2	விபரியமும்	விபர்யயமும்
32	7	போதும்	போது
,,	8	யாதென்று	யாதொன்று
37	1	சத்ய,க்ஞாணம்	சத்யக்ஞானம்
,,	2	கடம்	ஜீவன்
43	12	செயல்	சொல்
குறிப்பு 44		சலம் = இயம்பும்மொழிக்குக் கேட்போன் வேறுபொருள்படுத்திப் பழித்தல்.	
47	8	வீடறியேன்நான்	வீடறிவேநான். என்றும்பாடலாம்.
52	8	அவற்ரு	ஆதுலா
60	,,	ஸ்நாநுஷ்டானம்	ஸ்நாநாநுஷ்டானம்.

பக்கம்.		வரி.	பிழை.	திருத்தம் அல்லது விளக்கம்.
	66	25	படுகின்றன	படுகின்றது
	84	8	மதியந்தர்களாகிய	மதியந்தகர்களாகிய
குறிப்பு	88	14	ஆாதிப்	ஆராதிப்
	109	10	கமலனே நேயக்	கமல நேயக்
	113	2	திரிசியமாகிய	திருசியமாகிய
	117	22	பிரமாண	பரிமாண
	122	24	"தத்துவநிஜானுபோகசாரம்" "தாதை யின்பால்"	
	124	21	ஒன்பதில்	ஒன்பதியல்
குறிப்பு	140	14	என்று ஹக்சலி என்னும் சாஸ்திரியா ரியம்புகிறார்.	
	142	23	என்பதற்கு	என்பதற்கு அத்தாட்சி
	149	6		ஸ்ரீ விசாரசாகரம்
	152	14	சத்தால்	சத்தாம்
	163	6	என்பவும்	என
	,,	,,	வுலகிற் சிறந்த	வுலகிறந்த
	164	,,	டிருப்பவன்	டிருப்பன்
	165	,,	மிகழப்படவும்	இகழப்படவும்
	166	2	'பக்த புனிதர்காள்' என்று ஆரம்பிக்கவும்.	
	,,	12	என்பதால் ஞானத்தால் தானே தானுக.	

பக்கம்.	விளக்கம்.
73	குறிப்பு :—பிராணயாமம்=பூரக-ரேசக - கும்பகஞ் செய்தல். ஒவ்வொருவரும் கையாடில் ஸ்தூலதேகம் சுத்தியாவதுடன் புத்தியும் புஷ்டியாகும். அஃதுடன் சப்தாங்கங்களும் சேர்க்கப்பெற்றல் முத்தரேயாவர். அவையாவன.—
	இயமம்=ஜீவவதை செய்யாமை, சத்தியம், திருடாமை, காமாதி நிக்கிரகம், அல்லது இந்திரிய நிக்கிரகம், பரிசு வாங்காமை.
	நியமம்=சுத்தம், திருப்தி அல்லது சந்தோஷம், தபசு, விசாரணை, ஈசுவரவிசுவாசம்.
	ஆசனம்=சுகமாய் வீற்றிருக்கும் நிலை.
	பிரத்தியாகாரம்=வெளி வியவகாரத்திற் செல்லாது மனதை உள்முகமாக்கல்.
	தாரணை=அம்மனதை அசையாது நிறுத்தல்.
	தியானம்=நின்றமனதுடன் தன்னைத்தேடல்.
	சமாதி=மனதிற்கும் ஜீவனுக்கும் மேலானதும், எல்லாமானதும், அல்லாததும், அவஸ்தாரகிதமானதும், சுகதுக்கமற்றதுமான ஆத்மாவாக ஜ்வலித்தல் ஓம்!

56106

சிலவிடங்களில் ஆங்கிலேயத்திலும் ஹிந்தியிலும் சம்ஸ்கிருதத்திலும் மேற்கோள் காட்டியிருப்பது "முன்னோர் மொழி பொருளே யன்றி யவர்மொழியும் பொன்னே போற் போற்றுவ" மென்பதற்காய் அவரவர் பாஷாவாக்கையே தீட்டியுளதென்பாம்.

நந் தாய்நாட்டிலுள்ள மஹருஷிகள் சுருதிப்பிரமாணங்களே கணக்கிலடங்காதவைகளாயிருக்க அச்ருதியையே எடுத்தாளாது, அன்னியநாட்டார் உதாரணத்தையும் எடுத்தியம்புவது சிலாக்கியமன்றெனில், அற்றன்று. தன் மதத்தைத் தானே புகழ்வது சகஜம். அன்னிய தேசத்தவரிலும் கலாவிற்பன்னர்களாயிருப்பவர்கள் பக்ஷபாத ரஹிதராய், சம்மதித்து ஏற்றும் கூற்றே உத்கிருஷ்டமென்பாம்.

卍